www.padippakam.com

# சர்வதேச சோசலிசப் போராளியின் நினைவுக் குறிப்பு



## ரவீந்திரநாதன் செந்தில்ரவி

(1969 –2007)

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

**மனித வரலாற்றில்** உயர்ந்த சமூக மாற்றத்திற்காக இறுதி மூச்சுவரையும் போராடியவர்களின் வரலாற்றை மனிதகுலம் எப்போதும் பாதுகாத்து வைத்திருக்கும். சமூகத்தின் எதிர்காலம் பற்றிய இந்த மனிதர்களின் ஆழ்ந்த புரட்சிகர சிந்தனை, அதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த கோட்பாடு, ஒரு சமத்துவ உலகத்திற்கான அவர்களது விட்டுக்கொடுப்பற்ற போராட்டம் என்பன, அவர்களது இறப்பிற்குப் பின்பும் அவர்களை மேலும் உயிர்வாழ வைக்கின்றது.

தோழர் செந்தில் காலமாகி இந்த மாதத்துடன் ஒரு வருடம் ஆகின்றது. அவர் பிறந்த 20ம் நூற்றாண்டிலும், அவர் எம்மை விட்டுப் பிரிந்த 21ம் நூற்றாண்டிலும் நிகழ்ந்த முக்கியமான அரசியல் நிகழ்வுகளையும், அதில் அவர் வகித்த பாத்திரத்தையும் இந்த மலரினூடாக நாம் முடிந்த மட்டிலும் வெளிக்கொண்டுவர முயற்சித்துள்ளோம்.

எமது இந்த முயற்சியானது, வெறுமனே அவரைப் பற்றிய ஞாபகத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாது, எதிர்கால இளம் சந்ததியானது அவரது போராட்ட அனுபவங்களையும், பாடங்களையும் தனது முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதினாலாகும். வரலாறும், உயர்ந்த கலாச்சாரமும் இப்படித்தான் பரம்பரை பரம்பரையாக கடத்தப்படுகின்றது. அதற்கு இந்த மலர் நிச்சயமாக ஒரு பங்களிப்பை வழங்கும்.

கடந்த 20ம் நூற்றாண்டில் உலக வளங்களை கொள்ளையடிப்பதற்காக, உலகத்தை பங்கீடு செய்வதற்கான உலக ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டாபோட்டி, இரண்டு உலக யுத்தங்களையும் மேலும் பல கிளை யுத்தங்களையும் விளைவாக்கி, மனித குலத்தை படு நாசத்திற்குள் தள்ளியிருக்கின்றது. மேலும், மேலும் அது தள்ளியும் கொண்டிருக்கின்றது.

21 ம் நூற்றாண்டானது ஆப்கானிஸ்தான், ஈராக் என அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு யுத்தங்களுடன் ஆரம்பித்துள்ளது. அடுத்து அது ஈரானை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. 60 வருடங்களுக்கு முன்பு ட்ரொட்ஸ்கி குறிப்பட்டது போன்று, சோசலிசமா அல்லது காட்டுமிராண்டித்தனமா என்ற கேள்வியானது இன்று மனித குலத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகிவிட்டது. இக் கேள்விக்கு, செந்திலின் விடை சோசலிசத்துக்கான போராட்டமே என்பதாகும்.

நாம் வாழும் சமூகம் வர்க்கங்களாக பிளவுண்டுள்ளதை மார்க்சிய விளக்கத்திலிருந்து விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொண்ட செந்தில், சமூகத்தின் செல்வத்தை ஒரு



படிப்பகம்

www.padippakam.com

விரல்விட்டு எண்ணக்கூடிய முதலாளித்துவ வர்க்கம் ஏகபோகமாக கொண்டிருப்பதை இல்லாது ஒழித்து, மனித சமுதாயத்தின் பெரும்பகுதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்.

இந்த தீர்க்கமான கேள்வியைத் தான் செந்தில் இறக்கும்வரையில் தனது நெஞ்சில் ஆழப் பதித்து இருந்ததோடு, இந்தக் காட்டுமிராண்டி நிலையில் இருந்து சமூகத்தை முற்று முழுதாக விடுவித்து, ஒரு ஏற்றத் தாழ்வில்லாத, சுரண்டல் இல்லாத, யுத்தமில்லாத, சமத்துவ உலகத்தை உருவாக்க முடியும் என்பதில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கையை கொண்டிருந்தார்.

இந்தப் பாரிய கடமையை செய்வதற்கு சர்வதேச தொழிலாள வர்க்கமே சோசலிஷப் புரட்சிக்கு தலைமை தாங்கும் சக்தி என்பதனை செந்தில் விளங்கிக் கொண்டதோடு மட்டும் தன்னை நிறுத்திக் கொள்ளாமல், அதனது கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் இணைந்து அதற்கான போராட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்தார்.

தொழிலாள வர்க்கம் தன்னுடைய சொந்தக் கட்சியை அமைத்துக் கொண்டால் ஒழிய, முதலாளி வர்க்கத்திற்கு சவக்குழி தோண்டுபவன் மற்றும் புதிய சமூகத்தை நிர்மாணிப்பவன் என்ற வரலாற்றுக் கடமையை அதனால் நிறைவேற்ற முடியாது.

இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கு செந்தில் வரலாற்றில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகளைக் கற்றுக் கொள்வதிலும், அந்த விளக்கத்திலிருந்து தொழிலாள வர்க்கத்திற்கு தலைமை கொடுப்பதற்கு மிகவும் உறுதியாக இருந்தார் என்பதனையும், இந்த மலரின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளோம்.

நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியாக இருந்த லங்கா சமாசமாஜக் கட்சி, தான் 1935 களில் இருந்து எந்த வர்க்கத்திற்கு எதிராக கொள்கைப் பிடிப்பான போராட்டத்தை முன்னெடுத்ததோ, இறுதியில் அவ் வர்க்கத்துடன் கூட்டுக்குப் போனது. 1964ல் லங்கா சமாசமாஜக் கட்சி, சிறிமா பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ தேசிய அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டதானது, அது போராடிப் பாதுகாத்த தமிழ் - சிங்கள மற்றும் முஸ்லிம் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்திற்கு வேட்டு வைத்தது.

இந்தப் பாரிய காட்டிக்கொடுப்பின் விளைவில் இருந்தே, இலங்கையில் இனவாத யுத்தத்தின் அடிப்படை வேர்கள் வேகமாக வளரத் தொடங்கின. இலங்கையில் பிரித்தானிய காலனித்துவத்திற்கு எதிரான எந்தவொரு போராட்டத்தையும் மேற்கொண்டிராத, அதன் அடிவருடிகளாக இருந்த இலங்கை முதலாளி வர்க்கம், ''சுதந்திரம்'' என்பதனை 1948 ல் போலியாக பெற்றுக் கொண்டதிலிருந்து இன்று 60 ஆண்டுகளைக் கடந்தபோதும், அது தீர்க்கப்படாத ஜனநாயகக் கடமைகளை தீர்க்க இலாயக்கற்றிருப்பதோடு, அது தொழிலாள வர்க்க - கிராமப்புற இளைஞர்களை யுத்தத்திற்கு துப்பாக்கிக் குண்டுகளாக மாற்றிக் கொண்டிருக்கின்றது.

லங்கா சமாசமாஜக் கட்சியின் இந்த காட்டிக் கொடுப்புக்கு நேரடியாக விலை கொடுத்த இளம் பரம்பரையைச் சேர்ந்த செந்தில், இந்தக் காட்டிக் கொடுப்பிற்கான காரணத்தை



படிப்பகம்

www.padippakam.com

புறநிலையாக விளங்கிக் கொண்டு, இலங்கையிலும், அதற்கும் அப்பால் இந்திய உப கண்டத்திலும் ஒரு புரட்சிகர சோசலிச முன்னோக்கை கட்டியெழுப்பி, முதலாளித்துவ அமைப்பு முறையை தூக்கி வீசுவது மிகவும் அவசியமானது எனக் கருதினார்.

ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டில் காலூன்றிக்கொண்ட செந்தில், தொழிலாள வர்க்கம் சமுதாயத்தில் ஒரே புரட்சிகரமான தலைமை சக்தியாக இருந்து வருகிறது என வலியுறுத்தியதோடு, முதலாளித்துவத்தில் இருந்தும் அதன் சகல அரசியல் முகவர்களிடம் இருந்தும் தொழிலாள வர்க்கம் சுயாதீனமடைவதற்காக சமரசமற்றுப் போராடினார்.

சகலவிதமான தேசியவாத முன்னோக்கும் உலகத் தொழிலாள வர்க்கத்தை துண்டாடும் பிற்போக்கு ஆயுதம் என்பதை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொண்ட செந்தில், தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச முன்னோக்கிற்காக அவர் நடத்திய போராட்டத்தின் படிப்பினைகள், சமூகப் பிரச்சினைகளுக்கு விடைதேடி புரட்சிகர அரசியலை நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கும் இளம் தலைமுறைக்கு மிகச் சிறந்த முக்கியத்துவத்தையும், முன்னுதாரணத்தையும் கொடுக்கும்.

2002 ல் பிரான்சில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், பிரெஞ்சுத் தொழிலாள வர்க்கத்திற்கு நான்காம் அகிலத்தின் முன்னோக்கை கொண்டு செல்வதற்கு அனைத்துலகக் குழுவின் தோழர்களுடன் இணைந்து செந்தில் நடாத்திய போராட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த நேரத்தில், அவர் தனது தோழர்களுக்கு எழுதிய கடிதத்தையும், தொழிலாளர் பாதை ஆசிரியராக இருந்த காலம்சென்ற தோழர் இராஜேந்திரன் நினைவாக எழுதிய கவிதையையும் இந்த மலரில் பெருமையுடன் வெளியிடுகின்றோம். இவை, அவரது புறநிலையான, விஞ்ஞான பூர்வமான பார்வையை எடுத்துக் காட்டும்.

ஆகவே, இந்த நினைவு மலரானது சிறு பராயத்திலிருந்து இறக்கும் வரைக்குமான செந்திலின் வரலாற்றை, உலக சோசலிசப் புரட்சிக்கான அவரது உயர்ந்த போராட்டத்தை சிறப்பாக வெளிக் கொண்டு வருகின்றது.

*அதியன்*
*14-02-2008*



படிப்பகம்

www.padippakam.com

# செந்தில் பிரான்சின் அரசியல் நிலைமை தொடர்பாக 2002ல் கட்சித் தோழர்களுக்கு விடுத்த மடல்

அன்புடன் தோழர்களுக்கு மேதின வாழ்த்துகள்!!

பிரான்சின் ஜனாதிபதித் தேர்தல் நிகழ்வுகளை குறிப்பாக உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) மூலமும் வேறு பல வழிகளிலும் அறிந்திருப்பீர்கள். எனினும் அவற்றின் பாடங்களை நாம் உள்ளீர்த்துக்கொள்வது இன்று மிகவும் அவசியமாக இருக்கின்றது. ஏற்கனவே பல தோழர்கள் இதன் முக்கியத்துவம் குறித்து தமது கருத்துக்களை தெரியப்படுத்தியிருந்தனர். இதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் கீழே சிறியதோர் குறிப்புரை.

2002 பிரான்சின் தேர்தலும் அதில் அனைத்துலகக் குழுவின் தலையீடும் எமக்கு பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்பினையை தந்துள்ளது. பிரான்சில் நடந்த ஜனதிபதித் தேர்தல் வழமைபோல் இரண்டு சுற்று வாக்கெடுப்பாக நடந்தது. இந்த வழமையான முறைதான் இம்முறை கோளாறாக இருந்தது. முதல் சுற்றில் வலதுசாரி கோலிச RPR கட்சி வேட்பாளர் ஜாக் சிராக்கும், பாசிச FN (தேசிய முன்னணி) வேட்பாளர் ஜோன் மரி லூப்பெனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனால், சோசலிசக் கட்சியின் வேட்பாளர் லியோனல் ஜொஸ்பன் மூன்றாவது இடத்தை பெற்றதுடன் இரண்டாவது சுற்றிற்கு தகுதி பெறாமல் வெளியேற்றப்பட்டார். இரண்டாம் சுற்றில் அதிவலதுசாரி லூப்பெனுக்கு எதிராக, பாசிச அபாயம் என்பதன் பேரில், சிராக்கால் இறுதியில் 82 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை களவாடிக் கொள்ள முடிந்தது. இதற்குப் பெயர் ஜனநாயக முறையிலான தேர்தல். இங்கு அறுபது வீதமான வாக்குகள் இந்நிலையில் வஞ்சிக்கப்பட்ட வாக்காளர்களால் விருப்பமற்று ''நிர்ப்பந்தத்தின் பேரில்'' வழங்கப்பட்டன.

அத்துடன் முதலாளித்துவ ஜனநாயகமும் அதனது விதிமுறைகளும் தொழிலாள வர்க்கத்தினருக்கோ, பரந்துபட்ட மக்களுக்கோ எந்தவிதத்திலும் பயனற்றவையாகவும், மேலும் மேலும் அதிகரித்த விதத்தில் ஆபத்தானவையாகவும் ஆகியுள்ளமை இதன் மூலம் மேலும் அம்பலமாகியுள்ளது. முதலாளித்துவத்தின் அமைப்புக்களிலும் அதன் அரசியலிலும் இருந்து மக்கள் பெரும் அதிருப்தியாளர்களாக விலகுவது இன்னும் ஆழமாகவும் வேகமாகவும் நடைபெறுவதை இங்கு காண்கின்றோம்.

இவ் அர்த்தத்தில் கடந்த அமெரிக்க தேர்தலில் புஷ், ஏமாற்று மற்றும் பொய்களுடன் முதலாளித்துவ நீதிமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பாணியின் இன்னொரு வடிவமாக இது இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து உலகில் இன்று முதலாளித்துவ ஜனநாயகம் என்னும் மூடுதிரை கிழிந்து அதற்குள் சர்வாதிகாரம் அரை நிர்வாணமாக அமர்ந்திருக்கின்றது. வரலாற்றில் முதலாளித்துவத்தின் இயக்கப்போக்கு இன்று இவ்வாறே செல்கின்றது.

பூகோளமயமாக்கலுக்கும் அதன் எதிர்விளைவுகளுக்கும் முதலாளித்துவம் தன்னை தகவமைத்துக்கொண்டு நகர்கின்றது. இது வரலாற்றில் பழைய குளிர் யுத்தகால பவ்வியமான ஜனநாயக வகையறாக்களை எல்லாம் ஓரங்கட்டிவிட்டு, ஆதித்திரட்சிக்



படிப்பகம்

www.padippakam.com

காலத்தில் அதன் நகர்வினை மார்க்ஸ் வருணித்தது போல இன்று அதனது பூகோளமயமாக்கலில் முதலாளித்துவம் அதன் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை இரத்தமும் தசையும் சொட்ட சொட்ட அம்மணமாய் மரண ஓலம் இட்டுக்கொண்டு கொலைவெறியுடன் அலைகின்றது.

பிரான்சின் பெரும்பான்மை மக்கள் இவ்வாறு ஓரவஞ்சகம் செய்யப்பட்டது தவிர்க்கப்பட முடியாததாகவா இருந்தது? என்னும் கேள்வி உடனடியாக எமக்கு முன் எழுகின்றது. இந்நிலையில் தம்மைத்தாமே இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் கட்சியினர் இங்கு என்ன பொறுப்பான பாத்திரம் எடுத்தனர் என்று நாம் பார்ப்போம். இவர்கள் எல்லோருமே அடிப்படையில் பிரான்சின் சாதாரண மக்களின் மூளையில் இயல்பாக உதித்த யோசனை போலவே பாசிச அபாயத்திற்கு 'ஜனநாயக பதிலீடு' என்ற பழைய சந்தர்ப்பவாத சுலோகத்தை முன்னோக்காக வைத்தனர்.

வரலாற்றில் அவர்கள் எப்பொழுதோ வழி தவறிய சந்தர்ப்பவாதிகள் தானே. அவர்கள் உருவங்களையல்ல விம்பங்களை தரிசித்து வந்தவர்கள். அவர்களின் கண்கள் மார்க்சிசக் கற்றைகளினால் உலகினை காண்பவையல்ல. மாறாக, பப்பலோவாத காட்சிவாத புலத்தினால் காண்பவை. எனவே, அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்களது சந்தர்ப்பவாத மூதாதையர்கள் செய்தது போலவே பாசிச அபாயத்திற்கு பதிலீடு என்பதன் பேரில் வலதுசாரி ஆட்சிக்கு வக்காலத்து வாங்கி அவர்கள் தடக்கி வீழ்ந்து கொண்டிருக்கும் பாதாள நரகத்துக்கு பரந்துபட்ட தொழிலாளர் உழைக்கும் மக்களை இழுத்துச் செல்லப் பார்க்கின்றார்கள். நாம் இதற்கு மாறாக எமது அடியினை மிக நிதானமாக பிரான்சில் தொழிலாள வர்க்கத்தினுள் பதித்தோம். பண்பு அளவாக பரிணமிக்கும் முக்கியமான படியாக இது இருந்தது. அவர்களைவிட நூறு மடங்கு சிறிய எண்ணிக்கையில் நாம் இருந்தபோதும் அவர்கள் செங்குத்தாக கீழ்நோக்கி சென்றுகொண்டிருந்தனர். நாம் அவர்களிலிருந்து நூற்றெண்பது பாகை மேல் நோக்கிச் சென்றிருந்தோம்.

ஆம், நாம் வரலாற்றில் திடமாக கால் ஊன்றிச் செல்கின்றோம், அவர்கள் வேகமாக வரலாற்றின் குப்பைத் தொட்டிகளில் வீசப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். நாம் வரலாற்றில் பாசிச அபாயம் எப்படித் தவிர்க்கப்படமுடியும் என்பதனை தெளிவாக விளங்கியிருந்ததுடன், எமது உடனடியான தந்திரோபாய நடவடிக்கையும் தீர்க்கமானதாக விளங்கியது. எமது பிரச்சாரத்தில் நாம் விடுத்த பகிரங்க கடிதத்தில் ஆக்ரோஷமான தேர்தல் புறக்கணிப்பு ஒன்றிற்கு அழைப்புவிட்டோம். இது தொழிலாள வர்க்கம் தனக்கு நிகழும் ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு, அரசியல் நனவுபெறுவதற்கு அதற்கு கல்வியறிவூட்டுதலின் தொடக்கமாக இருந்தது. இதனை மறுத்த அவர்கள் நகைக்கத்தக்க வகையில் சிராக்கிற்கு வாக்களி என்பதை கூறவதற்கு பதிலாக லூப்பெனுக்கு வாக்களிக்காதே எனக் கோரி பரிதவித்து நின்ற தொழிலாளர்களின் முதுகில் அடித்தனர்.

அவர்களின் நோக்கம் முழுவதுமாக வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் தமது நாற்காலிகளை பெற்றுக்கொண்டு முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் வலதுசாரிகளுடன் சகஜீவிதம் செய்வதற்கு எப்படி தொழிலாள வர்க்கத்தின் முதுகில் ஏறி சவாரி செய்யமுடியும் என்பதிலேயே இருந்தது. அதிகாரத்துவத்தின் உயிர் பிழைப்பிற்கு தொழிலாள வர்க்கத்தின் அறியாமை அவசியமாய் இருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

அதனாலேயே அதனை அவர்கள் பேணினர். இதனாலேயே பிரசுரங்களை தொழிலாளர்களுக்கு நாம் விநியோகிக்கச் சென்றபோது எம்மை பாசிச ஆதரவாளர்கள் எனக் கூறி அவமானப்படுத்தி கலைக்க முயன்றனர். ஆனால், மேதின எழுச்சியின் நிலமைகள் அவர்களை இதற்கு அனுமதிக்கவில்லை. மாறாக, எமது பகிரங்கக் கடிதத்தை படித்த நனவுள்ள தொழிலாளர்கள் எமது உலக சோசலிச வலைத்தளத்திற்கு பதில் எழுதியதன் மூலம் அவர்களுக்கு பதிலளித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தினை சரியாக பற்றிக்கொண்ட ஊழலின் சின்னமான கோலிச வலதுசாரி ஜனாதிபதி ஜாக் சிராக் தன் தேர்தல் உரையில், வழமைக்கு மாறாக சற்று இறுமாப்புடனேயே பேசினார். சட்டம் ஒழுங்கினை தனது தலையாய வேலைத்திட்டமாக பீற்றினார். மேலும் குடியரசின் மேன்மை என்பதன் பேரில் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்பதற்கு வினோதமான வரவிலக்கணங்களையும் தந்தார். இவ்வுரை தொழிலாள வர்கத்தின்மீது பிரெஞ்சு முதலாளித்துவம் செய்யப்போகும் தாக்குதல்களுக்கு ஓர் வெளிவரைவாக இருந்தது.

இதற்கு முண்டு கொடுத்து பாதுகாப்பதே இன்று இடதுகள் என அழைக்கப்படும் கட்சிகளின் வேலையாக இருக்கின்றது. இன்று முதலாளித்துவ பூகோளமயமாக்கலுடன் சகல தேசியவாதிகளினதும் வேலைத்திட்டங்கள் காலாவதியாகிப் போனதுடன் அமைப்பு ரீதியில் மேலும் பரந்துபட்ட மக்களிடமிருந்தும் அன்னியமாகி மேலும் வலதுசாரிகளாக அவர்கள் உருப்பெறுகின்றனர். எனினும் இவர்கள் தொழிலாள வர்க்கத்திற்குள் பெரிதும் நஞ்சுபாச்சி வருவதுடன் அதனை பெரும் அறியாமைக்குள்ளும், குழப்பத்தினுள்ளும் கட்டிவைப்பதன் மூலம் இன்று நாள்தோறும் பெரிதும் மதிப்பிழத்து போய்க்கொண்டிருக்கும் முதலாளித்துவத்தின் அழிவு வேலைகளை மூடிமறைப்பதற்கும், அதற்கு எதிராக கிளர்ந்து எழும் தொழிலாளர், இளைஞர்கள் மற்றும் உழைக்கும் மக்களை நிராயுதபாணியாக்குவதிலேயே தமது எஞ்சிய வாழ்நாட்களையும் கழிக்கின்றனர்.

இந்தவகையில், எமது தலையாய கடமையானது, இவர்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினை பாதுகாத்து வளர்த்தெடுப்பதுடன், உடனடியான பிரச்சினைகளை சரியாக அணுகி எமது புரட்சிகர மூலோபாயத்தினை நோக்கிய தந்திரோபாய வேலைகளை அபிவிருத்தி செய்வதென்பது அவசியமாகயுள்ளது. இவ்வாறே பிரான்சின் சம்பவங்களில் நாம் தலையிட்டது சரியான நேரத்தில் முற்றிலும் பொருத்தமான வெற்றிகரமான செயல் ஆகும்.

இங்கு நாம் தேர்தல் புறக்கணிப்புக்கு இங்குள்ள பிரத்தியோகமான நிலமைகளை சரியாக கணிப்பிட்டதிலிருந்து அழைப்புவிட்டோம். இதே போன்ற செயற்பாடுகள் வேறுவேறு இடங்களில் வெவ்வேறு விதமாக இருக்கும். எனினும், இவை இறுதியில் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டங்களில் தலையிட்டு தொழிலாள வர்க்கத்திற்கு முன்னோக்கு வழங்குவதுடன், புரட்சிக்கு அவர்களை அரசியல் மற்றும் தத்துவார்த்த ரீதியில் ஆயுதபாணியாக்குவதாகவே இருக்கும்.

இன்று நாம் செய்ய வேண்டிய கடமை ஒன்றுதான் இருக்கின்றது! அது பாரிய கடினமான பணி, தொழிலாள வர்க்கத்திற்கு அரசியல் நனவூட்டுவது!! இந்த மேதினத்துடன் WSWS இன் தமிழ்ப்பக்கம் தொடங்கி இரண்டு வருடம் பூர்த்தியாகின்றது. பிரான்சின், இந்த



படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி தேர்தலின் அனுபவங்களை நாம் உள்ளீர்த்துக் கொள்வதுடன், உலகத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை பிரான்சிலும், இந்திய உபகண்டத்திலும் மற்றும் உலகெங்கிலும் கட்டியெழுப்புவதற்கு மேலும் உறுதிபூண்டு கொள்வோம். இதுவே தொழிலாள வர்க்கமும் மேலும் மனித குலமும் இன்று முகம் கொடுக்கும் சகல அபாயங்களுக்கும் ஒரு ஆரோக்கியமான, உயர்ந்த பதிலீட்டினை வழங்கும்.

தோழமையுடன்

*Senthil. 20-05-2002*

## எனது மகனும் அவரது மணித்துளிகளும்

மாபெரும் உலகில் வாழ்கின்ற மனித குலத்தின் வாழ்நாளில் கழிகின்ற ஒவ்வொரு நிமிடங்களும் ஏதோ ஒன்றை உணர்த்தி மனிதனை மறுநிமிடத்திற்குத் தயார்படுத்துகின்றது. கடந்த வருடம் எம்மை இருளில் இட்டு சென்ற இந்தக் காலம் எமக்கு எதை உணர்த்திச்சென்றது என்று நாம் ஆய்ந்துணரவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் எதோ ஒன்றை செய்ய சுதந்திரமாக நினைக்கிறான். ஆனால், அதை மனிதன் அப்படியே செய்வதில்லை. அவன் வாழுகின்ற சமூகம் என்கின்ற வட்டத்தில் சுழன்று திரிபுபட்டு செயல்படுகின்றான். ஒரு சிலர் மட்டுமே அதில் இருந்து தனித்து தான் நினைத்ததை செய்து முடிக்கின்றனர். இதை தன்னம்பிக்கை என்கிறோம். இதை அனேகமானோர் தமது சுயலாபத்திற்காக செயற்படுத்தி சமூகத்தை தமக்கேற்றதாக மாற்றி அழிவுப் பாதைக்கிட்டுச் செல்கின்றனர். இவர்களை பல சமயங்களில் சமூகம் புரிந்து கொள்வதில்லை. இவர்களை சிறந்த மனிதர்களாக சமூகம் நம்பிவிடுகின்றது. தன் சமூகத்தின் நலனுக்காக செயல்படுகின்றவன்தான் ஒரு சிறந்த மனிதனாகத் திகழ்கின்றான். அப்படிப்பட்ட நிலையை அடைய, அவன் அந்த சமூகத்துடன் நிறைய போராடவேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட போராட்டங்களையும் இன்னல்களையும் கடந்து வந்த எனது மகனது வாழ்நாளை பின் நோக்கிப்பார்த்து, அவரின் இந்த நிறைவின் ஒரு பகுதியில் இருந்து நாம் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வரவேண்டும்.

1969 ஐப்பசித் திங்கள் கடும் மழையில் கடல் கொந்தளிப்பால், கடல் பிரயாணம் தடைப்பட்டிருந்த வேளை எனது மகன் பிறப்புக்கு தயாரானார். நெடுந்தீவில் வசதியான வைத்தியசாலை இல்லை. பெரும் சிக்கலான நிலையில், 12ம் நாள் அதிகாலை கடல் கொந்தளிப்புக் குறைந்து அமைதியடைந்த அந்த குறுகிய நேரத்தில் இராசேஸ்வரி லோஞ்சு மூலம் குறிகாட்டுவான் வந்து சேர்ந்த பின் மீண்டும் (கடல் கொந்தளிப்பு தொடங்கியது) கார் மூலம் யாழ் வைத்தியசாலையை அடைந்து காலை 11. 25 க்கு செந்திலை பெற்றெடுத்தாள். எனக்கும் தாயார்க்கும் தரணிக்கும் பெருமகிழ்வு ஊட்டினான். அன்றிலிருந்து...
அவர் நெடுந்தீவு மேற்கில் 2 மாதங்கள் பெரிய தாய்மாருடன் இருந்து பின்பு தாயாருடன்



படிப்பகம்

கொட்டகலை சென்றார். அங்கு தாயார் கற்பித்த நு/ றெயிற்றன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை தொடர்ந்தார். பிறரை ஈர்க்கும் தோற்றமும், மழலை மொழியும், இள நகையும், பிறர்மேல் கருணையும், அன்பும் செலுத்துபவராகவும் இயல்பாகவே செந்தில் இருந்தார். இதனால் அவர் மற்றவர்களின் அன்பையும் பெற்றதோடு உறவினர், சுற்றத்தாரை தன்பால் ஈர்த்தார். அவர் எதையும் ஆராய்ந்து அறிபவராக இருந்ததால் பலமுறை பெரியவர்களை திக்குமுக்காடச் செய்தார். ஒரு விடயத்தை மிகச்சரியாக அறியும்வரை தொடர்ந்து முயற்சித்து சரியாக அவர் அறிந்து கொள்வார். இதுவே அவரது வளர்ச்சிக்குப் படியாகவிருந்தது.

கொட்டக் கலையில் இருந்த காலப்பகுதியில் அங்குள்ள மக்கள், மணவர்களுடன் செந்தில் நன்கு பழகினார். அங்கு சிறுவயது சிறிய நண்பியான மஞ்சுளா என்பவரைப் பற்றி அவர் இப்போதும் நினைவு கூறுவார். அவர் விடுமுறை நாட்களை நான் வேலை செய்த மல்லாவியில் களித்தபோது அங்கு நெல்வயல்கள், குளங்கள் என சுற்றி விளையாடி மகிழ்ந்தார். வயல் வேலைகளில் கடுமையாக உழைக்கும் பலரைக் கண்டு அவர் இரக்கம் கொண்டார். வேலூ என்னும் கூலி வேலை செய்பவரின் உழைப்பைப்பற்றி இன்றும் அவர் நினைவுகொள்வார்.

தொடர்ந்து இடைநிலைக் கல்வியை மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலையத்திலும், பின்னர் விடுதியில் தங்கி இருந்து தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் அவர் பயின்று வந்தார். அக்காலப் பகுதியில் போராளிக் குழுக்கள் தீவிரமான ஆட்சேர்ப்புப் பிரச்சாரங்களை பகலில் பாடசாலைகளிலும் இரவில் விடுதிகளிலும் நடாத்தி வந்தன. விடுமுறை நாட்களில் அவர்கள் ஏதாவது ஆசைகாட்டியும் தம்முடன் அழைத்துச் செல்வார்கள் என்ற அபாயம் இருந்ததால் அங்கு எனது மகனால் கல்வியைத் தொடரமுடியாமல், யோகபுரம் மகாவித்தியாலைய அதிபர் சிபவாகீசரின் உதவியுடன் அவரது வீட்டில் தங்கி சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். எனினும் சிறந்த பாதுகாப்பு இல்லாமல் அங்கு கல்வியைத் தொடர முடியாததால் அவர் மீண்டும் மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலையத்தில் எமது அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் கல்வியைத் தொடர்ந்தார். விடுமுறைக் காலங்களை நெடுந்தீவில் உறவினர்களுடன் சிறப்பாகக் களித்ததோடு, அவர் குதிரைச்சவாரி, கடற்கரை, என உற்சாகமாகக் இருப்பார்.

இக்காலப் பகுதியில் EROS இன் பிரச்சாரங்கள் அவரை ஈர்த்ததால், அதன் மாணவர் அமைப்பில் அவர் இணைந்து செயற்பட்டார். (பிற் காலத்தில் அதன் கொள்கைகளின் குறைபாடுகளை உணர்ந்து அதிலிருந்து விலகிக்கொண்டார்) பல அறிஞர்களின் புத்தகங்களையும் வரலாறுகளையும் அவர் தீவிரமாகக் கற்றார். 1984 இல் மல்லாவி கடைவிதியில் மாங்குளம் பொலீஸ்சாரால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் அவரது பெரியதந்தை டானியல் (ஓய்வுபெற்ற பொலீஸ்அதிகாரி) மற்றும் அவருடன் படித்த மாணவ நண்பன் இராசேந்திரன் உட்பட பலரின் மரணங்கள், காயம் அடைந்தவர்களுக்காக மாணவர் அமைப்பினூடாக கண்டன பேரணி ஒன்றை நடத்தினார். கறுப்பு யூலை நினைவாக 1985ல் ஒரு பேரணியும் பொதுக்கூட்டத்தையும் அவர் நடத்திய மறுநாள் மல்லாவி வந்த பொலீசார் எனது மகனையும் பல இளஞர்களையும் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தினர். பின் அதிபரின்

www.padippakam.com

உதவியால் அவர் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்தும் EROS இன் மாணவர் அமைப்பில் செயற்பட்டபடியே, ஏனைய அமைப்புக்களின் பிரச்சார கெடுபிடிகள் எல்லாவற்றிற்கும் அவர் முகம் கொடுத்து, கல்வி மனிதகுலத்துக்கு மிகவும் அவசியமானதென்றென உணர்ந்து, அதனைக் கற்று O/L பரீட்சையில் திறமையாகச் சித்தி பெற்று (பிரதேச மட்டத்தில் இரண்டாவது இடம்) உயர்தரக் கல்வியை மல்லாவி மத்திய கல்லூரி விஞ்ஞானப்பிரிவில் கற்றார். மல்லாவியில் விஞ்ஞானப் பிரிவில் கற்கக்கூடிய வளமின்மையால் யாழ் சென்று அங்கு பெரிய தாயார் (காங்கேசு லக்சுமி) குடும்பத்துடன் தங்கி ஒரு தனியார் கல்வி நிலையத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு இராணுவத்திற்கும் தமிழ் அமைப்புகளுக்குமான மோதல்கள் தீவிரம் அடைந்தன. செல்வீச்சுக்கள், குண்டுவீச்சுக்களால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டனர். இதிலிருந்து தன்னைப் பாதுகாத்தபடி அங்கு அவரால் கல்வியைத் தொடர வேண்டியிருந்தது. பல சமயங்களில் இதில் காயமுற்றவர்களை தனது அறிவற்றலாலும் துணிவாலும் அவர் காப்பாற்றினார். அதில் வயிற்றில் காயமுற்று குடல் வெளியில் தள்ளிய நிலையில் இருந்த இளைஞர் ஒருவருக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சை செய்து வைத்தியசாலைக்கு சேர்த்து அவரைக் காப்பாற்றினார். இந்த மனித அவலங்களுக்கான அடிப்படை காரணங்களை ஒரளவு புரிந்துணர்ந்து கொண்டு, அதற்கு உண்மையான ஒரு தீர்வுக்கான வழிவகைகளை அவர் தேடலானார். அக் காலப்பகுதியில் அயலில் வசித்த தில்லைநாதன் (பழைய EROS MP) அவர்களின் தொடர்பும் அதனால் பல நூல்களை படிக்கும் வாய்ப்பும் எனது மகனுக்கு கிடைத்தது.

அவர் மனித குலத்தின் வரலாறுகளையும், புரட்சிகளையும் கற்பதில் மேலும் தீவிரம் காட்டினார். இக்காலப்பகுதியில் சிறுவயது நண்பர்களில் ஒருவரான பொன்னம்பலத்தின் (செல்வன்) தொடர்புடன் அண்ணா என்பவரைச் சந்தித்து அவரது நட்பையும் பெற்றார். கிளிநொச்சி இராமனாதபுரத்தில் வசித்த, அண்ணாவை அடிக்கடி சந்தித்து வந்து போனதில், அங்கு துடிப்பும், சுறுசுறுப்பும், புத்தகங்களை நன்றாக வாசிக்கும் பழக்கமும் உடைய அன்பரசி (செல்வி) ஐச் சந்தித்து அவரைக் காதல் செய்தார்.

இந்திய இராணுவத்தின் வருகையினாலும் தமிழ் இயக்கங்களின் மோதலினாலும் தமிழ் சமூகத்தின் அழிவும் அவலங்களும் பெருகின. இதற்கான காரணங்களை அறிந்து இதற்கான தீர்வு யாதென அறிய அவர் முற்பட்டார். அவரது இந்த தேடலில் புதிய நண்பர்களாக மாகாலிங்கம், கந்தகுமார் ஆகியோர் அறிமுகமாயினர். EROS அமைப்பின் உறுதியற்ற தன்மையும், சீரற்ற கொள்கையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிளவும், அவரை EROS அமைப்பின் செயற்பாட்டிலிருந்து முற்றாக வெளியேறச் செய்தது.

இலங்கையின் மோசமான இனப்பிரச்சனையால் கல்வியைத் தொடர முடியாமலும், வாழமுடியாத மோசமான நிலையிலும் இந்தியா செல்வதென அவர் முடிவெடுத்து தாயாரின் ஒருசோடி தங்க வளையலையும் பெற்றுக்கொண்டு நண்பர்களான கந்தகுமார், மகாலிங்கம் ஆகியோருடன் மன்னார் கடல் வழியாக இந்தியா சென்றார். அங்கு இடர்பாடுகளின் மத்தியில் பல தமிழ் அமைப்புகளை அறிந்து அவர்களோடு கலந்துரையாடி அவர்களது கொள்கைகளையும் செயற்பாடுகளையும் அறிந்து கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

அதேநேரம் தனது பெரிய தாயாரின் குடும்பம் இந்தியா போயிருந்ததால் அங்கு அவர்களுடன் சேர்ந்து தங்கியிருந்து தனது அறிவுபூர்வமான தேடல்களைத் அவர் மேலும் தொடர்ந்தார். உலக அமைதிக்குத் தேவையான கோட்பாடுகள், தத்துவார்த்தக் கருத்துக்களை விளங்கிக்கொள்ள அங்குள்ள புத்தகங்கள், குறிப்பாக மொழிபெயர்ப்புப் புத்தகங்களில் இருந்து கற்பதைவிட நேரடியாகக் கற்றால் இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளலாமென அவர் எண்ணினார். இதனால் உந்தப்பெற்ற அவர், மனித சமூகத்தின் புரட்சிகளும் முற்போக்கான சம்பவங்களும் நடைபெற்ற நாடான ஐரோப்பிய நாடுகளிற்கு சென்றுவிட முடிவெடுத்து இந்தியாவிலிந்து இலங்கை சென்றார்.

1990ல் அவர் கொழும்பில் தங்கியிருந்த போது நாட்டின் இராணுவ கெடுபிடிகளினால், நிலையாக ஓரிடத்தில் தங்கமுடியாமல் அங்கும் இங்குமாக தனது இடத்தை மாற்றிக் கொண்டிருந்தார். அப்போது சிறிதுகாலம் அவர் நுவரெலியாவில் தெரிந்தவர் வீட்டில் சில மாதங்கள் தங்கி அங்குள்ள மாணவர்களுக்கு பாடங்கள் கற்பித்ததோடு, அங்கு தனது வாழ்க்கைச் செலவுக்காக தோட்ட வேலைகளையும் செய்தார். மீண்டும் தனது பிரயாண முயற்சிக்காக கொழும்பு வந்து சில இளைஞர்களுடன் தங்கியிருந்தபோது, ஒரு நாள் சிங்களக் காடையரால் அவர் தாக்கப்பட்டார். அவர்களிடமிருந்து தன்னை பாதுகாக்க சிறுவயதிலிருந்து கற்றுக்கொண்ட கராத்தே பெரிதும் அவருக்கு உதவியது. (சிறுபராயத்தில் புறூசிலீயின் படத்தை வைத்து மிகவும் ஆர்வமாக இந்த தற்காப்புக் கலையை கற்றுக்கொண்டதோடு, பிற்காலத்தில் அதனைத் கற்று தேர்ச்சியும் பெற்றார்)

செந்தல் சிறிது காலம் கற்றனில் உறவினர்களுடன் தங்கியிருந்தபோது, அங்கு தோட்ட தொழிலாளர்களின் நியாயமான வேதனம், வேலை நேரம் போன்ற விளக்கங்களைப் பற்றியும், அதை பெறுவதற்கு செய்ய வேண்டிய அரசியல் போராட்டங்கள் பற்றியும் அவ்வூர் இளைஞர்களுக்கு எடுத்துரைத்தார். ஒரு முறை இராணுவத்தால் அவர் கைதாகி புலனாய்வுப் பிரிவினால் தடுத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார். தில்லைநாதனின் உதவியுடன் அவர் பின்பு விடுதலையாகி, அவரது வீட்டில் தங்கியிருந்து பயண ஏற்பாட்டை தீவிரப்படுத்தி, பெற்றோர் கொடுத்த ஒரு தொகை பணத்துடன் 1991 ல் பிரான்ஸ் வந்து சேர்ந்து அகதி அந்தஸ்துப் பெற்று பிரெஞ்சு மொழியையும் கற்றறிந்தார்.

குடும்பத்தின் தேவைகளையும், வழிநடத்தல்களையும் குடும்பத்தின் மூத்தபிள்ளை என்பதால் பொறுப்புடன் செய்ய அவரால் வேண்டியிருந்தது. எனவே தனது ஏனைய வேலைகளுடன் இலங்கையின் மோசமான நிலைமையால் தேவைப்பட்ட பொருளாதாரத்திற்கு தனது உழைப்பின் ஒருபகுதியை அனுப்பினார். பல புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் போலவே இந்த நாட்டில் குளிரில் வேலை செய்யத் தள்ளப்பட்டார். காலையில் பேப்பர் போடுகின்ற வேலை ஒவ்வொரு வீடுகளாகச் சென்று பேப்பர் போட வேண்டும். சில நேரங்களில் பேப்பர் சுமையுடன் நீண்ட தூரம் நடக்க வேண்டும். வேலை முடித்து அதன் பின்பு கிடைக்கும் நேரங்களில், அவரது தேடலுக்கும் படிப்பிற்கும் ஓய்வே இருக்காது. அவரது தேடலில் ஒருநாள் கலைமன்றம் ஒன்றில் செழியனுடன் (தில்லைச்செழியன்) அறிமுகம் ஆகி, அவர் மூலம் நான்காம் அகிலத்தையும் அதன் உறுப்பினர்களையும் சந்தித்தார். இந்த சந்திப்பின் பின்பு அவரது தேடலிற்கான பதில் இருக்கும் இடத்தை அடைந்து விட்டதாகக் அவர் கருதினார். அன்றிலிருந்து அவர்களுடன் இணைந்து அவர் செயற்படத் தொடங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

உலகத்தின் அரசியல் அதிகாரத்துவத்தில் நடைபெற வேண்டிய மாற்றங்களும் அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதிலும் மிகவும் சிறப்பாகப் அவர் பணியாற்றத் தொடங்கினார். உலக மக்களின் வாழ்விற்கும், உழைப்பின் பெறுமதிக்கும் தேவையான வளம் உலகில் பூரணமாக இருந்தும் மக்கள் பற்றாக்குறையுடன் வாழ்க்கை நடத்துவதற்குக் காரணமான குறைந்த எண்ணிக்கையுடைய முதலாளி வர்க்கத்திற்கு எதிராக மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும், அதற்காக அனைத்து மக்களும் கற்றுத் தெளிவு பெற்று விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டியது பற்றியும் தன்னை சந்திக்கும் எவருக்கும் அவர் விளக்கமளித்தார். இந்த தத்துவார்த்த உண்மையை மக்கள் எளிதாக புரிந்து கொள்ள முடியாமல் எதிர்வாதம் செய்வார்கள். அதற்கான சரியான விளக்கத்தை பொறுமையாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துரைக்கும் இயல்பைக் அவர் தன்னகத்தே கொண்டிருந்தார். மனித குலத்தின் மேம்பாட்டிற்கு உலக சமகால நிலமைகளையும், அதற்கேற்றாற்போல் மக்கள் எவ்வாறு தமது புரட்சியை செய்யவேண்டும் என்பதனையும், தனது விஞ்ஞான பூர்வமான சிந்தனையுடன் அறிவார்ந்த தனது தேடலையும் கற்றலையும் அவர் விரிவுபடுத்தினார்.

அத்தோடு 1994 ல் தனது காதலியான அன்பரசியை பாரிசில் திருமணம் செய்துகொண்டார். சொத்து சேர்ப்பதும் பயன்தராத பிற்போக்குவாதச் சடங்குகளும் தேவை இல்லை என முன்னுதாரணமாகத் தனது திருமணத்தை நடத்திக்காட்டி திருமண வாழ்வை அவர் தொடர்ந்தார். இதற்கு அவரது மனைவி சிறப்பாக ஒத்துழைத்தார் என்பது அவரது கொள்கைக்கும் செயற்பாட்டிற்கும் மேலும் பலம் சேர்த்தது.

மேலும் ஆங்கிலம் கற்பதற்காகவும் அங்குள்ள மக்களின் நிலமைகளை நேரில் அறிவதற்காகவும் இங்கிலாந்து சென்று சிறிது காலம் வசித்த பின்பு, மீண்டும் பிரான்ஸ் வந்து கட்சிச் செயல்பாடுகளுடன் தனது வாழ்கையைத் அவர் தொடர்ந்தார். ஒருபோதும் தனது கொள்கையையும் குடும்பத்தையும் போட்டுக் குழப்பிக்கொள்ளாமல் பெற்றோரதும் சகோதரர்களதும் பிள்ளைகளதும் விருப்பங்களுக்கு மதிப்பளித்து நிறைவேற்றிக் கொண்டும், அவர்கள் பிற்போக்குவாதக் கொள்கைகளை கடைப்பிடிக்கும் பட்சத்தில் அவற்றை தெளிவாக விளக்கி வாதிட அவர் ஒருபோதும் தவறமாட்டார். எனினும் அவர்கள் முழுவதையும் உடனே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தாது படிப்படியாக தாமாக உணர்ந்து வரவேண்டுமென அவர் காத்திருந்ததோடு, அதன்படி சகோதரர்களின் திருமணத்துக்கும் சடங்குகளுக்கும் ஒத்துழைத்து அதிலும் கலந்து கொண்டார். இது மற்றவர்களின் மனதை நோகடிக்காத, பெற்றோரின் விருப்பை நிறைவேற்றும் அவரது இயல்பைக் காட்டுகின்றது.

செந்தில், தனது சகோதரர்கள் ஒரு தமிழ் பிற்போக்குவாத அமைப்பு ஒன்றில் இணைந்து கொண்ட போது, அதற்கான சூழ்நிலைகளை நினைத்து மிகவும் வருத்தப்பட்டார். குடும்பம், உறவினர்களதும், முன்னேற்றத்திற்கும், தேவைகளிற்கும் தன்னால் ஆன முழு உதவிகளையும் அவர் மிக சிறப்பாகச் செய்தார். அவரது கொள்கைக்கு குடும்பமும், குடும்ப வாழ்விற்குக் கொள்கையும் தடையென ஒருபோதும் எண்ணாது, இரண்டையும் சிறப்பாகச் செயற்படுத்தும் ஆழுமைச் சிறப்பு மிக்க இவர், 1999 ஆனித்திங்கள் 09 ம் நாள் தனது முதல் மகன் துர்பின் ஐ பெற்று மகிழந்தார். தொடர்ந்து தனது தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப தான் செய்யும் தொழில்களை மாற்றிக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

சிறிது காலம் உணவு விடுதியிலும், வாகன ஓட்டுனராகவும் என பல தொழில்கள் செய்து ஒவ்வொரு தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுடன் தானும் முகம் கொடுக்கத் தள்ளப்பட்டார்.

2001 தை திங்கள் 25 ம் நாள் இளையமகன் அஜன் ஐப் பெற்று தனது இல்லற வாழ்வில் அவர் சிறப்பெய்தினார். எதிலும் சிறப்பாகவும் நிதானமாகவும் செயல்படும் இவர் சிறந்த வாகன ஓட்டினராகவும் இருந்தார். எனவே, அவரது நண்பர்களும் குடும்பத்தினரும் தமது தேவைகளுக்கும், அவசரங்களுக்கும் தயங்காமல் இவரை கேட்பதாகவும், அவர் உடனே சென்று உதவுவார் எனவும் அவரது நண்பர்கள் இப்போதும் நினைவு கூருவார்கள்.

ஒரு விடுமுறைக்கு மனைவி பிள்ளைகளுடன் இந்தியா வந்த அவர், அப்போது அங்கு தங்கியிருந்த எம்மையும் தனது சகோதரர்களையும் 15 வருடத்தின் பின் சந்தித்து மகிழ்ந்ததுடன் தனது கட்சிப் பணியையும் அங்கு மேற்கொண்டார். அங்கு பல மக்களை சந்தித்து கலந்துரையாடியதோடு, தனது விடுமுறையை முடித்துக் கொண்டு பிரான்ஸ் வந்து குடியுரிமை பெற்று தனது வாழ்வை 2005 ல் இருந்து இங்கிலாந்தில் தொடர்ந்தார். பரந்துபட்ட மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதாரச் சிக்கலும், அதைக் கட்டியாழும் நாற்றம்மெடுக்கும் அதனது அரசியல் அமைப்பு முறையும் கொண்டு விளங்கும் இங்கிலாந்தில், பலதரப்பட்ட மக்கள் வந்து போகும் இடங்களில் ஒன்றான பெற்றோல் நிலையத்தில் அவர் தனது இறுதிக் காலத்தில் வேலை செய்தார்.

2006 தை திங்கள் 22 ம் நாள் கடைசி மகன் லேயோன் பிறந்து அவரை மகிழ்வித்தான். சீராக திட்டமிட்டு தனது வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடங்களையும் செயற்படுத்தும் இவர், தனது குழந்தைகளை மிகச் சிறப்பாகவும் அறிவு பூர்வமாகவும் வளர்த்து வந்த வேளை, 2007. 02. 25 ல் வழமைபோல் அவரது கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தோழர்களுடன், லண்டனில் நடந்த ஈராக் யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தலையீடு செய்து, அதில் பிரச்சாரத்தினை மேற்கொண்டு நிறைவு செய்தபின், முதலாளித்துவ அடக்குமுறையின் ஒரு வெளிப்பாடான அகதி அந்தஸ்து பெறும் முறையில், தனது சகோதரியின் நீதிமன்ற விசாரணைக்காக லண்டனில் இருந்து புறப்பட்டு 26.02.2007 காலை பிரான்ஸ் வந்து சேர்ந்தார். ஆனால், இந்த ஆத்திரமூட்டும் அரசியல் அமைப்புச்சட்டத்தின் மூலம் தனது செயற்பாட்டைத் திறம்படக்காட்டி நீதிமன்றம் விசாரணையை கடைசி நிமிடத்தில் (27.02.2007 மாலை 6 மணி) பிற்போட்டது.

அதனைத்தொடர்ந்து அவர் தான் இங்கிலாந்து சென்று செய்ய வேண்டிய பல கடமைகளைக் கருத்தில் கொண்டு அன்று மாலை 8 மணிக்கு பாரீஸிலிருந்து அவரது சகோதரிகளிடம் விடைபெற்றுக் கொண்டு தனது நண்பர், நண்பரின் தாயருடன் இங்கிலாந்து திரும்பினார். நிறைந்த நம்பிக்கையுடனும் மனித குலத்தில் எதிர்கால சந்ததிக்கான நிறைவான தீர்மானங்களுடனும் பயணித்த வேளை.......

*அன்பான அப்பா*



படிப்பகம்

www.padippakam.com

# MY DAD



My Dad is fun, cool, funny, very friendly, and I like him so much. I miss him so much. I learnt a lot from him. He is very wise. He played with me all the time, I never forget him. He is kind, helpful and he never gives up. He is cheerful. I want to be just like him when I am older. He is very intelligent.

He took us to India, it was fun and he took us to France. I miss my Dad so much when the accident happened; it was petering, horrible and terrible.

I got to learn more and become wise and never give up.

*From your oldest son Turphin*

# MY DAD

My Dad is cool and clever. I am sad and I like him so much.

He reads lots of books. I love him so much.

*Ajann*

பிரிவென்பது இயற்கை, பொறுக்க முடியாத ஒன்று. அன்பு மகன் செந்திலின் பிரிவு எங்கள் குடும்பத்தில் ஆறாத துயராய் அமைந்தது. நீண்ட காலமாய் உன் முகம் காண்பதற்காய் காத்திருந்த நாங்கள், உன் போர்த்து மூடிய உடல் கண்டு பேதலித்து நின்றோம். அண்ணனின் ஐம்பதாவது பிறந்தநாள் காணவந்த எங்களுக்கு அருமை மகனின் இறந்த நாளை காணச் செய்தான் காலன்.

உனது அன்பு, பண்பு, ஆழந்த அறிவு, எவருக்கும் உதவும் உயர்ந்த எண்ணம் கொண்ட, பொதுவுடமையில் சிறந்த நெறியாளனாய் வரவேண்டிய ஒரு இளம் தளிர் இன்று மறைந்துவிட்டது. ஆண்டுகள் பல போகும் ஆனாலும் எமது ஆயுள் உள்ளவரை உன் நினைவு நீண்டு நிலைத்து, நெஞ்சமதை நிறைத்திருக்கும்

*உன் நினைவுகளில்*
*பெரியப்பா, பெரியம்மா*



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் செந்திலின் மறைவிற்கு இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் அனுதாபங்கள்

**15 March 2007**

இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சி, தோழர் செந்தில் ரவியின் மனைவிக்கும் அவரது பிள்ளைகளுக்கும் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவிக்கின்றது.

பெப்பிரவரி 28, புதன் கிழமை விடியற்காலை சாலை விபத்தில் செந்தில் துன்பகரமாக உயிரிழந்தமை, குறிப்பாக கடந்த மூன்றரை தசாப்தங்களாக இலங்கையில் பிறந்த சாதாரண தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்ற தாங்கமுடியாத சமூக நிலைமைகளின் அடையாளக் குறியீடாகும். செந்தில் தனது சகோதரிக்கு அகதி அந்தஸ்து பெறுவதற்கான விண்ணப்பத்தை ஏற்பாடு செய்வதற்காகவே பாரிசுக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்தார்.

அவர் பொருத்தமான மற்றும் பாதுகாப்பான காரில் பயணித்திருக்கவில்லை. காரணம், கொடூரமான அடக்குமுறைகளால் தான் பிறந்த நாட்டைவிட்டே வெளியேறத் தள்ளப்பட்டதில் இருந்து, சுமார் 17 ஆண்டுகளாக பிரான்சிலும் பிரிட்டனிலும் தொழில் செய்திருந்த போதிலும் கூட அவரால் ஒரு சிறந்த வாகனம் ஒன்றை வாங்க செலவிட முடியாமல் போயுள்ளமை தெளிவு. இந்த உண்மைகள், இலாபம் உருவாக்கும் இயந்திரத்தின் சக்கரமே இயந்திரத்திற்குக் குறுக்கீடாக இருக்கும் போது அதைக் கழற்றியெறிவது போலவே மனித வாழ்க்கையையும் நடத்துகின்ற உலக முதலாளித்துவ ஒழுங்குக்கு எதிராக நேரடியாக குற்றஞ்சாட்டுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலும் மேலாதிக்கம் செய்யப்பட்டுள்ள இலங்கையின் முதலாளித்துவ அரசாங்கங்கள், தமிழர்கள் மீதான பாரபட்சங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் 1983ல் இருந்து கொடூரமான யுத்தத்திற்கு தமிழ்மக்களை ஆளாக்கியமைக்கும் பிரதான குற்றவாளியாக இருக்கும் அதே வேளை, இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டத்தில் தீவில் உள்ள சீர்திருத்தவாத தொழிலாளர் வர்க்கக் கட்சிகள் ஆற்றிய பெருங்கேடு விளைவித்த பங்கை குறைத்து மதிப்பிட முடியாது. ட்ரொட்கிஸத்தை பேசிய லங்கா சமசமாஜக் கட்சி 1964ல் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து மாபெரும் காட்டிக்கொடுப்பை முன்னெடுக்காமல் இருந்திருந்தால், நிச்சயமாக இலங்கையிலான அரசியல் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும் இதன் காரணமாக இந்திய துணைக்கண்டத்திலும் மற்றும் தெற்காசியாவிலுமான அரசியல் சமநிலையும் மாறியிருக்கும்ஷ எனக் கூறுவது மிகைப்படுத்தலாக இருக்காது. இது 1947-48ல் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை என துணைக்கண்டத்தை துண்டாக்குவதன் மூலம் துணைக்கண்டத்தின் மீது திணிக்கப்பட்ட அரசியல் தீர்வை அது ஸ்திரப்படுத்த சேவை செய்தது. இது 1960 களின் பிற்பகுதியிலும் மற்றும் 1970 களின் முற்பகுதியிலும் கண்முன்னாலேயே மேலும் சிதைந்து போனது.

செந்தில் இந்த அரசியல் இக்கட்டு நிலையினால் வெறுமனே பாதிக்கப்பட்ட மனிதனாக



படிப்பகம்

www.padippakam.com

இருக்க மறுத்ததோடு அதற்குப் புறம்பாக ஒரு வழியைத் தேடினார். தெற்காசியாவிலும் மற்றும் அனைத்துலகிலும் உழைக்கும் மக்கள் எதிர்கொண்டுள்ள எரியும் பிரச்சினைகளுக்கான பதில்களை வழங்கும் ஒரே அமைப்பான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவான உலக ட்ரொட்ஸ்கிய இயக்கத்தின் வேலைத்திட்டத்தை அவர் கண்டார். அவர் பிரான்சில் தனது 20ம் வயதுகளில் ஒரு இளைஞனாக ட்ரொட்ஸ்கிய இயக்கத்தில் இணைந்த கணத்தில் இருந்தே, நிலைகுலைந்து போயுள்ள உலக முதலாளித்துவ அமைப்பை காப்பதன் பேரில் பயன்படுத்தப்பட்டுவரும் இனவாத மற்றும் தேசியவாத பிளவுகளை குறுக்கே வெட்டி, அனைத்துலக சோசலிசத்திற்கான போராட்டத்திற்காக ஒரு அரசியல் இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான பாதையில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டார்.

செந்திலைப் பொறுத்தளவில், மீண்டுமொருமுறை மிலேச்சத்தனமான மூன்றாவது அணுவாயுத உலக யுத்தத்தின் விளிம்புக்கே உலகை தள்ளிச் செல்கின்ற ஒரு அமைப்பான இந்த இலாப அமைப்பை, முன்னேற்றகரமான முறையில் மாற்றியமைப்பதற்கான உலக இயக்கம் தனது முன்னணிப் படையில் ஒரு மிகப் பெறுமதியான போராளியை இழந்துள்ளது. பூகோளம் பூராவும் உள்ள உழைக்கும் மக்களுக்கு கல்வியூட்டி, அவர்களை உலக சோசலிசத்திற்காக அணிதிரட்டும் பணிக்கு எம்மை தொடர்ந்தும் அர்ப்பணித்துக்கொள்வதன் மூலமே இந்த இழப்பைத் தணிக்க முடியும், அல்லது அதிலிருந்து மீள முடியும்.

எமது பெரும் கவலைக்குரிய இந்தக் கணங்களில், நாம் செந்தில் முன்நின்று நடத்திய போராட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் அனைத்துத் தோழர்களுடனும் ஆதரவாளர்களுடனும் இணைந்து கொள்கிறோம்.

**விஜே டயஸ்** (பொதுச் செயலாளர்)

## ரவீந்திரநாதன் செந்தில் ரவியின் மறைவிற்கு ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் அனுதாபச் செய்தி

**16 March 2007**

எமது மிகவும் அன்புக்குரிய தோழர் ரவீந்திரநாதன் செந்தில் ரவிக்கு (செந்தில்) ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்த என்னை அனுமதியுங்கள்.

நாம் அனைவரும் செந்திலின் மறைவைக் கேள்விப்பட்டு பெரும் அதிர்ச்சியடைந்தோம். இந்த மனவேதனை நிறைந்த சந்தர்ப்பத்தில் எமது ஆழ்ந்த கவலைகள் அவரது மனைவி பிள்ளைகளை பற்றியதாகும். அவர்கள் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த தந்தையையும் கனவனையும் இழந்துள்ள அதே வேளை, அனைத்துலகக் குழு அதன் ஐரோப்பிய பகுதி வேலைகளில் முன்னணிப் பாத்திரம் வகித்த ஒரு முக்கியமான உறுப்பினரையும் இழந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அவரது இளம் வயதில் செந்திலை வேறுபடுத்திக்காட்டும் சிறப்பியல்பு என்னவெனில், அவரது சிந்தனைகளும் மற்றும் அதிஷ்டமில்லாதவர்களுக்காக தனது நல்வாழ்க்கையை அர்ப்பணிக்க அவரது தயார் நிலையுமேயாகும். இலங்கையின் பெருந்தோட்டப் பிரதேசங்களில் ஆசிரியர்களாக பணியாற்றியவர்களின் மகனாகப் பிறந்த செந்தில், தோட்டப்புற பிரதேசங்களில் தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் பயங்கரமான சுரண்டல்களால் முன்நகர்த்தப்பட்டதோடு 15 வயதில் அரசியல் ரீதியில் செயலாற்றுமளவிற்கு உந்தப்பட்டுள்ளார்.

தமிழ் தேசியவாதம் என்ற வரையறைக்குட்பட்ட வட்டத்திற்குள் பல ஆண்டுகள் சிக்கியிருந்த செந்தில், 1992ல் ஆரம்பத்தில் பாரிசில் அனைத்துலகக் குழுவின் உறுப்பினர்களை சந்தித்ததைத் தொடர்ந்து மிக விரைவாக ஒரு அனைத்துலக முன்னோக்கிற்கு பிரதிபலித்தார். அவர் அனைத்துலக குழுவின் முன்நோக்கையும் ஸ்ராலினிசத்திற்கும் மற்றும் அனைத்து வகையான தேசியவாதத்திற்கும் எதிரான ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் வரலாற்றையும் துரிதமாக உள்ளீர்த்துக்கொண்டார்.

அப்போதிருந்தே அவர் பாரிசில் உள்ள தமிழ் சமுதாயத்தின் மத்தியிலும் மற்றும் பிரான்ஸ் தொழிலாளர் வர்க்கத்தின் நடவடிக்கைகளிலும் கட்சி மேற்கொண்ட ஒவ்வொரு தலையீட்டிலும் முன்னணி வகித்தார். அவர் 2000 ஆண்டில், ஐரோப்பிய, இந்திய மற்றும் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தை ஒன்றாகப் பிணைப்பதில் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் தமிழ் வலைத் தளத்தை முன்னெடுப்பதிலும் முன்னணிப் பாத்திரம் வகித்தார்.

இங்கு ஜேர்மனியில் செந்தில் பங்குபற்றிய பாடசாலைகள் மற்றும் கூட்டங்கள் போன்ற பல சந்தர்ப்பங்கள் எங்கள் நினைவிற்கு வருகின்றன. அவர் அடக்குத்துடன் பேசுகின்ற, மற்றும் கலாச்சாரத்தில் ஆர்வமுள்ள குறிப்பாக தென்னிந்திய சினிமாவில் ஒரு சிறந்த செவிசாய்ப்பவராகவும் இருந்தார். அதே சமயம், அவரது வாழ்க்கை மற்றும் அவரது அரசியல் வேலைகளின் ஒவ்வொரு அங்கத்தையும் அணுகுவதில் அவருக்கு இருந்த அக்கறை மற்றும் உறுதிப்பாட்டை நாம் கண்டுள்ளோம். நாங்கள் அவரை தவறவிட்டுவிட்டோம்.

37 வயது மட்டுமே ஆன அவர் வாழ்க்கையின் முக்கியமான காலகட்டத்திலும், மற்றும் தனது குடும்ப வாழ்க்கை, நண்பர்களின் வாழ்க்கை மற்றும் எமது அனைத்துலகக் கட்சியின் வேலைகளிலும் மேலும் செழுமை சேர்க்க தனது ஆரம்ப இளமைக்கால வாழ்க்கையின் படிப்பினைகளையும் அனுபவங்களையும் முன்கொணரக்கூடிய ஒரு பருவத்திலும் இருந்தார். அவரது வாழ்வுக் காலம் குறுகியதாக இருந்தாலும், அவர் எம் எல்லோரையும் காப்பாற்றும் ஒரு கட்சிக்காகவும் நோக்கத்திற்காகவும் போராடினார். அனைத்துலகக் குழுவாலும் புரட்சிகர போராளிகளின் புதிய பரம்பரையினராலும் செந்திலின் பெயர் நினைவு கூறப்படுவதோடு போற்றப்படும்.

என் ஆழ்ந்த அனுதாபங்களுடனும் மற்றும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அன்பான வணக்கத்துடனும் முடிக்கிறேன்.

*உல்ரிச் ரிப்பேர்ட்,*

***சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில்.***



படிப்பகம்

www.padippakam.com

# செந்தில் ரவியின் மரணச் சடங்கில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்

**By our reporter (http://www.wsws.org/tamil/)**

**29 March 2007**

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உறுப்பினரான செந்தில் ரவியின் மரணச் சடங்கு மார்ச் 16 வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் மில்டன் கீன்ஸ்ஸில் உள்ள கிறவுண் ஹில் மயானத்தில் இடம்பெற்றது. ரவியின் உறவினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நண்பர்கள் உட்பட முன்னூறுக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர். அவர்கள் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இலங்கை மற்றும் கனடாவிலிருந்தும் வந்திருந்தனர்.

மோசமடைந்துவரும் சமூக மற்றும் தொழில் நிலைமையின் கீழும், பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடும் பலர் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக தமது வேலை முடித்து நீண்ட தூரம் பயணம் செய்து வருகை தந்திருந்தனர். ஐரோப்பிய நாடுகளிலிருந்து இன்னும் பலர் அவரது இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள ஆர்வமாக இருந்தபோதிலும், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீதான ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகளின் மோசமான சட்டங்கள் அவர்களை தடுத்து நிறுத்தின. இருந்தபோதிலும், இந்த நிகழ்வானது செந்தில்ரவியின் 14 ஆண்டுகால சோசலிசத்திற்கான அரசியல் போராட்டத்தின் புகழைக் காட்டியது.

செந்தில் ஒரு மிகச் சாதாரண வாழ்க்கையை முன்னெடுத்த போதிலும், அவரது தூரநோக்கான பார்வை அவரை அனைத்துவிதமான தேசியவாதத்திலிருந்தும் பிரித்து அனைத்துலக தொழிலாளர் வர்க்க முன்னோக்கை நோக்கி வழிநடத்தியுள்ளது. தனது 25 வயதில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் (நா.அ.அ.கு.) இணைந்த சந்தர்ப்பத்தில் இருந்து உயிரிழக்கும் வரையும் ஐரோப்பாவில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அதன் செல்வாக்கை கட்டியெழுப்ப அவர் சளைக்காமல் செயலாற்றினார்.

அங்கு கூடியிருந்தவர்களில் பலர் அவரது சளைக்காத போராட்டத்தையும் அவரது குறிக்கோள்களையும் நினைவூட்டினர். நா.அ.அ.கு. வின் பிரித்தானிய பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் கிறிஸ் மார்ஸ்டன் கூட்டத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'நான் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் மற்றும் பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியினதும் அனுதாபங்களைத் தெரிவிக்க வந்துள்ளேன்.

'தோழர் செந்திலின் இறப்பு என்ற கசப்பான வில்லையை இனிப்பாக்குவதற்கு எதுவுமே கிடையாது என என்னால் சொல்ல முடியும். அவர் மிகவும் இளமையானவர் மற்றும் அவர் மிகவும் விரைவில் எங்களை விட்டுச் சென்றுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

'அவரது இழப்பால் நாம் அனைவரும் உணரும் ஆழமான கவலையை தெளிவாக வெளிப்படுத்துவதோடு அவரது குடும்பத்தாருடனும் மற்றும் அன்பரசி மற்றும் குறிப்பாக அவரது மூன்று பிள்ளைகளுடனும் நாம் மிகவும் சினேகிதத்துடன் கைகோர்த்துக் கொள்கின்றோம் என்பதை மட்டுமே தெளிவுபடுத்த என்னால் முடியும்.

'செந்தில் தனது வாழ்வில் நிறையவே சாதித்திருக்கின்றார் மற்றும் மேலும் சாதித்திருப்பார்.

'அடிப்படையில் அவர் தனது பண்பு மற்றும் ஏற்கனவே ஆழமான அனுபவங்களால் வடிவமைக்கப்பட்ட மற்றும் மார்க்ஸியத்தை அவர் மேலும் மேலும் புரிந்துகொண்டதால் கூர்மைப்படுத்தப்பட்ட அவரது அரசியல் நோக்கிலும் ஒரு சிறந்த மனிதராக இருந்தார் ஷிதொழிலாளர் இயக்கத்தில் மிகச் சிறந்த வரலாற்று மரபாக மார்க்ஸியத்தை அனைத்துலக் குழுவில் கண்டார்.

'அவர் பிரான்சுக்கு வந்தது முதலான அனுபவங்களில் அவர் உழைக்கும் மக்களின் அனைத்துலக ஐக்கியத்திற்கான நனவான அரசியல் போராளியானதோடு ஒரு சோசலிச உலகைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணித்துக்கொண்டவராக இருந்தார்.

'ட்ரொட்ஸ்கி 1940 பெப்பிரவரியில், ஐரோப்பாவில் உலக யுத்தம் வெடித்தபோது அவரைக் கொல்வதற்கு ஸ்டாலினின் கொலை இயந்திரம் முயற்சித்துக்கொண்டிருந்த போதிலும் கூட, அவர் மெக்ஸிகோவிற்கு நாடுகடத்தப்பட்டபோது வெளியிட்ட அறிக்கையின் சிறப்பியல்பை செந்தில் நன்கு புரிந்துகொண்டிருந்தார்.

'ட்ரொட்ஸ்கி எழுதியதாவது, 'மனிதநேயம்மிக்க கம்யூனிஸ்ட் எதிர்காலத்திலான எனது நம்பிக்கை ஆர்வம் குறைந்ததல்ல. உண்மையில் அது எனது இளமைக் காலத்தில் இருந்ததை விட இன்று மிகவும் உறுதியானதாகியுள்ளது... வாழ்க்கை அழகானது. கொடுமை, ஒடுக்குமுறை மற்றும் வன்முறையில் இருந்து அதை தூய்மையாக்கி அதை முழுமையாக அனுபவிக்க எதிர்கால சந்ததியினருக்கு விடுங்கள்.'

'செந்தில் அரசியல் தொந்தரவைக் கண்டதோடு, தனது சொந்த நாட்டில் இருந்தே வெளியேறத் தள்ளப்பட்டிருந்தார். அவர் சொந்த சிரமங்களை அறிந்திருந்ததோடு முன்னரை விட அதிகம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

'ஆனால் அவர் வாழ்கையின் முழு இன்பத்துடன் இருந்தார். அது வெறுமனே அவர் ஒரு சிறந்த எதிர்காலத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்ததால் அல்ல, ஆனால் அவர் தன்மீது அன்பு செலுத்தும் மற்றும் தன்னை மதிப்பவர்களால் சூழப்பட்டிருந்ததோடு ஒவ்வொரு நாளும் ஒரு காரணத்திற்காக வாழ்ந்துகொண்டிருந்ததாலேயே ஆகும். எங்களில் எவராலும் செய்யக்கூடிய சிறந்த விடயம் அது என நான் கூற வேண்டும்.

'மத கற்பனைகளில் ஆறுதலைத் தேடுபவர்கள் போல் அல்லாமல், சோசலிசம் எங்களை காவியுடை அணிந்து நாங்கள் முன்னர் செய்த பாவங்களுக்கு மன்னிப்புத் தருமாறு கேட்கச் சொல்லவில்லை. மார்க்சிய அடிப்படைத் தத்துவத்தின் சிகரத்தில் இருக்கும் மனிதகுலத்தின் உயர்ந்த கலாச்சார குறிக்கோள்களுடன் எங்களை பழக்கப்படுத்திக்கொள்ள, உலகையும் மற்றும் அதிலிருந்து கிடைக்கும் அனைத்தையும்



படிப்பகம்

www.padippakam.com

அரவணைத்துக்கொள்ளவே சோசலிசம் அழைப்பு விடுக்கின்றது.

'அதாவது நாங்கள் பாடமுடியும், குடிக்க முடியும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் உணர்வு எங்களைத் தூண்டிவிட்டால் ஆடவும் முடியும். செந்தில் அதிலிருந்தும் தனிமைப்பட்டிருந்தார்.

'அவர் எங்கள் அனைவருக்கும் ஒரு உதாரணமாக இருந்தார், இருக்கின்றார். நாங்கள் அவரை கௌரவிக்கின்றோம். சந்தர்ப்பம் கோரும்போது மட்டுமல்ல, செந்தில் மிகவும் ஆர்வத்துடன் நம்பிய வரலாற்று நடவடிக்கையை இட்டுநிரப்ப எங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் ஒவ்வொரு நாளும் நாம் அவரை கௌரவிக்கின்றோம்.

'செந்தில் ஒரு அற்புதமான மனிதர், நாங்கள் அவரை இழந்துவிட்டோம்.யு

அதியன் தனது குடும்பம், நண்பர்கள் மற்றும் பிரான்சில் உள்ள தோழர்களின் சார்பாக செந்தில்ரவியின் கடந்தகால அனுபவங்களைப் பற்றி உரையாற்றினார்:

'தோழர் செந்தில் மனித நாகரீகத்தின், ஒரு உயர்ந்த கலாச்சாரத்தின் மிகவும் நனவான பிரதிநிதி. அவர் மிகவும் எளிமையானவர், சிறந்த பண்பாளர், தான் எடுத்துக்கொண்ட விடயத்தை மிகவும் சிந்தித்து ஆழமாகவும், பொறுமையாகவும் மற்றவர்களுக்கு தெளிவுபடுத்தும் ஒரு மனிதர்.

'மனித நேயத்தை காட்டுமிராண்டித்தனத்திற்கு தள்ளிச் செல்ல விரும்பும் ஒரு சிலரின் இலாப நோக்கத்தை எதிர்த்த அவர், தனது இறுதி மூச்சுவரை புரட்சிகர சோசலிச முன்நோக்கிற்காக போராடினார். அவர் இறுதிவரை நான்காம் அகிலத்தின் முன்நோக்கில் நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் கொண்டிருந்ததோடு அந்த குறிக்கோளை அடைவதற்காக அவர் மகிழ்ச்சியுடன் செயலாற்றினார்.

'இலங்கையில் உள்ள ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு சோசலிசப் புரட்சியின் வெற்றியின் மூலம் மட்டுமே உண்மையான விடுதலையைக் காண்பர் என்பதில் அவர் ஆழமான மனவுறுதி கொண்டிருந்தார். இதன்படி அவர் இந்தியத் துணைக்கண்டத்தில் நான்காம் அகிலத்தின் பகுதியைக் கட்டியெழுப்புவதன் தேவையை புரிந்துகொண்டிருந்ததோடு அந்த இலக்குக்காக தன்னை அர்ப்பணித்தும் கொண்டார்.

'அவர், இதற்காக இந்திய வரலாற்றையும் பொதுவில் மனித வரலாற்றையும் ஆழமாக கற்க திடசங்கற்பம் பூண்டிருந்தார். இதன் ஊடாக மட்டுமே மனிதகுலத்திற்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது சாத்தியமாகும் என நாங்கள் ஒன்றுகூடும் போதெல்லாம் அவர் அடிக்கடி கூறுவார்.

'20ம் மற்றும் 21ம் நூற்றாண்டின் மார்க்சிஸ்டுகளின் ஆக்கத்திறன்கொண்ட படைப்புக்களை கற்பதில் செந்தில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் மறைவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் எனக்கு மின்னஞ்சலில் அனுப்பியிருந்த கடிதமொன்றில் இத்தகைய சிறந்த புத்தகங்களைப் பட்டியலிட்டிருந்தார். அவர் அதில் லெனின், ட்ரொட்ஸ்கி மற்றும் டேவிட் நோர்த்தின் படைப்புக்களை விசேடமாகக் குறிப்பிட்டிருந்தார்.


படிப்பகம்

www.padippakam.com

'பிரெஞ்சுத் தொழிலாள வர்க்கத்திற்கு நான்காம் அகிலத்தின் முன்னோக்கை கொண்டு செல்வதில் செந்தில் வகித்த பாத்திரத்தை, பிரெஞ்சுத் தொழிலாள வர்க்கம் தனது வரலாற்றில் அவரது பெயரை குறித்து வைக்கும்.

'ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராக பாரிசிலும் லண்டனிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்த போதெல்லாம் அவர் யுத்தம் தொடர்பான சோசலிச எதிர்ப்பு போராட்டத்தை அதில் முன்னெடுத்தார்.

'இதே போல், *உலக சோசலிச வலைத் தளத்தின்* தமிழ் பகுதியை கட்டியெழுப்புவதில் அவரது பங்களிப்பு வரம்பற்றதாகும். மனிதத்தை விரும்பிய தனிச்சிறப்பான வரலாறு கொண்ட இந்த மனிதரின் அகால மரணத்தைக் கேள்விப்பட்ட பலர் அதிர்ச்சியடைந்தனர்.

'அவர் மரணித்த செய்தியை கேள்விப்பட்ட, அவரை தனிப்பட்ட முறையில் அறிந்திராத பல நாடுகளைச் சேர்ந்த பலரும் அனுதாபச் செய்திகளை அனுப்பியிருந்தனர். இவை இன, மத மற்றும் மொழிக்கும் அப்பால் எழுச்சிபெற்ற ஒரு மனிதனாக செந்திலை விசேடமாக அடையாளப்படுத்தியுள்ளன.

'எம்மை விட்டுப் பிரிவதற்கு முதல் நாள் அவர் என்னை பாரிசில் சந்தித்த போது, பிற்போக்குவாதிகளின் ஒடுக்குமுறை ஆயுதங்களை விட வரலாற்று விதிகள் மிகவும் பலம் வாய்ந்தவை எனக் கூறினார். அந்த சொற்கள் இன்னமும் என் மனதில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன.

'செந்தில் ஒரு எளிமையான வாழ்க்கையை முன்னெடுத்த போதிலும், பிரெஞ்சுத் தொழிலாளர் வர்க்கம் மட்டும் அல்ல பிரித்தானிய, இந்திய மற்றும் உலகத் தொழிலாளர் வர்க்கம் அவரது நேசம்மிக்க நினைவுகளை என்றும் வைத்திருக்கும். இன்றைய நனவான இளம் தலைமுறையானது அவரது போராட்டத்தை அதனது முன்மாதிரியாகக் கொள்ளும் என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளேன். ''

இந்தியாவின் சோசலிச தொழிலாளர் கழகத்தின் செயலாளரான அருண்குமார் பேசுகையில்,

'தோழர் செந்திலின் துன்பகரமான அகால மரணம் எமது அனைத்துலக ட்ரொட்ஸ்கிய இயக்கத்திற்கு பேரிழப்பாகும். இங்குள்ள நாம் அனைவரும், அவரது தோழர்களும், அவரது குடும்பத்தாரும், உறவினர்களும் மற்றும் நண்பர்களும் அவரது இழப்பையிட்டு கடுமையாக வருந்துகின்றனர்.

'எவ்வாறெனினும் அவரது நினைவுகள் இறப்பதில்லை என்பதை குறிப்பிட்டாக வேண்டும். அவர் ஒரு அனைத்துலகவாதி. அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அனைத்துலக சோசலிச முன்நோக்கில் முழுமையாக நம்பிக்கைகொண்டிருந்ததுடன் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்திற்கான போராட்டத்திற்காக அவர் தன்னை மிக ஆர்வத்துடன் அர்ப்பணித்துக்கொண்டுள்ளார்.

'தேசிய இயக்கத்தில் அவர் பெற்ற ஆரம்ப அரசியல் அனுபவங்களின் பின்னர், இலங்கைத் தீவின் வரம்புக்குள் தேசிய ஒடுக்குமுறை பிரச்சினைக்கு முன்னேற்றமான


படிப்பகம்

www.padippakam.com

தீர்வு இருக்க முடியாது என்பதை அவர் புரிந்துகொண்டார். உலக சோசலிசப் புரட்சியின் பாகமாகவே இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதை அவர் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்தார்.

'அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கை பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் கொண்டு செல்ல செயற்பட்டார். இந்த உயர்ந்த பணிக்காக அவர் தன்னுடைய தோழர்களையும் நண்பர்களையும் ஊக்குவித்தார்.

'அவர் பல தடவைகள் இந்தியாவிற்கு வந்திருக்கின்றார். அவரின் மறைவுக்கு சில நாட்களுக்கு முன்னர் அவரை நான் லண்டனில் சந்தித்த போது, இந்தியாவில் அனைத்துலகக் குழுவின் கிளையை கட்டியெழுப்புவதுடன் தொடர்புபட்ட அரசியல், கோட்பாட்டு மற்றும் கலாச்சார பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதில் அதிகம் ஆர்வத்தை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சியடைந்தார்.

'நாங்கள் தோழர் செந்திலையும் மற்றும் அவரது புரட்சிகர போராட்டத்தையும் கௌரவிக்கின்றோம். அவர் உழைக்கும் மக்களின் முழு விடுதலைக்காகவும் மனித குலத்திற்கு ஒரு சிறந்த எதிர்காலத்திற்காகவும் போராடினார். அவரை கௌரவிப்பதற்கான சிறந்த வழி அவரது போராட்டத்தை மேலும் முன்கொண்டு செல்வதேயாகும்.யு

யாழ்ப்பாணத்திலும் பாரிசிலும் வெளிவரும் ஈழநாடு தமிழ் பத்திரிகையின் முன்நாள் ஆசிரியரும், தற்போது பிரான்சில் ஒரு பத்திரிகையாளராக பணியாற்றும் திரு. காசிலிங்கம் செந்திலுடனான தனது உறவு பற்றி பேசியபோது:

'மார்க்சிய கம்யூனிஸ்ட் கருத்துக்கள் ஆட்சி செலுத்தும் ஒரு உலகிற்காக செந்தில்ரவி ஆழமாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டதாக தோழர்கள் குறிப்பிட்டார்கள். உலக அரசியல் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது பற்றியும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இது செந்தில்ரவி யுத்தத்திற்கு எதிரான ஒழுக்கமான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப அர்ப்பணித்துக்கொண்டிருந்தார் என்பதை மிகவும் தெளிவுபடுத்துகிறது. இங்கு ஆற்றப்பட்ட உரைகள் செந்திலின் உயர்ந்த தனிச்சிறப்பியல்புகள் பற்றி பெருந்தொகையான மக்களுக்கு புரியவைத்துள்ளன.

'செந்திலின் குடும்பத்தின் ஒரு நெருங்கிய உறவினர் என்ற வகையில், செந்தில்ரவியின் சிறப்பியல்புகளை இங்கு முன்வைத்ததையிட்டு, அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.''

'ஜர்மனியில் உள்ள அனைத்துலகக் குழுவின் ஆதரவாளர்களின் சார்பில் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட அன்டனி தாஸ் தெரிவிக்கையில், நோங்கள் அனைவரும் இன்று செந்திலின் மரணச் சடங்கில் ஒன்று கூடியுள்ளோம். இவை செந்திலின் உடலுக்கு செய்யும் சடங்கு மட்டுமேயாகும். உயர்ந்த முன்நோக்கிற்கான அவரது போராட்டமும், அனைத்துலகவாதம் மீது அவர் கொண்டிருந்த விருப்பமும் ஆயிரக்கணக்கான புதிய இளம் பரம்பரைக்கு ஒளிரும் உதாரணமாகும். அது மட்டுமல்ல, அடுத்த பரம்பரையின்



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனைகளுக்கு பரந்தளவில் அவரது போராட்டம் உணர்வூட்டி ஒளிமயமாக உயிர்பெற்றிருக்கும்.

உயர்ந்த முன்நோக்குடன் அவர் மிலேச்சத்தனத்திற்கு எதிராக முன்னெடுத்த போராட்டமானது மனித நாகரீகத்தையும் உயர்ந்த ஜனநாயக மற்றும் மனித விழுமியங்களையும் பாதுகாக்கும்.

# ரவீந்திரநாதன் செந்தில்ரவிக்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு பாரிசில் நடாத்திய நினைவஞ்சலிக் கூட்டம்

**By Antoine Lerougetel (http://www.wsws.org/tamil/)**

**18 April 2007**

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஏப்ரல் 15ம் தேதி. லண்டனை தளமாக கொண்டிருக்கும் அதன் உறுப்பினர் ரவீந்திரநாதன் செந்தில்ரவி பெப்ருவரி 28 அன்று ஒரு கார்விபத்தில் காலமானதை அடுத்து ஒரு ஞாபகார்த்த கூட்டத்தை நடாத்தியது. பாரிசில் உள்ள FIAP Jean Monnet Centre ல் நடந்த இக்கூட்டத்தில் 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பாரிசில் உள்ள தமிழ் சமூகத்தில் இருந்து வந்திருந்தனர்.

உலக சோசலிச வலைத் தளத்தின் தமிழ் பகுதியின் பிரதம ஆசிரியரான அமுதன் மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றினர்; அவர்களில் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் விஜே டயஸ், பிரிட்டிஷ் சோசலிச சமத்துவக் கட்சியின் கிறிஸ் மார்ஸ்டன் மற்றும் ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் பீட்டர் சுவார்ட்ஸ் ஆகியோரும் அடங்குவர்.

பேச்சாளர்களுக்கு பின்புறம், இந்தியத் தோழர் தமிழில் எழுதிய கவிதை ஒன்றுடன் கூடிய இரு பெரிய பதாகைகள் செந்திலின் புகைப்படத்துடன் வைக்கப்பட்டிருந்தது. தமிழில் இருந்த கவிதை கூறுவதாவது: ஙஉலக சோசலிசப் புரட்சிக்காக செந்தில் போராடினார். அது அவரது உயிர் மூச்சாக இருந்தது. அங்கே செந்தில் இன்னும் உயிர்வாழ்கிறார். நாம் அதனை தொடர்வோம்.யு

கூட்டத்தில் தலைவரான ஸ்ரெபான் உகுஸ், செந்திலின் மனைவி அன்பரசியையும், விபத்தில் ஏற்பட்ட காயங்களில் இருந்து தேறிவரும் செந்திலின் நெருங்கிய நண்பரும் தோழருமான செழியனையும் வரவேற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

கூட்டத்தின் ஆரம்பத்தில் செந்திலுக்கு மரியாதை செய்யும் வகையில் ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா என நான்கு கண்டங்களில் இருந்தும் மக்கள் கூட்டத்திற்கு வந்துள்ளனர் என்பதை பேச்சாளர்கள் குறிப்பிட்டனர். செந்தில் மற்றும் அவர் சிறந்த உறுப்பினராக இருந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சர்வதேசியத்தின் அடையாளம் என்று அவர்கள் கூறினர். அவருடைய இறப்பில் தொழிலாள வர்க்கம் ஒரு முக்கியமான தலைவரை இழந்துள்ளது. ஆனால் அவருடைய வாழ்வு இளைய புரட்சியாளர்களுக்கு ஒரு ஊக்கமாக இருக்கும் என்றும் பல பேச்சாளர்கள் குறிப்பிட்டனர்.

செந்திலின் வாழ்வையும் அரசியல் அபிவிருத்தியையும் ஒரு வரலாற்று உள்ளடக்கத்தினுள் வைத்தே விளங்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று அமுதன் வலியுறுத்தினார். இலங்கையின் முன்னாள் ட்ரொட்ஸ்கிச கட்சியான LSSP (லங்கா சம சமாஜ கட்சி) 1964ல் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து, தேசிய முதலாளித்துவத்தின் கூட்டாளியாக மாறிய வகையில் செய்த காட்டிக்கொடுப்பிற்கு மிக அதிக விலை கொடுத்த தலைமுறையின் ஒரு பாகமாக செந்தில் இருந்தார்ய் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் ஒரு தமிழ் இளைஞனாக, தமிழ் மக்கள் மீதான கொடிய இனவாத அடக்குமுறையை அனுபவித்த உண்மை பற்றி ஏனைய பேச்சாளர்கள் கருத்துக் கூறினர். ஆனால் அவர் மற்ற தேசிய இனங்களை சேர்ந்த தொழிலாளர்களை புறக்கணித்து தமிழ் மக்களை மட்டும் காப்பாற்றுவதாக கூறும் ஒரு தேசிய முன்னோக்கை எதிர்த்தார். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் கொண்ட தொடர்பின் மூலம் அவர் ஒரு சர்வதேச சோசலிஸ்ட்டாக மாறி, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் இந்தியாவின் தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்கான முக்கிய கொள்கைப் பிடிப்பாளராக இருந்தார்.

1990களில் பரந்த மக்களிடையே புரட்சிகர நனவு வளர்வதை தடுக்கும் வகையில் அரசியல் குழப்பம் நிலவிய காலத்தில் செந்தில் வரலாற்றுப் பிரச்சினைகளை ஆழ்ந்து கவனிப்பதில் அயரா ஆர்வம் காட்டினார் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ் தொழிலாளர்கள் இந்த நெருக்கடியில் இருந்து வெளியேறுவதற்கான பாதை மற்றும் நோம் எப்படி போரை நிறுத்த முடியும்ய் என்பது பற்றி செந்திலுடன் பல விவாதங்கள் நடத்தியதை அமுதன் நினைவு கூர்ந்தார். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் செந்தில் விவாதங்களை ஆரம்பித்தபொழுதே, அவருக்கு இலங்கையில் உள்ள தேசியவாத மற்றும் தொழிலாள வர்க்க-எதிர்ப்பு அமைப்புக்களின் பங்கு பற்றி நன்கு அறிய முடிந்தது. தீவு பற்றிய அனைத்துலகக் குழுவின் சர்வதேச முன்னோக்கு, ஸ்ராலினிச அமைப்புகள் மத்தியில் பீதியை தூண்டிவிட்டது. உதாரணமாக ஸ்ராலினிச பிரெஞ்சு தமிழ் இலக்கிய வட்டம் சேழத்தில் ட்ரொட்ஸ்கிச அபாயம்ய் என்ற தலைப்போடு பிரசுரத்தை வெளியிட்டது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சர்வதேச முன்னோக்கை நன்கு கிரகித்திருந்த செந்தில் பல நேரமும், இலங்கை பிரச்சினை இலங்கையில்



படிப்பகம்

www.padippakam.com

தொடங்கவுமில்லை; அதற்கான தீர்வையும் இலங்கைக்குள் காணமுடியாதுயு என அடிக்கடி கூறினார். இலங்கையிலோ அல்லது பிரான்சிலோ ஒரு தேசிய முன்னோக்கில் இருந்து எப்பிரச்சினையையும் அவர் ஆரம்பிக்கவில்லை.

இங்கிலாந்தில் செந்திலின் இறுதிச் சடங்குகளில் நிகழ்த்தப்பெற்ற உரைகளில் இருந்து ஐரோப்பாவில் வசிக்கும் கட்சித் தோழர்கள் எந்த அளவிற்கு செந்திலின் அரசியல் வாழ்வு பற்றி ஆழ்ந்த மதிப்புக் கொண்டிருந்தனர் என்பதை தான் அறிந்ததாக விஜே டயஸ் கூட்டத்தில் தெரிவித்தார்.

‘1969ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த செந்தில், தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு குழந்தையாக வளர்ந்தார். இத்தொழிலாளர்களின் முன்னோர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து இலங்கையில் பிரிட்டிஷாருக்கு சொந்தமான இரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொண்டுவரப்பட்டனர். ஆனால் 1948ல் விடுதலை பெற்ற நேரத்தில் மக்கட்தொகையில் 12 சதவிகிதத்திற்கும் மேலாக இருந்த இத்தொழிலாளர்கள், குடியுரிமை, வாக்குரிமை ஆகியவற்றை புலம்பெயர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் இழந்தனர்.யு இதுதான் கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக குருதி கொட்டும் உள்நாட்டுப் போர் என்ற வடிவத்தில் நாட்டை சூழ்ந்துள்ள வகுப்புவாத சகதியின் தொடக்கம் ஆகும்.

ட்ரொட்ஸ்கிச இந்திய போல்ஷிவிக் லெனினிச கட்சியின் ஒரு அங்கமாக இலங்கை பகுதி இருந்தது. அக்கட்சி குடியுரிமை சட்டங்களை அடுத்து எதிர்கால வகுப்புவாதப் படுகொலைகள் பற்றி தொழிலாள வர்க்கத்திற்கு எச்சரிக்கை கொடுத்திருந்தது என்று டயஸ் விளக்கினார். ஆனால் 1950களின் நடுப்பகுதி அளவில், இலங்கைப் பகுதி, லங்கா சம சமாஜக் கட்சி என்ற பெயரை மீழவும் கொண்டு பாராளுமன்ற வாதத்தை தழுவி, முதலாளித்துவ கட்சியான சிறீலங்கா சுதந்திர கட்சி (SLFP) க்கு ஆதரவு கொடுத்து, அதன் மூலம் மே1956ல் தமிழர்களுக்கு எதிரான வகுப்புவாத வன்முறையை தூண்டிவிட்டிருந்த பண்டாரநாயக்கவின் அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்பை நீடித்தது.யு

டயஸ் விளக்கினார்: «LSSP இன் அரசியல் பின்வாங்கல் அப்பொழுது ஏர்னஸ்ட் மண்டேலின் தலைமையில் இருந்த பப்லோவாத சர்வதேச செயலாளர் குழுமத்திடம் இருந்து முழு ஆதரவையும் பெற்றிருந்ததுயு. அது முதலாளித்துவ கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் திருத்தல்வாத வழியை முன்னிலைப்படுத்தி, தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனத்திற்கான போராட்டத்தை கைவிட்டது. இச்சந்தர்ப்பவாத அரசியல்தான், LSSP 1964ல், SLFP தலைமையிலான முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்தபொழுது, வரலாற்று காட்டிக் கொடுப்பு என்ற உச்சக் கட்டத்தை அடைந்தது.

ஸ்ராலினிஸ்ட்டுக்கள் மற்றும் மாவோயிஸ்டுகளின் இதேபோன்ற காட்டிக்கொடுப்புக்களே, வலதுசாரி, மற்றும் சர்வாதிகார போக்குடைய அரசாங்கங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் வருவதற்கு வழிவகுத்தன. UNP தடையற்ற சந்தை பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தி 1983ல் இனவாத உள்நாட்டுப் போரையும் கட்டவிழ்த்துவிட்டது.

இந்த அரசியல் சூழ்நிலையில்தான் செந்தில் பிறந்து வளர்ந்தார். ஆரம்பத்தில் அவர் தேமிழர்களுடைய சமூக விடுதலை ஒரு தேசிய பிரிவினைவாத திட்டத்தில்


படிப்பகம்

அடையப்படமுடியும் எனக் கூறிய தமிழ் தேசிய குழுக்கள்பால் ஈர்க்கப்பட்டார்யு என்று டயஸ் விளக்கினார். யசெந்திலுக்கும் தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் பலருக்கும், 1987 நவம்பரில், இலங்கையின் நிலைமையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் பணிகளும்யு என்று நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை அறிவொளியூட்டுவதாக இருந்தது.யு

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலையீடுதான் இலங்கையில் ட்ரொட்ஸ்கிசத்திற்கான போராட்ட தொடர்ச்சிக்கு அடித்தளம் அமைத்து, 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிறுவப்படுவதற்கும், இன்று சோசலிச சமத்துவக் கட்சி போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருவதற்கும் காரணமாக உள்ளது.யு

'இச்சூழ்நிலையில்தான் இலங்கையில் இருக்கும் சோசலிச சமத்துவக் கட்சியும் சர்வதேச அளவில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலகளவில் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களை ஒரு சோசலிச சர்வதேசியத்திற்கான போராட்டத்தில் ஐக்கியப்படுத்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனயு என்று கூறி டயஸ் தனது உரையை முடித்தார்.

'செந்திலை நேசித்து மதித்த பிரிட்டனில் உள்ள, ஆனால் ஸ்கொட்டிஷ் பாராளுமன்றம் மற்றும் வேல்ஷ் சட்டமன்றத்திற்கு SEP பிராந்திய வேட்பாளர் பட்டியலை தேர்ந்தெடுக்க தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதன் காரணமாக இன்று வரமுடியாத நிலையில் உள்ள SEP உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் கிறிஸ் மார்ஸ்டன் தனது வணக்கத்தை தெரிவித்தார்.

'இப்பொழுது நான்காம் அகிலத்திற்குள் தங்கள் வழியைக் கண்டுகொள்ளும் சோசலிசப் போராளிகளின் புதிய தலைமுறையின் முதல் உறுப்பினராக செந்தில் இருந்ததால்யு அவரை முன்னோடி என்று அவர் குறிப்பிட்டார். சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் ஸ்ராலினிச ஆட்சிகள் சரிந்து வந்த நிலையில், சோசலிசம் மடிந்து விட்டது என்று ஒவ்வொருவரும் கூறிய நேரத்தில், செந்தில் இயக்கத்தில் சேர்ந்தார்.

'எமது தமிழ் தோழர்களில் ஒருவரான தயான், வேல்ஷ் சட்டமன்றத்திற்கு ஒரு வேட்பாளராக நிற்கிறார் என்பதில் பிரிட்டிஷ் SEP பெருமிதம் கொள்கிறதுயு என்று மார்ஸ்டன் கூறினார். இலங்கை மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாள வர்க்கத்தின் அனுபவங்களை எமது பிரச்சாரத்தில் கொண்டு வருவதற்கு இது உதவுகிறது. மேலும் ஸ்கொட்டிஷ், மற்றும் வேல்ஷ் தேசியவாதத்தால், குறிப்பாக அனைத்து போலி இடது போக்குகளும் பிரிவினையை ஆதரிக்கும் நேரத்தில், அதன் ஆபத்தான உட்குறிப்புக்கள் பற்றி தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை கொடுக்க இது உதவுகிறது.யு

கடவுளில் போலியான ஆறுதலையோ அல்லது வாழ்விற்கு பிந்தைய நிலை பற்றிய நம்பிக்கையையோ மார்க்சிஸ்ட்டுக்கள் கோரவில்லை எனக் கூறி மார்ஸ்டன் தனது உரையை முடித்தார். மேனித முன்னேற்றத்தின் மேம்பாட்டுக்காக தன்னுடைய வாழ்வை செந்தில் வாழ்ந்தார். அவ்வாறு செய்ததற்காக அவர் நினைவு கூரப்பட்டு பெருமைப்படுத்தப்படவும் செய்வார்.யு

www.padippakam.com

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் இளைஞர்கள் மூன்றாம் உலகத்திற்குயு ஆதரவு தந்த காலம் பற்றி பேசுகையில், இது சோசலிச அடிப்படையில் இல்லாமல் மனிதாபிமான அடிப்படையில்யு செய்யப்பட்டது என்று பீட்டர் சுவார்ட்ஸ் விளக்கினார். இது முதலாளித்துவ தேசியவாதத்திற்கு முட்டுச்சந்தான ஆதவிற்கு வழிவகுத்தது. வளர்ச்சி அடை ந்த நாடுகளில் இருக்கும் தொழிலாளர்களின் சமூக விடுதலைக்கான போராட்டத்தில் ஒடுக்கப்பட்டுள்ள நாடுகளில் இருந்து மிகச்சிறிய தொழிலாளர்களே பங்கெடுத்தனர். செந்தில் அத்தகைய மனிதர் ஆவார். இருப்பினும் அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னோக்குகளின் இதயத்தானத்திற்கு சென்றது. ஒடுக்குமுறை மற்றும் வறுமையானது, எல்லாவற்றிற்கும் மேலாக ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள அனைத்து தொழிலாள வர்க்கம் உள்பட, சர்வதேச அளவில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்டத்தின் மூலமே முடிவுகட்டப்பட முடியும்.

2003ல் ஈராக்கிய போருக்கு எதிரான உலகந்தழுவிய இயக்கத்திலிருந்து வளர்ந்துவரும் வெகுஜன எதிர்ப்பு இயக்கத்தின் அடையாளங்களை சுவார்ட்ஸ் சுட்டிக் காட்டினார். அதேபோல் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளுக்குள்ளே, குறிப்பாக பிரான்சில், ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை எதிர்த்து மிகப் பெரிய அளவில் இடைவிடாமல் வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருவதையும் கூறினார். ஆயினும்கூட தொழிலாள வர்க்கம் அரசியல் ரீதியாக வாக்குரிமை பறிக்கப்பட்டு உள்ளது.

இப்படி தொழிலாளர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டு இருக்கும் நிலையை முறியடிக்கும் பணிக்கு செந்தில் தன்னை அர்ப்பணித்தார் என்று சுவார்டஸ் கூறினார். இதற்கு போலி இடதுகளுக்கு எதிராக சமரசமற்ற போராட்டம் தேவை என்பதை அவர் உணர்ந்தார். பிரான்சில் இருப்பது போல், முதலாளித்துவம் தன் பிடியில் பல போலி இடது கட்சிகளை கொண்டு, மார்க்சிச முன்னோக்கிலிருந்து தொழிலாள வர்க்கத்தை தனிமைப்படுத்தும் நாடு அரிதாகத்தான் இருக்கமுடியும். தன்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்தே செந்தில் இத்தகைய சந்தர்ப்பவாதத்திற்கு எவ்வளவு அதிக விலை கொடுக்க நேரிடும் என்பதை உணர்ந்திருந்தார்.

அவருடைய தனிப்பட்ட வாழ்வு மிகப் பெரிய அளவிற்கு LSSP இன் வரலாற்றுக் காட்டிக் கொடுப்பின் விளைபயன்களால் பாதிக்கப்பட்டிருந்தது. செந்தில் பாரிசில் பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ இடதின் சந்தர்ப்பவாதக் கொள்கைகளை எதிர்ப்பதில் எவ்வாறு ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார் என்பதை சுவார்ட்ஸ் நினைவு கூர்ந்தார்.

வரலாறு மற்றும் தத்துவார்த்த பிரச்சினைகள் பற்றிய செந்திலின் பேரார்வத்தையும் சுவார்ட்ஸ் வலியுறுத்தினார். தொழிலாளர் வர்க்கம் வரலாற்றின் படிப்பினைகளில் இருந்து கற்றுக் கொள்ளாவிட்டால் மீண்டும் அதே துன்பியலான விளைவுகளை அனுபவிக்க நேரிடும் என்றார். தொழிலாள வர்க்கத்தின் ஞாபகப் பொக்கிஷமாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உள்ளது. செந்திலுடைய நினைவைப் போற்றும் வகையில், அவர் வழிநடத்திய போராட்டத்தை தொடர்வதன் மூலம்தான் சாதிக்கமுடியம் எனக் கூறி சுவார்ட்ஸ் தனது உரையை முடித்தார்.


படிப்பகம்

www.padippakam.com

# பசுமையான நினைவுகள்

*''எந்த சூழ்நிலையில் நான் மரணித்தாலும், நான் கம்யூனிச எதிர்காலத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் சாவேன். மனிதனில் மற்றும் அவனது எதிர்காலத்திலான இந்த நம்பிக்கை, இப்பொழுதும் கூட எனக்கு அத்தகைய எதிர்க்கும் சக்தியை கொடுக்கின்றது. அது எந்தவொரு மதத்தாலும் கொடுக்க முடியாததாகும்....... சுவரின் அடியில் புற்களின் தெளிவான பச்சைக் கீற்றுக்களையும் சுவருக்கு மேல் தெளிவான நீல வானத்தையும் எல்லா இடங்களிலும் சூரிய வெளிச்சத்தையும் என்னால் காண முடிகிறது. வாழ்க்கை மிக அழகானது. அதை எல்லா தீங்குகள், ஒடுக்குமுறைகள், மற்றும் வன்முறைகளில் இருந்து தூய்மைப்படுத்தி அதை எதிர்கால சந்ததியினருக்கு முழுமையாக அனுபவிக்க விடுங்கள்.'' L. Trotsky February 27, 1940 Coiyoacan.*

ஒரு முறிவடையா வரலாற்று தொடர்ச்சியை பேணும் புரட்சிகர மார்க்சிய இயக்கத்தின் பால் ஆகர்சிக்கப்படும் மனிதன் மிக ஆழமான அறிவுப் புலனும், நேர்மையும், அழகியல் உணர்வும், ஒழுக்கத் தரமும் கொண்டவனாக இருக்கிறான். சிறுவயதில் சிந்தனை வயப்பட்டு அதற்கு நேர்மையாக இருந்தவனாக இருக்கிறான். அவனால் மட்டும்தான் ஒரு உண்மையான மார்க்சிய இயக்கத்தை நோக்கி நகரமுடிகிறது.

தோழனே, மேற்காணும் குறிப்பின் ஆழமான விளக்கத்தினை உனது வாழ்வனுபவத்தின் மூலம் தான் நான் உள்ளீர்த்துக் கொண்டேன். 'வாழ்க்கை மிக அழகானது, அடுத்த சந்ததியாவது இதை முற்றாக அனுபவிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் பாட்டன்களின் மாபெரும் அவாவாக இருந்தது'. அவர்களது பேரவாவில் இருந்து எங்கள் அவாவும் வேறுபட்டதாக இருக்கவில்லை. ஆம் தோழனே, நீ அடிக்கடி சொல்வாய், ''தொடர்ந்து மார்க்சிய முன்னோக்கினை தொழிலாளர் வர்க்கத்திற்குள் கொண்டுபோகும் பெரும் பணியைச் செய்ய வேண்டுமானால் குறிப்பாக புரட்சியாளர்கள் வளமாக இருக்கவேண்டும், அதற்காகாக நாம் போராட வேண்டும், வளமாக இருத்தல் என்பது பெரும் செல்வத்தை கொண்டிருத்தலல்ல, ஆனால் உயர்ந்த கலாச்சாரத்தை கொண்டிருத்தலாகும்.

உன்னைப்பற்றி நினைக்கும் போது அல்லது உன்னைப்பற்றி வருங்கால சந்ததியிடம் நினைவுகூரும்போது, நான் கண்டிப்பாக அதை ஒரு வரிக்குள் சொல்லிவிட வேண்டுமானால் விஞ்ஞானத்தின் விஞ்ஞானமான எமது மார்க்சிய முன்னோக்கின் பாட்டன் ட்ரொட்ஸ்கியின் வரிகளை ஞாபகப்படுத்துவதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும். ''தனது நோக்கங்களை/பணிகளை தான் வாழும் காலத்தின் எல்லைக்குள் மட்டுப்படுத்தாது வாழும் மனிதனுக்கு மட்டுமே தனிப்பட்ட மாபெரும் திருப்தி அவனது வாழ்வில் சாத்தியமாகிறது''. அந்த அர்த்தத்தில் தோழனே நீ உனது பணிகளை, கடமைகளை எந்த எல்லைகளுக்குள்ளும் மட்டுப்படுத்திக்கொள்ளாது தொலைதூர நோக்குடன் அன்றாடம் வாழப் போராடியவன்.

ஐரோப்பா மற்றும் இந்திய துணைக்கண்ட பாட்டாளி வர்க்கத்திற்கான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் மாபெரும் தலைமையை கட்டுவதற்கான போராட்டத்தில் பங்களிப்பை செய்வதும், போல்ஷிவிக் லெனினிச கட்சியினதும்



படிப்பகம்

www.padippakam.com

அதனைத் தொடர்ந்த தோழர் கீர்த்தியின் பாரம்பரியத்தை மீளஸ்தாபிப்பதே உனது உயரிய நோக்கமாக இருந்தது. அதற்காகவே உனது வாழ்வை அர்ப்பணித்தாய். உன்னை அபிவிருத்தி செய்தாய், எம்மை வழி நடத்தினாய்.

''இளம் பிராயத்தில் இருந்து ரஷ்ய இலக்கிய கர்த்தாக்களான டால்ஸ்டாய், கோர்க்கி, தொல்தாவொஸ்கி என பலரின் படைப்புக்களை படித்து, அதனோடு பலநாட்கள் வாழ்ந்து இருக்கிறேன். சில வேளைகளில் அப்படியே மணிக்கணக்காக வாசித்துக்கொண்டிருப்பேன். அந்த வாசிப்பினை விட்டு விட்டு இடையில் எழும்ப மனம்வராது. இரவாகமட்டும் அப்படியே படித்துக்கொண்டிருப்பேன். காழ்ப்பு, பொறாமை, திகில், அடங்காமை, கர்வம், புரட்சி, பசி, வெட்கம், இழிவு, காதல், காமம், வெறுப்பு, மனிதாபிமானம், உயரிய பண்புகள், உயரிய நோக்கங்களுக்கான அர்ப்பணிப்பு, சுயநலமின்மை இப்படி எல்லாவித உணர்வுகளுக்கும் நான் அவைகளை படிக்கும்போது ஆட்பட்டேன். இவை எதை எனக்கு கற்றுக் கொடுத்தன? மனித வாழ்வை என் உணர்ச்சிகளுக்கு மிக நெருக்கமாக கொணர்ந்தன. அதன் நெழிவு சுழிவுகளில் இருந்து எல்லாவித தன்மைகளையும், மனிதர்கள் முகம் கொடுக்கும் சிக்கலான கணங்களையும், எனது வாழ்வுக்குள் அறியமுடியாத உணர்வுகளையும் எனக்கு கற்றுக்கொடுத்தன. அந்த அர்த்தத்தில் என் ஆன்ம அனுபவத்தை இந்த இலக்கியங்களும், நான் சந்தித்த மனிதர்களும் செழுமைப்படுத்தினார்கள்'' என மிக உணர்ச்சிபூர்வமாகவும், நெருக்கமாகவும் உனது வாழ்வியல் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டாய்.

நீ தீயில் சங்கமித்த அன்றுதான், இறந்துவிட்டாய் என மருத்துவமனையில் நினைவுபெற்றிருந்த நான் கேள்விப்பட்டேன். கடைசியாக விபத்து நடைபெறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் நாம் விவாதித்துகொண்டிருந்தபோது நீ கூறினாய், ''இந்திய துணைக்கண்டத்திற்கான முன்னோக்கினை அபிவிருத்தி செய்வது எமது தோள்களில் வீழ்ந்திருப்பதால், எம்மால் அந்தப்பெரிய பணியை எப்படிச்செய்ய முடியும் என மலைத்து நிற்காது, லெனின் குறிப்பிட்டது போல், 'எமது குறைபாடுகளை அறிந்துகொள்வதே அதை நிவர்த்தி செய்வதற்கான முதல் படி' ஆகையால் நாம் குறைபாடுகளை (குறைபாடுகள் என குறிப்பிடுவது ஆழமான ஆங்கில மொழியாளுமை இன்மை, இருபதாம் நூற்றாண்டின் உலக மற்றும் இந்திய காலனித்துவத்திற்கு பிற்பட்ட கால வரலாற்று பாடங்கள் பற்றிய ஆழமான விளக்கமின்மை) நிவர்த்தி செய்துகொண்டு முன்னேற வேண்டும், காட்டாறுகளாக எம்மை நோக்கி அணிதிரளும் இளம் தலைமுறையை மலைப்பாறைக் கற்களாக நின்று வழிநடத்த வேண்டும், வரலாற்று அறிவூட்டி அவர்களை உயர்ந்த காரியாளர்களாக பயிற்றுவிக்க வேண்டும், அதற்காக நாம் எம்மை அபிவிருத்தி செய்யவேண்டும்.''

அனைத்துலகக் குழுவுடன் இணைந்து மார்க்சியத்தினை ஆழமாக கற்றுக்கொள்ளவும் தொழிலாள வர்க்கத்தையும் அதன் காரியாளர்களையும் அந்த விஞ்ஞான முன்னோக்கின் அடிப்படையில் அறிவூட்டவும், நனவூட்டவும் நீ போராடியதுடன் நின்றுவிடாது, வாழ்வையும், சின்ன சின்ன அதன் சுகானுபவங்களையும் சொட்ட சொட்ட இரசித்து, அந்த இரசனையை எமக்கும் கற்றுக்கொடுத்து, அப்படி வாழ்வதற்கு நித்தம் போராடி மற்றவர்களையும் அப்படி வாழ்வதற்கு உற்சாகப்படுத்தி உண்மையான



படிப்பகம்

www.padippakam.com

சோசலிச நனவுடன் அன்றாடம் இருக்க போராடிய புரட்சியாளனே, சிறந்த எண்ணங்களுடன், உயர்ந்த பண்புகளுடன் வாழ்ந்தவனே, நீ எம்மிடம் விட்டுச் சென்ற தேட்டங்களை நாம் பாதுகாத்து உனது குழந்தைகளுக்கும், வருங்கால சந்ததிக்கும் கொண்டு செல்வோம்.

## தோழர் செந்திலுடனான உறவும், அரசியல் மற்றும் வாழ்வியல் அனுபவங்களும்

'1991 ல், சோவியத் யூனியனின் உடைவிற்குப் பின்பு சோசலிசம் செத்துவிட்டது, அதன் மீதான நம்பிக்கைகள் அழிந்துவிட்டன, முதலாளித்துவ தாராளவாத சந்தை உலகம் தான் அற்புதமானது, பணம்தான் அனைத்தையும் உருவாக்குகிறது' என எங்கும் போற்றப்பட்டுக்கொண்டிருந்த நிலைமையில் தான், ஐரோப்பாவில் தனது வாழ்வை செந்தில் தொடங்கினார்.

இக் காலப்பகுதியில், நாம் 16, 20 வயதினை தாண்டிவிடவில்லை. அன்று முக்கியமாக இரண்டு விடயங்கள் எம்மை பாதித்திருந்தன. ஒன்று சீன ஸ்ராலினிசத் தலைமையின் தியானமன் சதுக்கப் படுகொலை மற்றும் கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யாவின் உடைவு. இவை எமது சிறுபிராயத்தில் எமது சிந்தையை பாதித்த மாபெரும் புரட்சியின் மிகப்பிரமாண்டமான நம்பிக்கைகளை தகர்ப்பதாக இருந்தன. அந்த பெரும் நம்பிக்கையின் மீது அதிர்வு ஏற்பட முன்னர், தோழர் செந்திலை இன்னும் பாதித்தது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான நிகழ்வுகளாகும், அனைத்து குட்டி முதலாளித்துவ தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களும் பரந்துபட்ட மக்கள் மத்தியில் அம்பலமாகின. எந்த தீர்வையும் அளிப்பதற்கு அவர்கள் வக்கற்று போயிருந்தார்கள்.

உலக அரங்கிலும் ரஷ்யாவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் தேசிய பிரிவினைவாத போராட்டத்தின் முன்னோக்கினையும், அந்த இயக்கங்ளின் சோசலிச வாய்ச்சவடால்களையும் மக்கள் மத்தியில் அம்பலமாக்கியது. சிறுபிராயத்தில் நாம் வைத்திருந்த நம்பிக்கைகளை தகர்த்த இந்த நிகழ்வுகளை அறியும் ஆவல் எமக்கு ஏற்பட்டது, அறியத் துடித்தோம், அதற்காக போராடினோம், அந்தப் போராட்டத்தில் நாம் பெற்ற பாடங்கள் ட்ரொட்ஸ்கிச முன்னோக்கினை நோக்கிய எமது திருப்பத்திற்கு மிக முக்கியமானவையாக இருந்தன.

1980 களின் இறுதிகளில், தமிழ் தேசிய பிரிவினைவாத இயக்கங்களில் இருந்து வந்தவர்கள், இலக்கிய சந்திப்பு என்பதன் கீழ் அணிதிரண்டு அதனை நடாத்திக் கொண்டிருந்தனர். இருந்தபோதும், இந்த அமைப்பினை ஸ்தாபிப்பதற்கு நனவான முறையில் அடித்தளமிட்டவர்கள், ஸ்ராலினிச, மாவோயிச மற்றும் குறிப்பாக லங்கா சமசமாஜ கட்சியில் இருந்து வந்த பாப்லோவாத குட்டி முதலாளித்துவ பிரிவினராகும். 1964 ம் ஆண்டு லங்கா சமசமாஜ கட்சியின் மாபெரும் காட்டிக்கொடுப்புத்தான் இலங்கைத் தீவில் மட்டுமல்ல ஆசியாவில் ஏற்பட்ட தொழிலாள வர்க்கத்தின் மாபெரும் அழிவுகளுக்கு காரணமாக இருந்தது. இதன் பின்னர்தான் இலங்கையில் பேரினவாதத்தின் அபிவிருத்திக்கும், பிரிவினைவாதத்திற்கும் பாதை திறந்துவிடப்பட்டது. இந்தக் காட்டிக்கொடுப்பிற்கு எதிராக 1968 இல், தோழர் செந்தில் பிறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர்தான் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி



படிப்பகம்

www.padippakam.com

இயக்கமான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கீர்த்தியின் தலைமையின் கீழ் அனைத்துலகக் குழுவின் ஒரு பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது.

தமிழ் சிங்கள் மற்றும் முஸ்லீம் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இந்தக் காட்டிக்கொடுப்புக்கு எதிராக விட்டுக்கொடுப்பற்ற போராட்டத்தை அது செய்ததுடன், தமிழ் சிங்கள் முஸ்லீம் சமூகத்தில் இருந்து வந்த பாட்டாளி வர்க்கத்தின் நனவான பகுதியினரை அது வென்றெடுத்திருந்தது. நீண்டதும் கடினமானதுமான காலகட்டத்தில் சளையாத அவர்களது அர்ப்பணிப்பு நிறைந்த போராட்டத்தில் தான் நாம் ஐரோப்பாவில் மார்க்சிச விஞ்ஞானத்தின் முன்னோக்கின்பால் வென்றெடுக்கப்பட்டோம். அதற்கான நன்றியை செந்தில் தனது கவித்துவ வரிகள் மூலம் இலங்கையில் நோய்வாய்ப்பட்டு பின்னர் இயற்கை எய்திய தோழர் இராஜேந்திரனுக்கு தெரிவித்திருந்தார்.

ஐரோப்பாவில் அப்போது கீர்த்தியின் தலைமையின் கீழ் வென்றெடுக்கப்பட்ட தமிழ் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐரோப்பாவில் தமது பணியினை நடாத்திக்கொண்டிருந்தனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மத்தியில் அனைத்துலகக் குழுவின் மற்றும் கீர்த்தியின் இந்த நனவான தலையீடானது மாபெரும் அதிர்வை உண்டு பண்ணியது. இந்த அபிவிருத்திக்கு எதிரான நனவான எதிர்ப்பு 'இலக்கிய சந்திப்பின் கீழ் அணிதிரண்டவர்களால்' முன்வைக்கப்பட்டது. 'சமூகத்தை ஜனநாயகப்படுத்தல்', 'ஜனநாயகத்திற்கான போராட்டம்', 'இலக்கியம்' என்ற போர்வையின் கீழ் அவர்கள் எல்லோரும் அணிதிரண்டார்கள். அவர்கள் கொண்டு சென்ற அரசியலானது தொழிலாள வர்க்க சர்வதேசிய வாதத்திற்கு எதிராக இருந்ததுடன், தேசிய பிரிவினைவாத இயக்கங்களுக்கு அழுத்தம் கொடுத்து ஜனநாயகப்படுத்தலாம் என்ற போக்கினை, அபிவிருத்தி செய்வதாக இருந்தது.

சர்வதேசிய வாதத்தையும், உலகத் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன நலன்களை பேணிய அனைத்துலகக் குழு, ஐரோப்பாவில் புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் தனது ஆளுமையை ஸ்தாபிப்பதை கண்டு நனவான முறையில் சமசமாஜ கட்சியின் காட்டிக்கொடுப்புக்கு எதிராக போராடாது பாலத்தம்புவின் தொழிற்சங்க வாதத்தினை அணைத்துக்கொண்ட ஆதரவாளர்களும் மற்றும் ஸ்ராலினிச, மாவோயிச ஆதரவாளர்களும் நடுங்கினர். பழைய துரோக தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வந்த இலக்கிய குழுவின் ஸ்தாபகர்கள் அன்று குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் பேரழிவுகளில் இருந்து தப்பிவந்த இளம் தலைமுறை எழுப்பிய ஆழமான கேள்விகளை நனவான முறையில் கொச்சைப்படுத்தி, திசைதிருப்பி விட்டதுடன், எம்மைப்போன்று நனவான தீவிர விஞ்ஞான, தத்துவக் கோட்பாட்டுத் தேடல் கொண்ட இளம் தலைமுறையினரையும் அதற்குள் கட்டிப்போட முயன்றனர்.

அவர்களின் 'ஜனநாயகப்படுத்தல்', பெண்ணியம்', 'தலித்தியம்' போன்ற கருத்தியலுக்கு அப்பால் சிந்தித்தவர்களை கற்பனாவாதிகள் என்று தூற்றினர். 1980 களில் பிரிவினைவாத இயக்கங்கள் ஐரோப்பாவிலும், இலங்கையிலும் இளைஞர்களை வென்றெடுக்க, 'பொங்கலுக்கு தமிழீழம் மலரப்போகுது, வாருங்கள்' என்று அழைத்ததைப்போல்தான், 'இந்தா நாங்கள் புது ஜனநாயக அமைப்பினை கட்டப்போகிறோம், புது புத்தகம் விடப்போகிறோம்' என்று எமக்கு அவர்கள் உல்டா விட்டார்கள். இவர்களது எவரது வாதமும் எம் ஆழமான தேடல்களை



படிப்பகம்

www.padippakam.com

திருப்திபடுத்துவதாக இருக்கவில்லை. மாறாக கொச்சைப்படுத்துவதாகவே இருந்தன. ஆழமான வரலாற்று கேள்விகளுக்கு, தனிப்பட்ட மனிதர்கள் மீதான தூற்றல்களையும் விதண்டாவாதங்களையு ம்தான் எமது தேடல்களுக்கு பதிலாக தந்தார்கள்.

ஸ்ராலினிசத்தின் குற்றவியல் பாத்திரத்தின் ஒரு பகுதியான கிட்லரின் வருகையும் அதைத் தொடர்ந்த படுகொலைகளும், இரண்டாம் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவும், தொழிலாள வர்க்கத்தினை 1968 களில் உலகெங்கும் நடைபெற்ற எழுச்சிகரப் போராட்டங்களை சமூக ஜனநாயகமும் ஸ்ராலினிசமும் மீண்டும் காட்டிக்கொடுத்ததன் விளைவு புத்திஜீவித மட்டத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. இதன் சீரழிவில் பின்நவீனத்துவ போக்குகள் பிரான்சிலும் உலகெங்கிலும் அபிவிருத்தி கண்டன.

பிரான்சின் பின்நவீனத்துவ போக்குள் ஒன்றின் தத்துவவாதி பூகோ (Foucault) எழுதிய, ''மாபெரும் மறுப்புக்கான இடமேதும் இங்கில்லை, புரட்சியின் ஆன்மாவோ, அனைத்து கிளர்ச்சிகளின் மூலமோ அல்லது தூய புரட்சிகர விதியோ இங்கில்லை. பதிலீடாக எதிர்ப்பின் பன்முகத்தன்மை இங்கு இருக்கிறது. அவைகளில் ஒவ்வொன்றும் ஒரு பிரத்தியேகமான தன்மையுடன் இருக்கின்றன.'' என்பதை மேற்கோள்காட்டிவிட்டு, உலக சோசலிச வலைத்தளத்தில் பின் நவீனத்துவ போக்கு பற்றி எழுதிய தனது ஆய்வுக் கட்டுரையில் ஸ்ரென்பேர்க் குறிப்பிடும்போது, CDeleuze, Guattari and Lyotard உடன் இணைந்து பூகோ நுண்ணிய-அரசியல் மற்றும் நுண்ணிய (micro) போராட்டங்களுக்கான அபிவிருத்தியின் அவசியத்திற்கு அழுத்தம் கொடுக்கிறார். இப்படியான ஒரு மூலோபாயம், தனியொரு விடயங்களுக்கான அரசியல் போக்குகளுக்கு ஷெ பிரிவினைவாதிகள், ஒவ்வொரு வகையறாக்களைச் சேர்ந்த தேசியவாதிகள், சுற்றுச் சூழல்வாதிகள், பெண்ணிலைவாதிகள் மற்றும் இவ்வாறானோருக்கு வக்காலத்து வாங்குவதற்கான ஒரு தெளிவான அழைப்பைக் கொண்டிருக்கிறது.'' என்றார்.

உண்மையில் பூகோவின் கருத்தியலை வாந்தி எடுப்பதாகவும், ஏதோவொரு வகையில் இந்த சிந்தனைச் சீரழிவின் ஆளுமையை பிரதிநிதித்துவப் படுத்துவதாகவே ஐரோப்பாவில் 'இலக்கியம்' என்ற பெயரில் ஒன்று கூடிய தமிழ் குட்டி முதலாளித்துவ தட்டுக்களின் நோக்கமாக இருந்தது. இந்த வகையில் பின்நவீனத்துவ கருத்தியலின் சாராம்சத்தைதான் அவர்கள் அனைவரும் கொண்டாடினார்கள். தோழர் செந்தில் சர்வதேசியவாதத்திற்கும் மார்க்சியத்திற்கும் எதிரான இந்தப்போக்கினை நிராகரித்ததுடன், அனைத்துலகக் குழு உறுப்பினர்களுடன் தனது தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார்.

1926ல் ஸ்ராலின், புகாரின் ஆகியோரின் 'தனியொரு நாட்டில் சோசலிசம்' என்ற கோட்பாடு, உலக சோசலிசப்புரட்சி வேலைத்திட்டத்தினை கைவிடவும் ஸ்டாலினிச அதிகாரத்துவம் தனது சொந்தச் சட நலன்களுக்கு அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தினைக் கீழ்ப்படுத்தவும் சித்தாந்த அடிப்படையை வழங்கியது. இந்தக் காட்டிகொடுப்புகளின் தாக்கம் உலகெங்கும் என்னவாக இருந்தது என்பதை நாம் கற்றபோது தான் எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தீர்மானகரமான முடிவுகளையும் எடுத்தோம். இந்த முழு வரலாற்றினையும் உயிரில் இருத்தாமல் முதலாளித்துவ கருத்தியலுக்கும் துரோக கும்பலின் வாய்ச் சவாடல்களுக்கும் எதிராக போராட முடியாது என்பதை நாம் அறிந்துகொண்டோம்.



படிப்பகம்

www.padippakam.com

அதே நேரத்தில், ரஷ்ய புரட்சியில் ட்ரொட்ஸ்கியின் நிலைப்பாடு என்னவாக இருந்தது என்பதை அறிந்துகொள்ள அன்று தமிழில் எம்மிடம் இருந்த ஒரேயொரு ஆவணம் டேவிட் நோர்த் கீர்த்தி பாலசூரியாவுக்கு எழுதிய நினைவுப் பேருரைதான். அந்த ஆவணம் கீழ்க்காணும் மையப்புள்ளி அனைத்தையும் பிரித்து ஆராயவும், விளங்கவும் எமக்கு பாதை திறந்துவிட்டது. மாபெரும் மார்க்சிய மேதைகளான லெனின், ட்ரொட்ஸ்கி, ரோசா லக்சம்பேர்க் இவர்களுக்கிடையில் இருந்த வேறுபாடு என்னவாக இருந்ததென்றால், எப்படி புரட்சியை செய்வது, எந்த வர்க்கம் இதற்கு தலைமை வகிக்கும் என்ற புள்ளியில் தான் இருந்தது.

நோர்த் எழுதுகிறார், ''லெனினின் சூத்திரம் உண்மையில் பிளாக்கானோவினதைக் காட்டிலும் பெரிதும் தீவிரத் தன்மை கொண்டதாகவும் அதன் உபாயப்போக்கு முற்றிலும் வேறுபட்டதாயும் விளங்கியது... எவ்வாறெனினும் லெனினின் அரசியல் முன்னோக்கில் ஒரு பொருத்தமின்மை காணப்பட்டது. தொழிலாளி வர்க்கத்துக்கு எவ்விதமான சுயாதீன பாத்திரமும் வழங்குவதை மறுத்த பிளாக்கானோவின் சமரசப்போக்கில் இருந்து இது தெளிவாகப் பிளவுபட்டு நின்றபோதிலும், புரட்சி முதலாளித்துவச் சொத்தினுள் ஊடுருவுவதை லெனினின் முன்னோக்கு முன்னறிவிக்கவில்லை. மேலும் இரண்டு வர்க்கங்களின் (தொழிலாளர்கள்- விவசாயிகள்) 'ஜனநாயக சர்வாதிகாரம்' என்ற கருத்துப்பாடு இயற்கையிலேயே தெளிவற்றதாய் விளங்கியது.

மிகவும் தீவிரமானதும் உள்ளார்ந்த ரீதியில் பெரிதும் உறுதியானதுமான மூன்றாவது கருத்துப்பாடு ட்ரொட்ஸ்கியால் முன்வைக்கப்பட்டது. உலக வரலாற்று அடித்தளத்தில் ட்ரொட்ஸ்கி ருஷ்ய முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாடு (காலாவதியான முதலாளித்துவ அபிவிருத்தியைக் கொண்ட அனைத்து நாடுகளையும் போலவே) 1789ம் ஆண்டின் பிரான்சிய முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து அடிப்படையில் வேறுபட்டது என வாதிட்டார். இது இனியும் தனது சொந்த 'முதலாளித்துவ' புரட்சியைச் செய்யும் நிலையில் இருக்கவில்லை. 1848ன் நிகழ்வுகள், ஜனநாயகப்புரட்சியின் பணி தொடர்பான முதலாளி வர்க்கத்தின் மனோபாவம், எல்லாவற்றிற்கும் மேலாக அது வாழ்ந்த சமுதாயத்தின் வர்க்க சக்தியால் நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை எடுத்துக்காட்டின. தொழிலாள வர்க்கத்தின் பெருக்கம் முதலாளி வர்க்கத்துக்கு ஸார் எதேச்சதிகாரத்தினைக் காட்டிலும் பெரும் ஆபத்தை தோற்றுவித்தது.

மேலும், விவசாயிகள் சுயாதீனமான அரசியல் பாத்திரத்தினை வகிக்க இலாயக்கற்றவர்களாக விளங்கினர். அதன் அரசியல் பாத்திரம் எவ்வளவுதான் செல்வாக்கு மிகுந்ததாக இருந்தபோதிலும் அதனால் இன்னொரு வர்க்கத்தின் முன்னோக்கின் மீது மட்டுமே செயல்பட முடியும். ஆதலால், ஜனநாயகப் புரட்சியில் தீர்க்கமான பாத்திரத்தினை தொழிலாள வர்க்கமே வகிக்க வேண்டியதாக இருந்தது. அத்தோடு, அதனைத் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவில் மட்டுமே சாதிக்கவும் முடியும். மேலும் தொழிலாள வர்க்கம் தன்னை வெறும் ஜனநாயகப் பணியுடன் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், அது முதலாளித்துவச் சொத்தினுள் ஊடுருவ கட்டாயப்படுத்தப்படுமாதலால் ஜனநாயகப் புரட்சி மேலும் மேலும் அப்பட்டமான சோசலிசத் தன்மையைப் பெற்றுக்கொள்ளும். ருஷ்யாவில் தொழிலாள வர்க்கப் புரட்சி, உலகம் பூராவும் வெடிப்புமிகுந்த அதிர்வினை உருவாக்கும். ருஷ்யாவில் தொழிலாள வர்க்க ஆட்சியின் உயிர் நீடிப்பும், ஒரு பின்தங்கிய சமுதாயத்தில் சோசலிச



படிப்பகம்

www.padippakam.com

நிர்மாணத்தின் சாத்தியமும் புரட்சியை அதன் எல்லைகளுக்கு அப்பால் விஸ்தரிப்பதிலேயே தங்கியுள்ளதாக ட்ரொட்ஸ்கி வாதிட்டார்.

1939ம் ஆண்டு வெளிவந்த 'ரஷ்ய புரட்சி பற்றிய மூன்று கருத்துருக்கள்யு என்ற கட்டுரையில் ட்ரொட்ஸ்கி பின் வருமாறு கூறினார்: 'ரஷ்யாவில் ஜனநாயகப் புரட்சியின் பூரண வெற்றி விவசாயிகளை ஆதாரமாகக்கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார வடிவத்தில் மட்டுமே எண்ணிப்பார்க்கக் கூடியது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அது தப்பமுடியாதபடி நாளின் நடப்பாக ஜனநாயக கடமைகளை மட்டுமல்லாமல் சோசலிச கடமைகளையும் முன்வைக்கும், அதேசமயம் அது சர்வதேச சோசலிசப் புரட்சிக்கும் ஒரு சக்திவாய்ந்த உந்துதலை வழங்கும். மேற்கில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி மட்டுமே ரஷ்யாவில் முதலாளித்துவம் மீண்டும் கொண்டு வரப்படுவதிலிருந்து பாதுகாத்து சோசலிச கட்டுமானத்தை அதன் பூரணப்படுதலுக்கு கொண்டு செல்வதற்கான சாத்தியத்தை உத்திரவாதம் செய்யும்.யு

ரஷ்ய புரட்சிக்கு என்ன நடந்தது என்ற கேள்விகளுக்கான பதில் எமக்கு கிடைத்தபோது நாம் அடைந்த மகிழ்ச்சியானது, பூமியில் பிறந்ததன் உண்மையான அர்த்தம் புரிந்துவிட்டவனுக்கு கிடைத்த மகிழ்ச்சி போன்றதாகும். உண்மையில் வரலாறு என்பது எவ்வளவு முக்கியமானது என்பதும் அதை அறியாமல் எது சரி, எது பிழை என்பதை கணித்துவிட முடியாது என்ற முடிவும் எமக்கு மிகவும் தீர்க்கமாக இருந்தது. ஆதலால், மார்க்சிய இயக்கத்தின் முழு வரலாற்றையும் அறிய முற்பட்டதும், ரஷ்ய புரட்சி எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் செய்யப்பட்டது என்ற முடிவும்தான் எமக்கு ட்ரொட்ஸ்கியின் கோட்பாட்டின் பால் ஆழமான ஈர்ப்பை தந்தது.

சமூக ஜனநாயகத்தினதும், ஸ்ராலினிசத்தின் துரோக பாத்திரம் என்னவாக இருந்தது என்பதை அறியவேண்டுமானால், ரஷ்யாவிலும் உலகெங்கும் தொழிலாள வர்க்கம் எப்படி காட்டிக்கொடுக்கப்பட்டது, என்ன விலைசெலுத்தியது என்ற வரலாற்றினை அறியாமல் புரிந்துகொள்ள முடியாது. குறிப்பாக இரண்டாம் அகிலத்தின் ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சி 1914 இல் 'தந்தை நாட்டை காப்பாற்று' என்ற பிரகடனத்தின் கீழ் யுத்தத்திற்கு ஆதரவளிக்க பாராளுமன்றத்தில் வாக்களித்து தொழிலாள வர்க்கத்தை காட்டிக்கொடுத்த தானது, முதலாம் உலக யுத்தத்தை நீடிக்க மட்டும் செய்யவில்லை, 20 நூற்றாண்டினை பேரழிவுகளுக்கு இட்டுச்சென்றது. ஸ்ராலிச அதிகாரத்துவத்தின் அபிவிருத்தியும் இந்த காட்டிக்கொடுப்போடு ஆழமாக தொடர்புபட்டிருந்தது. பீட்டர் சுவார்சின் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், 'இந்த அடிப்படையில் ஜேர்மன் புரட்சி சமூக ஜனநாயகத்தால் கழுத்தறுக்கபட்டதானது, சோவியத் யூனியனின் இளம் சோசலிச அரசை தனிமைப்படுத்தியது, இதனால் நீடித்த தனிமையும் அதன் பின்தங்கிய நிலைமையும் ஒரு அதிகாரத்துவ புற்றுநோய்க்கு வழிதிறந்துவிட்டது.' அதிகாரத்துவ புற்று நோய் பாட்டாளி வர்க்க அரசினை கட்டுப்படுத்தியது. 'அதன் தலைவராக ஸ்ராலின் வந்தார். முழு அரசியல் அதிகாரத்தையும் தனது கையில் கொணர்ந்ததுடன் இறுதியில், புரட்சிகர சந்ததியை 1930 களில் முற்றாக அழித்தார்'.

ஸ்ராலினிச அதிகாரத்துவத்தின் சடத்துவ நலன்களைப் தொடர்ந்து பேணுவதற்கான முதல் நிபந்தனையாக 1927 இல் சீனாவில் தொடங்கி, 1933 ஜேர்மன் கிட்லரின் வருகை மற்றும் 1936 இல் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ், மீண்டும் 1968 இல் பிரான்ஸ் வரை


படிப்பகம்

www.padippakam.com

ஸ்ராலினிசத்தின் காட்டிக்கொடுப்பு பெரும் அழிவுகளை உலகத் தொழிலாள வர்க்கத்திற்கு கொடுத்திருந்தன. அவரது வார்த்தையில் மீண்டும் சொல்லவேண்டுமானால், 'சமூக ஜனநாயக் கட்சி புரட்சிகர கொள்கையை கைவிடாது இருந்திருந்தால், யுத்தத்திற்கு வாக்களிக்காது இருந்திருந்தால், மிகைப்படுத்தாமல் ஒருவர் சொல்லமுடியும், 20 நூற்றாண்டின் மிகுதி வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும்'.

ரஷ்ய உடைவிற்கும், இன்றைய உலகின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்குமான காரணமென்ன என்ற கேள்விகளுக்கு அனைத்துலக் குழு பொருளாதாரத்தில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்கள் என்ன என்பதுபற்றி ஒரு விஞ்ஞான பூர்வமான, ஆழமான ஆய்வினை 1988 மற்றும் 1995 இல் செய்திருந்ததுடன் எம்மை அதில் படிப்பித்தது. 'பூகோள மயமான உற்பத்தியானது உலகை என்றுமில்லாதவாறு ஒருங்கிணைத்திருக்கிறது. இந்த அடித்தளத்தில் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலாவதியாக்கியது. கணினி தொழில் நுட்பத்தின் அபிவிருத்தியுடன் சேர்ந்து கடந்த இரண்டு தசாப்தங்களாக முதலாளித்துவ உற்பத்தியில் ஏற்பட்ட பிரமாண்டமான அபிவிருத்தியானது உலகப் பொருளாதாரத்தை அடிப்படையில் மாற்றியுள்ளது. புதிய பல்தேசிய நிறுவனங்களின் அபிவிருத்தியும் மற்றும் பூகோள ரீதியாக ஒழுங்கமைக்கப்படும் உற்பத்தியானது இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் மைய *முரண்பாட்டை* மீண்டும் ஒரு தடவை முன்கொண்டு வந்துள்ளது. அதாவது, உலகப் பொருளாதாரத்திற்கும், உற்பத்தி சக்திகளின் பிரமாண்டமான அபிவிருத்திக்கும், முதலாளித்துவ ஆட்சியின் அடிப்படையான தேசிய அரசுக்கும், தனிச்சொத்துடமைக்கும் இடையிலான *முரண்பாடாகும்.'*

'இந்த அடிப்படை மாற்றம் தான், தேசியவாத வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்த இயக்கங்களின் உடைவினையும் விளைவாக்கியது. ரஷ்யாவிலும், கிழக்கைரோப்பாவிலும் ஸ்ராலினிச ஆட்சியினது உடைவானது தேசியவாத வேலைத்திட்டமான தனி ஒரு நாட்டில் சோசலிசத்தினது காலாவதித்தன்மையின் உயர் வெளிப்பாடாகும். அதேமாதிரி முன்னேறிய நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் சமூக நலன்களை பேண இலாயக்கற்றவர்களாக தொழிற்சங்கங்களை ஆக்கியுள்ளதுடன், மூலதனத்தின் கோரிக்கைகளை தொழிலாள வர்க்கத்தின் மீது நிர்ப்பந்திப்பதற்கான தொழிற்சங்கங்களின் பங்காளித்தனமான செயல்பாடானது தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட சீர்திருத்தவாத வேலைத்திட்டங்களையும் காலாவதியாக்கியுள்ளது' என்ற அனைத்துலகக் குழுவின் இந்த அடிப்படை ஆய்வினை தோழர் செந்தில் மிகவும் ஆழமாக விளங்கிக்கொண்டதுடன் அந்த உயர் கோட்பாட்டு விளக்கத்தினை எமக்குள் ஸ்தாபிக்க நித்தம் விவாதிப்பார்.

'தேசிய கேள்வியை பொறுத்தவரை அடிப்படையாக எழும்பிய கேள்வி இதுதான். மனித குலம் முகம் கொடுக்கும் மாபெரும் கேள்விகளான ஒடுக்குமுறை, சமூக சமத்துவமின்மை, யுத்த அபாயங்கள் என்பனவற்றை எந்த அடித்தளத்தில் தீர்க்க முடியும்? இந்தப் பிரச்சனைகள் எதுவும் தேசிய அடித்தளத்திலோ அல்லது புதிய தேசிய அரசுகளை அமைப்பதன் ஊடாகவோ தீர்க்கமுடியாது என 80 வருடங்களுக்கு முன்னரே ட்றொட்ஸ்கி எச்சரித்தார். அதாவது, உற்பத்தி சக்திகள் தேசிய எல்லைகளுடன் தீர்க்க முடியாத முரண்பாட்டிற்கு சென்றதைத்தான் முதலாவது உலக யுத்தமும்



படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக்காட்டியது. உற்பத்தி மூலதனம் தேசிய எல்லைகளை கடந்து, பூகோள ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தி அபிவிருத்தியடைந்திருக்கும் இன்றைய சகாப்தத்தில் அந்த எச்சரிக்கை எவ்வளவு உண்மையானது?' அனைத்துலகக் குழுவின் இந்த அடிப்படையான விஞ்ஞான பூர்வமான விளக்கமானது. எமது எல்லாவித சந்தேகங்களையும் தெளிவுபடுத்தி அந்த அனைத்துலகவாத புள்ளியில் ஒருங்கிணைய எம்மை உந்தியது. தோழர் செந்தில் எழுப்பி விடைகண்டு பின்னர் போராட வெளிக்கிட்ட மாபெரும் படிப்பினையும் கேள்வியும் இதுதான்.

ஒடுக்கப்பட்ட மக்களினதும், மனித குலத்தினதும் உண்மையான விடுதலையென்பது இறுதி ஆய்வில் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் நனவான தலையீட்டில் மட்டுமே தீர்த்துவைக்கப்பட முடியும் என்ற கருத்துரு எம்மைக் கவர்ந்தது. இங்கேதான், எல்லா தேசியவாத போக்குகளுக்கும் எதிராக விட்டுக்கொடுப்பற்ற போராட்டத்தின் மரபியத்தைக் கொண்ட ட்ரொட்ஸ்கிச, மார்க்சிய முன்னோக்குத்தான் எம் பிரமாண்டமான மிகவும் தீர்க்கமான ஆழமான கேள்விகளுக்கு புறநிலை ரீதியான, விஞ்ஞான பூர்வமான பதிலை தருவதாக இருந்தது. நான்காம் அகிலத்தின் இந்த முன்னோக்கினை நாம் தீர்க்கமாக அறிந்த கணம் ஸ்ராலினிச, மாவோயிச ஏனைய குட்டி முதலாளித்துவ போக்குகளுடன் அரசியல் ரீதியான தீர்க்கமான உடைவைச் செய்தோம். அவர்களின் விவாதங்கள் வம்பளப்பதாகவே எமக்குப்பட்டது. தோழர் செந்திலும் நானும் சந்தித்துக்கொண்ட புள்ளி அதுதான்.

இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றோ அல்லது தூரத்து உறவினர்கள் என்ற பிணைப்போ அது எந்து முறையில் என்று இருவருக்கும் தெரியாது அல்லது ஊர்ப்பற்றோ எந்த தாக்கத்தையும் எமது உறவில் உண்டுபண்ணவுமில்லை, அதற்கு அடிப்படையாக இருக்கவுமில்லை. இருவரும் மிக நெருங்கிய புள்ளி ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களினதும், விவாசாயிகளினதும் ஐக்கியம்'' இதுதான் இறுதியில் எம்மை இணைத்த விஞ்ஞானத்தின் விஞ்ஞானத்தில் இருந்து பெற்றுக்கொண்ட மாபெரும் தேட்டம். இந்தப் புள்ளியை அடைவதற்கு இடையில் ஸ்ராலினிச, மாவோயிச ஏனைய குட்டி முதலாளித்துவ தேசிய பிரிவினவாதிகளுடன் தோழர் செந்தில் நடாத்திய போராட்டத்தின் அனுபவங்கள் எமக்கு உறுதுணையாக இருந்தது. கிட்டத்தட்ட சம காலத்தினரான இருவரின் அபிவிருத்தியும் இருவரது தொடர்ச்சியான பரஸ்பர மார்க்சியத்தினை விளக்கிக் கொள்வதற்கான போராட்டத்தில் அடித்தளமிட்டிருந்தன. இந்த உறவுதான் மிக கூட்டான நெருக்கமான தோழமை உறவை எமக்கிடையில் உண்டுபண்ணியது.

விவாதங்களின் போது, நெகிழ்வுத்தன்மை நிறைந்த செந்திலை மிக நெருங்கும் ஒருவர் அவர் ஒரு கொள்கைப் பிடிப்பான மனிதன் என்பதை கண்டுகொள்வர். எப்போதுமே இந்த தன்மையால் தான் எதிரிகள் கூட செந்திலை மதிக்கவேண்டி தள்ளப்பட்டார்கள். ஆனால், மார்க்சிய விஞ்ஞான முன்னோக்கினை குறைமதிப்பீடு செய்யும் எவரையும் அது நெருங்கிய உறவினர்கள், நண்பர்களாக இருந்தால் கூட அவர் மன்னிக்கமாட்டார்.

2000 இல் உலக சோசலிச வலைத் தளத்தின், தமிழ் மொழிக்கான பக்கத்தை உருவாக்க உறுதுணையாக செந்தில் இருந்ததுடன், அதைத் பேணிப் பாதுகாத்து தொடர்ந்தும் தன்னால் ஆன மொழிபெயர்ப்பு வேலைகளையும் அதில் செய்தார். 2002 மற்றும் 2003


படிப்பகம்

www.padippakam.com

இல் பிரான்சில் நடைபெற்ற முக்கிய அரசியல் நிகழ்வில் தீவிரமான முறையில் எம் முன்னோக்கினை கொண்டுபோவதற்கான செந்திலின் பங்கு மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது. எங்கள் பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்கும், ஐரோப்பிய தேர்தலில் பங்குபற்றியபோது ஒவ்வொரு மாநாகர சபை விளம்பரப் பலகைகளிலும் எங்கள் பிரசுரங்களை ஒட்டுவதற்கும் அவரது கார் பாரீசில் ஓடாத இடமேயில்லை. நாம் இரவிரவாக ஓடி ஓடி அதைச்செய்தோம். 2002 பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலில் பிரான்சில் பெரும் நெருக்கடியினை ஏற்படுத்தியது, அதிவலதுசாரி லுபென் இரண்டாவது சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டதானது பாரிய எதிர்ப்பினை மக்கள் மத்தியில் தூண்டியது. மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் தெருவெங்கும் இறங்கி தமது எதிர்ப்பினை தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். நீடித்த இந்த நிகழ்வில் சரியான மார்க்சிய முன்னோக்கினை அனைத்துலக் குழு வைத்தது. தேர்தலை முழு அளவில் பகிஸ்கரிக்குமாறு அழைப்புவிட்டோம். லுபெனுக்கு பதிலாக சிறாக்குக்கு வாக்களிக்கும் படி அனைத்து அரசியல் இயக்கங்களும் கேட்டுக்கொண்டன, நாம் மட்டும் தான் கூறினோம். பெரிய பேய்க்கு பயந்து சின்னப்பேயிடம் போகமுடியாது. இரண்டு பேய்களையும் நிராகரிப்போம், தேர்தலை பகிஸ்கரிப்போம் என அழைப்பிவிட்டு தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் நீண்ட பிரசுரங்களை வினியோகித்தோம்.

இந்த தந்திரோபாயம் பிரான்சின் குட்டி முதலாளித்து இடதுகளை அம்பலப்படுத்தி, தொழிலாள வர்க்கத்துக்கு அரசியல் நனவூட்டும் செயலாக இருந்தது. நனவான தட்டினர் மத்தியில் அது பாரிய தாக்கத்தினை உண்டுபண்ணியது. இதில் எம்முடன் செந்தில் மிக ஆக்கிரோசமாக தலையீடு செய்திருந்ததுடன், உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் தோழர்களுக்கு அந்த அனுபவம் பற்றிய ஒரு மடலை எழுதி, அந்த அனுபவத்தை எல்லோருக்கும் கொண்டு சென்றார். 2003 நிகழ்வும் இதை ஒத்ததாக இருந்தது. அமெரிக்காவின் ஈராக்கின் மீதான் யுத்தத்திற்கு எதிராக உலகெங்கும் மில்லியன் கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் அணிதிரண்ட நிகழ்வானது உலக வரலாற்றில் முதல் தடவையாக இருந்தது. இது உலக தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தில் புதிய வடிவத்தின் ஆரம்பத்தினை கட்டியம் கூறுவதாக இருந்தது. இந்த யுத்தத்திற்கு எதிரான இயக்கத்தில் பிரான்சில் மிக ஆக்கிரோசமாக தலையீடு செய்தோம், தோழர் செந்திலின் பங்களிப்பானது இதில் அளவிடமுடியாது. அவரது கார்தான் எங்கும் எம்மை அழைத்துச்சென்றது. விமான நிலையத்திலிருந்து கட்சியின் சர்வதேச பிரதிநிதிகளை அழைத்து வருவது, பிரசுரங்களை அடிப்பது மற்றும் இதர அரசியல் வேலைகள் வரை அவர் ஈடுபட்டார். அதில் அவரது உற்சாகமும் உறுதியும் நிறைந்த தலையீடானது என்றைக்கும் எம்மால் மறக்கமுடியாது.

தோழர் செந்தில் மிக கலையுணர்வும், கற்பனைவளமும் மிக்கவர். செந்தில் கலைத்துறையில் மட்டுமல்ல விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் கண்டுபிடிப்புகளையும் மிக உன்னிப்பாக கவனித்து வருவார், அதைக் கண்டு புகழாங்கிதம் கொள்வார். தன்னை ஒன்று பாதித்துவிட்டால் போதும், இளம் தோழர்களை அழைத்து தனது வீட்டில் அல்லது வெளியில் கூடி அது பற்றி நீண்ட விவாதம் செய்வார். எந்த தத்துவம் அல்லது கோட்பாடு ஆகினும் அதை முற்றாக விளங்க மட்டும் விவாதிப்பார், ஒன்றைத் தான் விளங்காத பட்சத்தில் சரி என தனது பகுத்தறிவால் விளங்க மட்டும் களைப்பற்று நேர்மையாகவும், மிக சிரத்தையுடன் விவாதிப்பார்.



படிப்பகம்

www.padippakam.com

2002 இல் எங்கள் வலைத்தளத்தில் அல்பேர்ட் ஐய்ன்ஸ்ரைன் பற்றிய கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. அதைபடித்துவிட்டு என்னுடன் ஒரு நீண்ட கலந்துரையாடலை நடாத்தினார். ''செழியன் உலகின் மிக சிறந்த விஞ்ஞானிகளும் கலைஞர்களும் சோசலிசத்தின் பால் கவரப்பட்டுள்ளார்கள் என்பதற்கு இது ஒரு ஆதாரம். நான் அதை மொழிபெயர்க்க உள்ளேன், இந்த உண்மை கூட எமக்கு இப்போதுதான் தெரிகிறது பார். ஐன்ஸ்ரைன் ஒரு விஞ்ஞானியாகவும், அமைதிவாதியாகவும் தான் எமக்கு சொல்லப்பட்டு வந்திருக்கிறது, ஆனால் அவை மட்டும் உண்மையல்ல. அவர் நடைமுறையில் ஒரு சோசலிசவாதியாக இருந்தார் என்பதை இந்த கட்டுரை அம்பலப்படுத்துகிறது'' எனக்கூறிக்கொண்டு, தான் மொழிபெயர்த்த அல்பேர்ட் ஐன்ஸ்ரைனின் வரிகளை படித்தும் காட்டினார், இந்த தனிநபர்களை முடமாக்கும் தன்மையினை நான் முதலாளித்துவத்தின் மிகக் கேடுகெட்ட பேய்த்தனம் என்கின்றேன்... மாணவர்களது மனநிலையில் ஒரு மிகையான போட்டிபோடும் போக்கு உள்ளது, அவர்கள் வெற்றிகளின் பெறுமதிகளை வழிபடுவதற்கு பயிற்றுவிக்கப்பட்டுளள்ளனர்...

'இந்த மோசமான கேடுகெட்ட பேய்த்தனத்தினை ஒழிப்பதற்கு ஒரேயொரு (அழுத்தம் அவரால் வழங்கப்பட்டது) வழி மாத்திரமே உள்ளது, அதாவது ஒரு சோசலிசப் பொருளாதாரத்தினை ஸ்தாபிப்பதன் ஊடாகவே இது நடைபெறமுடியும். இத்துடன் சமூக இலக்குகளை அடையக்கூடிய வகையில் தகவமைக்கப்பட்ட ஒரு கல்வி அமைப்புமுறை ஒருங்கமைக்கப்படவேண்டும் என நான் உறுதிப்பட்டு நிற்கின்றேன். இப்படியான ஒரு பொருளாதாரத்தில், உற்பத்தி சாதனங்களை சமுதாயம் தன்னகத்தே உரிமையாக்கிக் கொள்வதுடன், அங்கே அவை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்படும். ஒரு திட்டமிட்ட பொருளாதாரமானது உற்பத்தியினை சமுதாயத்தினரின் தேவைக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கின்றது, அது செய்யவேண்டிய வேலையினை வேலை செய்ய இயலுமானோர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் அத்துடன் அது ஆண், பெண் குழந்தைகள் அனைவரது வாழ்வுக்குத் தேவையான அனைத்துக்கும் உத்தரவாதமளிக்கின்றது. தனிமனிதனது கல்வியானது இன்னும் அதிகப்படியாக அவனது இயற்கையான செயற்திறனை அதிகரிக்க வைக்கின்றது. இது நம் இன்றைய சமுதாயத்தில் காணப்படும் அதிகார புகழ்ச்சி மற்றும் அதிகாரத்தை வழிபடுவதற்குப் பதிலாக, அவனுக்குள் அவனது சகமனிதர்களுக்காக பொறுப்பேற்கும் ஓர் உணர்மையினை வளர்க்கும் எத்தனிப்பாக இருக்கும்.'' இதை எனக்கு வாசித்துக்காட்டிக் கொண்டிருக்குபோது, ஒரு மாபெரும் விஞ்ஞானி எந்தவித சுயநலமில்லாமல் மனிதகுலத்தின் விடிவை பற்றி சிந்தித்திருக்கிறான் என்ற பெருமையில் அவரின் குரல் குழைகிறது.

இப்படி மாபெரும் விஞ்ஞானிகளுக்குள், சிறந்த கலைஞர்களுக்குள் இருக்கும் உயர்ந்த பண்புகளை, சுயநலமற்ற தன்மையை கண்டுவிட்டால் அவர் நெகிழ்ந்து போய்விடுவார். 'இனிவரும் காலங்களிலும் எமது முன்னோக்கின் உலகளாவிய அபிவிருத்தியினால் இன்றைய மாபெரும் மனிதர்களும் விஞ்ஞானிகளும் கலைஞர்களும் தமக்கு நேர்மையாக இருக்கும் பட்சத்தில் இந்த சமூக அமைப்பினை மாற்றியமைக்க எம்மை நோக்கி வருவார்கள்'' என ஆணித்தரமாக என்னுடன் வாதித்தார். அவர் மார்க்சிய இயக்கத்தின் முழுப்பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்டு, அனைத்து விடயங்களிலும் ஈடுபாடுகொண்டிருந்த ஒரு அசாதரண மனிதனாக இருந்தார். மனித


படிப்பகம்

www.padippakam.com

குலத்திற்கு அவசியமான அனைத்து விடயங்களையும் வரலாற்று மற்றும் இயங்கியல் பொருள்முதல்வாத விஞ்ஞான கோட்பாட்டின் அடிப்படையில் புரிந்துகொள்ள முனைந்தார்.

'சூரியன் அணைந்து விடினும், மனித இனம் அழிந்துவிடா, மனிதன் இன்னொரு சூரியனை சிருஷ்டிப்பான்' என்று தொனிப்படும் ஒரு கவிதையை வாசித்துவிட்டு, 'தன் இருப்பை என்றும் அழியாது உறுதிப்படுத்த இந்த மனிதன் இயற்கையை மட்டுமல்ல பிரபஞ்சத்தையும் வெற்றிகொள்வான் என்ற கலைஞனின் அசையாத நம்பிக்கையைப் பார், எமக்கே புல்லரிப்பை ஏற்படுத்துகிறது. மனிதம் அழிந்துவிடாது இன்னும் பல கோடியாண்டுகளுக்கும் வாழும் என்ற நம்பிக்கைதாண்டா எம்மை வாழ வைக்கிறது, எம் வாழ்வையும் அர்த்தப்படுத்துகிறது, நீதியுடன், சமத்துவத்துடன் என்றென்றும் மனிதம் அழிந்துவிடாது வாழவேண்டும் என்பதற்காக வாழும் வாழ்வில் தான் மனித வாழ்வு மகத்துவம் பெறுவதாக எனக்குப் படுகிறது... எனக்கூறிக்கொண்டு, 'எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை தொனிக்கும் கலைத்துவ கற்பனைக்கும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது, இல்லையா?'' என்ற வினாவை எழுப்பி, 'எனக்கு அப்படித்தான் படுகிறது' என பதிலை எதிர்பார்த்த வண்ணம் முடித்தார்.

அதன் பின்னர் ஒரு நாள் எமது வலைத்தளத்தில் வந்த கட்டுரையை அப்போது படித்துவிட்டு, ''இன்றைக்கு வந்த விஞ்ஞானக் கட்டுரையை படித்துவிட்டியா என வினாவிக்கொண்டு, 'பிரபஞ்சத்தை துருவி ஆராயும் விஞ்ஞானத்தின் அபிவிருத்தி, நான் நினைக்கிறேன், பூமியைப் போன்ற கற்பாறை கோள்களுக்கு பெரிதும் நிகரான கோள்களையும், உயிரினங்களையும் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளின் முயற்சி வெற்றியளிக்கும் பார்.... அது சோசலிச சமூகத்தில் இன்றையிலும் பார்க்க பல மடங்கு விரைவான முறையில் அந்த கண்டுபிடிப்புகளை மனித குலம் சாதிக்கும். அந்த மாபெரும் வெற்றிகளுக்கான தடைக் கல்லாக இருக்கும் தனிச்சொத்து, இலாபம் மற்றும் போட்டிகளை அடிப்படையாக கொண்ட இச்சமூக அமைப்பினை சோசலிசப் புரட்சியின் மூலம் மாற்றியமைப்பதை செய்துவிட்டால் போதும், மனித குலம் பிரபஞ்சத்தை வெற்றிகொள்ள தங்குதடையின்றி முன்னேறிச்செல்லும்.' என எமது வருங்கால வெற்றியின் மீதான அசையாத நம்பிக்கையை வெளிப்படுத்திக்கொண்டு, 'இந்த அர்த்தத்தில் தான் எங்கள் வாழ்வும் அர்ப்பணிப்பும் மிக மதிப்பு மிக்கதாக இருக்கின்றது.' என முடித்தார்.

இப்படி தோழர் செந்திலுக்கும் இளம் தோழர்களுக்கும் இடையில் நடைபெறும் சம்பாசனையில் இருந்து ஒரு ஆழமான மார்க்சிய கோட்பாட்டு விளக்கத்தை அவர்கள் மத்தியில் ஸ்தாபிப்பார். அது இளம் தோழர்களுக்கு பெரும்பாடங்களை கொடுத்திருந்ததுடன், அவர்களை இந்திய துணைக்கண்ட வரலாற்றினை ஒழுங்குமுறையாக படிப்பதற்கும், அது முகம்கொடுக்கும் பிரமாண்டமான பிரச்சனைகளை ஆய்வு செய்வதற்கும், கவனம்கொள்வதற்கும், முன்னோக்கினை வரைவதற்கும் உந்தியுள்ளது. இது அவரது தலைமைத்துவ பண்பை எடுத்துக்காட்டியது.

தோழர் டொம் ஹெனஹனின் 20 வது நினைவுதினத்தில் தோழர் டேவிட் நோர்த் குறிப்படும்போது, ''இந்த அர்த்தத்தில், சோசலிசம் என்பது வெறுமனே ஒரு தொகை



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதார மற்றும் அரசியல் கோரிக்கைகளை சூழ தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவது மட்டுமன்றி, அது பாட்டாளிகளின் மிகச் சிறந்த கலாச்சார இயக்கமுமாகும். ஆனால் இந்த இயக்கம் தன்னிச்சையாக தோன்ற முடியாததாகும். காரியாளர்களின் ஊடாக மட்டுமே தொழிலாளர் வர்க்கத்திற்குள் சோசலிச அரசியல் மற்றும் கலாச்சாரத்தை கொண்டு செல்லமுடியும். காரியாளர்கள், அதாவது சோசலிசத்துக்கான போராட்டத்தை தமது வாழ்க்கையின் மையக் குறிக்கோளாகக் கொண்டுள்ள ஆண்களும் பெண்களுமே, முழு சமூக விடுதலைக்கான ஒரே விஞ்ஞானப் பூர்வமான கொள்கையை எடுத்துச் செல்லும் மனிதர்களாவர். டொம் ஹெனஹனின் மறைவினால் நாம் வருத்தப்படுவது, ஒரு தோழரையும் நண்பனையும் இழந்துவிட்டதால் மட்டுமன்றி, சமூகத் தெளிவு மற்றும் மனித முன்னேற்றத்தின் மதிப்பு மிக்கதும் மீள் பதிலீடு செய்ய முடியாதுமான ஒரு உபகரணத்தையும் இழந்துவிட்டதாலாகும்.'' இந்த வரிகள் தோழர் செந்திலுக்கும் மிகப்பொருத்தமானது.

தோழனே! எம்முடன் இரத்தமும் சதையுமாக மட்டுமல்ல, புரட்சியின் பிளம்பாய், கருத்து பிம்பமாய், தத்துவ பித்தனாய், ஒரு தலைமைத்துவ பண்புடன் எம் ஆன்ம பலமாக இருந்த உன்னை நாம் இழந்துவிட்டோம் என்ற துயரின் வடு மிக ஆழமானது. 13 வருடங்களுக்கு மேல் மிக நெருக்கமாக செயல்பட்டோம் என்ற உறவுக்கப்பால், உலகத் தொழிலாள வர்க்கம் தனது மிகச்சிறந்த போராளியை மிக முக்கியமான கணத்தில் இழந்திருக்கிறது. இந்தக் கணத்தில் உன்னை இழந்தது வரலாற்றுக்கும், மனித குலத்திற்கும் மிகப்பெரும் இழப்பாகும்.

தோழனே! உனது எண்ணங்கள், உனது நம்பிக்கைகள் மிகவும் உன்னதமானவை. உனது வாழ்வு குறுகியதாக இருந்தாலும் மிகவும் அர்த்தம் மிக்கது. நீ எங்களிடம் விட்டுச்சென்ற அனைத்தும் பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும். மனித குலம் அடுத்த கட்டத்திற்கு தன் அடியை எடுத்துவைக்க உன் வாழ்வினை அர்ப்பணித்திருக்கிறாய். அந்த அர்த்தத்தில் உனது வாழ்வு முடிவற்றது, அழியாதது. மனித இதயங்களில் அவை என்றென்றும் உயிர் வாழும்.

விடைகொடு தோழனே! நீ தீயில் சங்கமமாகியதை நான் பார்க்கவில்லை. பாரிய அபாயத்தை தவிர்க்கப்போகிறோம் என்ற நினைப்பில் நாம் இருவரும் காரை விட்டு இறங்கிய கணம் மட்டும் தான் என் நினைவுகளில்... அந்தக் கணம்வரை நீ எமக்குள் ஸ்தாபித்த விளக்கத்தையும், தொழிலாள வர்க்கத்தின் உலகக் கட்சியான அனைத்துலகக் குழுவின் ஆழமான முன்னோக்கினை பரஸ்பரம் விவாதித்து நாம் புரிந்துகொண்டதையும், அதற்காக போராடியதையும், நீ எவ்வாறு நாம் செய்த போராட்டத்திலும் எமது ஒவ்வொரு அபிவிருத்தியிலும் உறுதுணையாக இருந்தாய் என்பதனையும், நாம் வாழ இருக்கும் ஒவ்வொரு நிமிடங்களிலும் வரும் இளம் தலைமுறையிடம், உலகத் தொழிலாள வர்க்கத்திடம் கொண்டு செல்வோம்.

மார்க்சிய விஞ்ஞானக் கோட்பாட்டின் அடிப்படையில் 'தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் ஒன்றுபடுத்தி எல்லாவித ஒடுக்குமுறைகளில் இருந்தும் ஒட்டுமொத்த மனித குலத்தை விடிவிப்பதற்கு போராடிய உலகின் பெரும் போராளிகளில் ஒருவனாய் உன்னை அவர்கள் எப்போதும் நினைவு கூருவார்கள். வரலாற்றில் நீ என்றென்றும் வாழ்வாய்.


படிப்பகம்

சென்று வா தோழனே, உனக்கு என் புரட்சிகர வணக்கங்கள்!

*செழியன்*

பி.கு

இந்த விபத்து பற்றிய விளக்கத்தை சொல்வது எனக்கு அவசியமாக இருக்கிறது. 100 கிலோ மீற்றரில் கார் போய்க்கொண்டிருக்கிறது, முன்னுக்குப் போகும் லாறியை சைற் எடுத்துக்கொண்டு முன்னுக்கு போகலாம் என நினைத்து காரினை திருப்புகிறேன். கார் திரும்பவில்லை. ஸ்ரேறிங்கை மீண்டும் சுத்துகிறேன் கார் திரும்பவில்லை. இதை உடனே தோழர் செந்திலுக்கு தெரியப்படுத்துகிறேன். அவரும் அதனை சுத்திப்பார்க்கிறார். திரும்பவில்லை. ஸ்ரேறிங் சும்மா சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், கார் திரும்பவில்லை. இந்தக் கணத்தில் ஒரு மனிதன் என்ன முடிவெடுக்க முடியும்? எமது முடிவு, முடியும்வரை எப்படியாவது பாதுகாப்பாக காரினை நிறுத்த முயல வேண்டும் என்பதாகும். இதுதான் எமது நோக்கமாக இருந்தது. கோன் அடித்துக்கொண்டே வாகனங்கள் எம்மை முந்திக்கொண்டு வேகமாகப் போகின்றன.

பிரேக்கினை சாதுவாக அழுத்த, அது காரினை கண்டபடி திருப்பி முன்னுக்கு போகும் லாறியில் முட்டப்போனது, இதில் இருந்து நாம் உணர்ந்தது, கண்டபடி பிரேக்கினை அழுத்தாமல், கியரால் மெதுவாக வேகத்தை குறைத்த பின்னர் முன்னுக்கும் பின்னுக்கும் வாகனங்கள் ஏதும் வராதுபோதுதான் காரினை நிறுத்துவது என்பது எமது முடிவாக இருந்தது. அல்லது விபத்து தவிர்க்க முடியாது. ஆகையால், அதையெல்லாம் கணித்து இருவரும் குறிப்பிட்ட நேரத்தில் காரினை நிறுத்தும்போது, கார் சுழன்று நேர் எதிராக வந்து நிக்கிறது. கார் நின்றபோது எம் உடல் தலை எல்லாம் சுற்றுகிறது. உடனே நிமிர்ந்து பார்க்கிறோம், எமது ட்ரக்கில் வெள்ளை நிற வான் ஒன்று வேகமாக வருவதை கவனிக்கிறோம், அது எம்மை வந்து மோதப்போகிறது என்பதை அறிந்தவுடன், 'அடிக்கப்போறான் நிப்பாட்டுவோம்' எனக்கூறிக்கொண்டு இறங்குகிறோம். இதற்கு மேல் எனக்கு எதுவுமே தெரியாது.

இது ஒரு சொற்ப கணத்தில் நடந்த விபத்து. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அகதிகள், உள்நாட்டு தொழிலாளர்கள் மீதான பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறைச் சட்டங்கள், லண்டனுக்கும் பாரிசுக்கும் இடையிலான போக்குவரத்தில் லாப நோக்கத்திலான கட்டுப்பாடுகள் மற்றும் மனிதனின் அவசியமான தேவையைக் கருதி அல்லாமல், லாப நோக்கத்திற்கான போட்டாபோட்டியில் உற்பத்தி செய்யப்பட்ட வாகன இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால் நடு வீதியில், திடீரென அதனை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டோம். நிறுத்திய உடனே, திடீரென நடந்த மோதலில் நாம் பலியானோம், தூக்கி எறியப்பட்டு காயப்பட்டோம். இங்கே கணித்து இயங்குவதற்கு எமக்கு சாதகமான சூழ்நிலையும், கணங்களும் இருக்கவில்லை. ஊகங்கள் செய்வதற்கு எல்லோருக்கும் உரிமையுண்டு. ஆனால், ஊகங்கள் உண்மையாகிவிடாது.

www.padippakam.com

# சர்வதேசப் போராளி
# தோழர் செந்திலுக்கு ஒரு நினைவுக் குறிப்பு

**இந்த நினைவுக் குறிப்பு உலக சோசலிச வலைத் தளத்தின் ஒரு ஆதரவாளரும் செந்திலின் நீண்டகால நண்பருமான கந்தகுமாரினால் எழுதப்பட்டதாகும்**

சென்ற வருடம், இதே மாசி மாதம் ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. மறுமுனையில் ஞானா, மிகவும் பக்குவமாக அந்த கொடூரமான செய்தியை கூறிய போது, எனது காதுகள் அவர் தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பதை சாறிது நேரம் கேட்க மறுத்தன. எனது உடல் குளிர்ந்து நடுங்கத் தொடங்கியது. எனது மன உணர்வுகள் அச்செய்தியை நம்ப மறுத்தது. அச்செய்தி சரியாக உறுதிப்படுத்தப்பட்டது என்பதை கிரகிக்காமல் எப்படியும் அவர் தப்பிவிடுவார் என்ற நம்பிக்கையை வரவழைத்தது. ஆனால், இறுதியில் எனது இதயம் கனத்து கண்களில் பெரும் கசிவை ஏற்படுத்தியது. அவரது துணைவியார் செல்வி தனது மீளாத்துயரிலும் இச்செய்தியை கந்தாவுக்கு தெரிவித்துவிட்டீர்களா என்று மற்றவர்களை கேட்டதாக அறிந்தபோது அது என் இதயத்தை பிழிந்தது.

இறப்பு மனித வாழ்க்கையின் இயற்கைதான் என்று கூறினாலும் செந்திலைப் போன்ற புரட்சியாளர்களின் மரணம் இறப்புடன் முடிவடைவதில்லை. உலக சோசலிசப் புரட்சிக்காக அவர் போராடிய அனைத்து செயற்பாடுகளிலும் கருத்துக்களிலும் உலக தொழிலாள வர்க்கத்தினுள் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

செந்தில் தனது கடந்தகால அனுபவங்கள் தொடர்பாக புரட்சியாளனாக கூறுவது யாதெனில், நோம் மார்க்சிச கண்ணோட்டத்தை எமது வாழ்க்கையின் தத்துவமாக உள்ளீர்த்து, கடந்த கால படிப்பினைகளை சரியாக மதிப்பீடு செய்து, அவைகளின் முடிவுகளை நனவாகப் புரிந்துகொண்டு, இன்றைய போராட்டங்களில் அவைகளை எமக்கானதும் மற்றவர்களுக்கு வழிகாட்டுபவைகளாகவும், சரியாக ஒருங்கிணைப்பதே ஒரு மார்க்சியவாதியின் கடமையாகும்யு.

செந்திலின் வாழ்க்கை, அனுபவங்கள் மற்றும் அவர் தன்னோடு வரித்துக்கொண்ட அரசியலை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டுமானால், இலங்கையின் அரசியல் நிகழ்வுகளை ஒரு தேசிய கண்கொண்டு அல்ல மாறாக சர்வதேசிய கண்கொண்டு பார்க்கவேண்டும். உலக ஏகாதிபத்திய மையங்களிலும், ஸ்ராலினிச அதிகாரத்துவ மையங்களிலும் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றங்களும் இலங்கையின் உள்நாட்டு அரசியலை வடிவமைத்ததே அன்றி உள்நாட்டு தலைவர்களின் அகவய விருப்பு வெறுப்புக்களினால் அல்ல.

செந்தில் மேற்கொண்ட அரசியல் பணியானது, இன்று தொழிலாள வர்க்கத்தின் பிரதிநிதிகளுக்கு ஒரு உத்வேகத்தை தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது. செந்தில் உறுதியாக பற்றிக்கொண்ட சர்வதேச முன்னோக்கானது,


படிப்பகம்

www.padippakam.com

என்றுமில்லாதவாறு மிக ஆழமாக சரியானதாக (நிதர்சனமாகவும்) உறுதியாக்கப்படுவதுடன், இம் முன்னோக்கை அடிப்படையாக கொண்டுள்ள நான்காம் அகிலத்தின் எதிர்வு கூறலுடன் மிகச்சரியாக பொருந்தி நிற்கின்றது.

1948 இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களை தக்கவைத்துகொள்ளும் நோக்கத்தோடு, இந்திய, இலங்கை தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் அது செய்து கொண்ட கொடுக்கல் வாங்கல்களே ''சுதந்திரம்'' என்று ஆயிற்று. ''சுதந்திரம் - சமத்துவம் - சகோரத்துவம்'' என்ற சொல்லைக் கேட்ட ஒருவர் அதை பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியுடனும், அரசுடனும் இனங்காண்பதுபோல், இனவாதமே இலங்கையின் ''சுதந்திர'' அரசின் தாரக மந்திரமாயிற்று, அதன் அடிப்படையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அடுத்து வந்திருந்த 6 தசாப்தங்களுக்கு அரசியல் துன்பங்களுக்கு இந்நாட்டில் களம் அமைத்துக் கொடுத்ததோடு 70,000 தமிழ் மக்களின் உயிரிழப்புக்கும் காரணமாயிற்று.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னரான பொருளாதார செழிப்பானது 1970 களின் மத்தியில் முடிவிற்கு வந்ததுடன், அது இலங்கையிலும் பாரிய அழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்நிகழ்வு ஏற்கனவே தொழிலாள வர்க்கத்தினால் முதலாளித்துவ அமைப்பினுள் பெற்றுக்கொண்ட சமூக, ஜனநாயக உரிமைகளை அவரது முன்னோர்கள் அனுபவித்த சலுகைகள் அளவிற்கு கூட செந்தில் காலத்தவர்கள் பெற முடியாத நிலையை ஏற்படுத்தியது.

செந்தில் குறிப்பிட்ட காலம் மலையகத்தில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது இடைநிலைக் கல்வியை கற்பதற்கான ஒரு அமைதியான வாழ்க்கையை இதர சிறுவர்களைப்போல அவருக்கும் கிடைக்கப்பெறாமைக்கு கீழ் வரும் அரசியல் சூழ்நிலை மேலும் கடுமையாக்கியது.

1977ல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி திறந்த பொருளாதாரத் கொள்கையை நடைமுறைப்படுத்தியது. வங்கி மற்றும் நிதித்துறை உள்ளடங்கலான பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகள் முதலாளித்துவ சந்தைக்கு திறந்துவிடப்பட்டன. சுதந்திர சந்தையை நோக்கிய அரசாங்கத்தின் திருப்பமும் அதனைத் தொடர்ந்த பரந்துபட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீதான தாக்குதலும் அதிகரித்தளவில், ஆட்சியாளர்களை இனவாத கொள்கைகளை நோக்கி மேலும் பயணம் செய்ய வைத்தது.

பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தனது தேசியவாத வேலைத்திட்டத்தின் வங்குரோத்தை மூடிமறைக்க இனவாதத்தை பயன்படுத்தியதைப்போல், ஜெயவர்த்தனாவின் அரசாங்கமும் ''சுதந்திர சந்தை'' வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்த இனவாதத்தை ஒரு பிரயோசனமான ஆயுதமாக கண்டுகொண்டது.

''சுதந்திர சந்தை'' வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிராக ஐக்கியப்பட்ட வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த உழைக்கும் மக்களை இனவாத ஆயுதம் கொண்டு பிரிப்பது இலங்கை முதலாளித்துவத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

அவசியமாயிற்று. இது 1983ல் இனவாத யுத்தத்தின் ஆரம்பத்திற்கு நேரடியாக இட்டுச்சென்றது.

தம்மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளின் தீவிரம் புரியப் புரிய தமிழ் மக்களிடையே பதட்டம் வளர்ச்சிகண்டு வந்தது. இதனை தமிழ் குட்டி முதலாளித்துவத் தட்டினர் பெரிதும் வெளிக்காட்டிக் கொண்டனர். அவர்களிடையே இளைஞர்களும் மாணவர்களும் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி ஊடாக தமது ஜனநாயக உரிமைகளை மட்டுமின்றி, தமது உயிர்களையும் கூட உத்தரவாதம் செய்துகொள்ள முடியாது என்ற கருத்து அவர்களிடையே பரந்துபட்டு வந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவை அக்கட்சியில் இருந்து விலகிக் கொள்ள முடிவு செய்தது. அதில் பதவிகள் வகித்த சகலரும் இராஜினாமா செய்ய எடுத்த தீர்மானத்துக்கு இணங்க 40 பேர் ஒரேயடியாக இராஜினாமா செய்தனர். இவர்களில் பலர் பிற்காலத்தில் தேசிய பிரிவினைவாத இயக்கங்களின் தலைவர்களாகினர். ஆனால், தீர்க்கமான பிரச்சினையாக இந்தக் குட்டி முதலாளித்துவ இளைஞர் பகுதியினர் என்ன முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள்?

அவர்கள் இன பாகுபாட்டிற்கும், இராணுவ ஒடுக்குமுறைக்கும் தீர்வாக ஒரு தனியான முதலாளித்துவ தமிழீழ அரசுக்கான கோரிக்கையை முன்வைத்தனர். அதை அடையும் வழிமுறை ஆயுதப்போராட்டம் என்றனர். இது தமிழ் உழைக்கும் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மாறாக பீ.எல்.ஓ, ஏ.என்.சீ, மற்றும் ஐ.ஆர்.ஏ போன்ற ஏனைய முதலாளித்துவ தேசிய இயக்கங்களைப் போல், தமது சொந்த தொழிலாள வர்க்கத்தையும் விவசாயிகளையும் சுரண்டுவதற்காக பூகோள மூலதனத்துடன் தனது சொந்த உறவை ஸ்தாபிதம் செய்துகொள்ள முயற்சிக்கும், தமிழ் முதலாளித்துவத்தின் நலன்களையே பிரதிநிதித்துவப்படுத்தின.

தம்மீது சிகப்பு வண்ணங்களை பூசியவகையில் டசின் கணக்கான இயக்கங்கள் தோன்றின. ஒவ்வொன்றும் தம்மை மற்றவற்றில் இருந்து வேறுபடுத்திக்காட்ட முயற்சித்தன. ஒன்றில் இருந்து மற்றொன்று வேறுவேறு தீவிரமான பெயர்களைக் கொண்டிருந்தாலும், இறுதியாகப் பார்க்கையில் அவர்களின் வேறுபாடுகள் வெறும் தந்திரோபாய ரீதியானதே அன்றி மூலோபாய ரீதியானதல்ல.

அவர்களின் முன்னோக்கானது, வேறுபட்ட ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடனும் இப் பிராந்தியத்தில் பலம்பொருந்திய ஆட்சிகளின் அனுசரணையுடனும் ஒரு அரசை அமைப்பதும், தமிழ் முதலாளி வர்க்கத்தின் நலன்களின் பேரால் தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களை தியாகம் செய்யுமாறு கோரி அவர்களை ஒடுக்குவதுமேயாகும். தொழிலாள வர்க்க பகுதியில் கணிசமாக ஆதரவை கொண்டிருந்த மாஸ்கோ சார்பு, சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த பிரிவினைக்கும், ஒரு குட்டி அரசு அமைப்பதற்கும், உழைக்கும் மக்களை அந்த குட்டி அரசுக்குள் சிறைப்படுத்துவதற்கும் தமது ஆதரவை வழங்கின. எனவே இதற்கு மாற்றீடு ஏதும் கிட்டாத நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தேசியவாத அலையால் அடித்துச் செல்லப்பட்டனர்.

லங்கா சம சமாஜ கட்சியானது நிரந்தர புரட்சி தத்துவத்தை கைவிட்டு பப்லோவாத போக்கிற்கு அடிபணிந்த அரசியல் பாதை 1964ம் ஆண்டு சீரழிவில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அது சிறிமா பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ அரசாங்கத்தில் நுழைந்து தொழிலாள வர்க்கத்தை காட்டிக்கொடுத்தமைக்கு, செந்திலின் தலைமுறையும் அதற்குப் பிந்திய தலைமுறையும் மிகப்பெரும் விலையை இன்றும் செலுத்திக் கொண்டிருக்கின்றது. லங்கா சம சமாஜ கட்சியால் ஏற்படுத்தப்பட்ட அழிவு இன்னொரு அழிவுகரமான தேசியவாத முன்னோக்கால் நியாயப்படுத்தப்பட்டது.

ஆயுதப்போராட்டத்தின் மூலம் சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொள்ள அதற்கான நிதி, ஆயுதப் பயிற்சிகளை, இந்திய முதலாளித்துவத்தின் இராணுவத்திடமும் அதற்கான அரசியல் பயிற்சிகளை இந்திய ஸ்ராலினிஸ்டுகளிடம் அவர்கள் பெற்றுக்கொண்டனர். இந்திரா காந்தி, வங்காளதேசத்தை இந்திய இராணுவத்தின் மூலம் பிரித்து உருவாக்கிய மாதிரி, தமிழீழத்தை தாம் பெற்றுக் கொள்ளுவதும், தமிழீழ பிரகடனத்தை அறிவித்து ஐ.நா சபை மூலம் அதை அங்கீகரிக்க இந்தியா உதவும் என்பதும் அவர்கள் அனைவரின் எண்ணமாகும்.

இவ் இயக்கங்களிற்கு சோசலிச முலாம் பூசும் வேலையை, சமசமாஜ-பப்லோவாத, ஸ்ராலினிச, மாவோவாத இயக்கங்களில் இருந்து வந்த தத்துவாசிரியர்கள் இட்டு நிரப்பினர். தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான போராட்டத்தை சீர்குலைக்கவும், மார்க்சிசத்தின் பால் கவரப்பட்ட, சமத்துவத்தை அனுபவிக்க விருப்பம் கொண்ட புதிய சக்திகளுக்கு திரிபுவாத வரலாறு மற்றும் தத்துவங்களை வழிகாட்டியாக திணித்து அவர்களின் அரசியல் நனவை அழித்து முதலாளித்துவத்திற்கு கீழ் படியச் செய்தனர். இன்றும் அதையே செய்து கொண்டிருக்கிறார்கள்.

வழிதடுமாறச் செய்வதற்கென்றாலும் மார்க்சையும் லெனினையும் சோசலிசத்தையும் அவர்கள் பயன்படுத்தியமை இளம் தலைமுறையின் மத்தியில் உண்மையான தேடல்களை தூண்டியது. அதை மேற்கூறிய சக்திகளால் கட்டுப்படுத்த முடியாது போயிற்று. விளைவு பலர் கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், தலைமறைவானார்கள், வெளியேறினார்கள், வெளியேற்றப்பட்டார்கள், தனிமைப்பட்டார்கள், பலர் விரக்தியடைந்து நோயாளியானார்கள், பலருக்கு இன்னும் அவர்கள் பற்றிய தகவல்களே இல்லை. மற்றும் இறுதியில் சிலர் தற்கொலை கூட செய்து கொண்டார்கள். தமிழ் உழைக்கும் மற்றும் விவசாய மக்களோ சமுதாய வாழ்வில் ஏற்கனவேயிருந்த குறைந்த பட்ச ஜனநாயகமும் கூட மறுக்கப்பட்ட நிலையில், சாப்பிடுவதற்கு மட்டுமே வாயை பயன்படுத்தும் மனித சமூகமாக அவர்களின் வாழ்க்கை மிகவும் பின்னோக்கி இழுக்கப்பட்டது.



படிப்பகம்

இந்திய அரசினது, இலங்கை மற்றும் தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் தொடர்பான அனைத்து அணுகுமுறைகளும் அதன் சர்வதேச, பிராந்திய, உள்நாட்டு, பொருளாதார, அரசியல், இராணுவ நலன்கள் சார்ந்தே வடிவமைக்கப்பட்டனவேயன்றி இலங்கையில் உள்ள முழு மக்களின் நலன் சார்ந்தோ அல்லது அவலப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நலன் சார்ந்தோ இருந்ததில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ''சுதந்திரம்'' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட அரச அமைப்பு முறையை கேள்விக்குள்ளாக்க அது அனுமதித்ததேயில்லை.

1987ல், சர்வதேச அரசியல் மாற்றங்களுக்கும், உள்நாட்டில் வளர்ச்சி கண்டுவந்த வர்க்கப் போராட்டங்களுக்கும் மற்றும் இந்திய முதலாளித்துவ நலன்களின் அழுத்தத்திற்கும் முகம் கொடுத்த ஜெயவர்த்தன, யுத்தத்திற்கு முடிவுகட்டுவதற்கான பேச்சுவார்த்தைக்கு முயற்சித்தார். அவர், வடக்கு கிழக்கிற்கு இந்திய ''சமாதானப் படையை'' அழைத்து வருவதற்காக புதுடில்லியுடன் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அவர்களின் பணி, விடுதலைப் புலிகள் நிராயுதபாணிகளாக்கப்படுவதையும், புதிய மாகாண சபை கட்டமைப்பிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட முறையையும் மேற்பார்வை செய்வதாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் சோவியத் அதிகாரத்துவத்திற்கும் இடையில் உள்ள உறவுகள் நெருக்கமாகியிருந்த அன்றைய அரசியல் சூழ்நிலையில், இந்திய முதலாளித்துவமும் அதற்கேற்ப தனது அரசியலிலும் மாற்றங்களை செய்யவேண்டியிருந்தது. இதுவரை காலமும் ஸ்ரீலங்கா முதலாளித்துவத்திற்கு அழுத்தம் கொடுக்க தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்களை பயன்படுத்திய முறையானது இனியும் அதற்கு தேவையற்றதாகியது. இந்திய முதலாளித்துவம் இந்த இயக்கங்கள் மீது ஒரு தீர்வை திணித்து அதை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டது. ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமது மண்ணில் உற்சாகமாக வரவேற்று ஒரு பகுதி தமது ஆயுதங்களையும் இந்த இயக்கங்கள் ஒப்படைத்தன.

தமது பேரம் பேசலில் தோல்வி கண்ட விடுதலைப் புலிகள் ''தாம் யுத்தத்தை விரும்பவில்லை தம்மீது அது திணிக்கப்படுகின்றதுயு என்று கூறி இந்தியப் படைகளுடனும் அதன் கூலிக்குழுக்களுடனும் மோதலுக்கு தள்ளப்பட்டது. தெற்கில், இந்திய-இலங்கை உடன்படிக்கை ஒரு கூர்மையான அரசியல் நெருக்கடியை தோற்றுவித்தது. அதே நேரம் விடுதலைப்புலிகள் தமது புதிய பேரம் பேசலை ஜெயவர்த்தனாவுக்கு பின்வந்த பிரேமதாசவுடன் ஏற்படுத்திக் கொண்டு ஆயுதமும் பணமும் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது இந்திய இராணுவ வெளியேற்றத்தையும் கோரினர். அத்தோடு சிறிலங்கா இராணுவத்துடன் மோதல் தவிர்ப்பு நிலையையும் கடைப்பிடித்தனர்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் உதவியுடன் புதிய மாகாண சபை முதலமைச்சராக பொறுப்பேற்ற ஈ.பி.ஆர்.எல். இன் வரதராஜப்பெருமாள், தனது 18 மாதகால அரசின் மூலமாக நாளாந்த நடைமுறையாக கொலைகள், வழிப்பறிகள், ஆட்கடத்தல்கள், கட்டாய வரி வசூலிப்புகளினால் வட

www.padippakam.com

கிழக்கிலுள்ள வறிய தொழிலாள விவசாயிகளை அடக்கி ஒடுக்கி தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

அதேவேளை தெற்கில் சமூக நெருங்கடியினால் எழுந்த இளைஞர்களின் போராட்டங்களை அடக்கி ஜே..வி.பி இன் வன்முறையை சாட்டாக வைத்து பத்தாயிரக் கணக்கான இளைஞர்களை கொன்று களனி ஆற்றில் போடுவது பிரேமதாசா அரசாங்கத்தின் அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. பிரேமதாசாவின் இந்த ஒடுக்குமுறை நடவடிக்கையானது தமிழ் முதலாளித்துவத்தின் பிரதிநிதிகளின் அரசியல் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் செய்திருக்க முடியாது.

இந்திய உடன்படிக்கையையும் மற்றும் மாகாண அரசினை ஏற்றுக் கொண்ட வரதராஜப்பெருமாளின் நடவடிக்கையையும் சோசலிசத்திற்கான போராட்டத்தில் ஒரு வெற்றிப்படி என்றே எமக்கு கற்பிக்கப்பட்டது. இந்த மட்டுபடுத்தப்பட்ட அதிகாரம் கூட எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமே, ஆதலால், ஜனநாயகக் கடமைகளை முதலில் தீர்க்க முன்னுரிமை கொடுத்து புனர்வாழ்வு வேலைகள் மற்றும் அமைதியையும் இதனால் ஏற்படுத்த முடியும் என்றனர். அத்தோடு சர்வதேச அங்கீகாரமும் கிட்டும் என்றனர். இதன் அர்த்தம் தமிழீழ விடுதலைப் போராட்டம் கைவிடப்பட்டு விட்டது என்று அர்த்தமாகாது மாறாக அது மேலும் பலமாக சோசலிச திசையில் செல்ல அடித்தளத்தை வழங்கும் என்றனர்.

மேற்கூறிய அரசியல் மூடுதிரையானது மென்ஷிவிச-ஸ்ராலினிச கண்டுபிடிப்பான இரண்டு கட்டப் புரட்சியே என்பதை புரிய இன்னுமொரு தசாப்தம் எமக்குத் தேவைப்பட்டது. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி அல்லது புதிய ஜனநாயகப் புரட்சிக்கு பின்னர் சோசலிச புரட்சி என்பதே இரண்டு கட்ட புரட்சிக் கோட்பாடாகும். அதாவது ஜனநாயக புரட்சியை தேசிய முதலாளித்துவம் முடிவுக்கு கொண்டுவரும் வரை தொழிலாள வர்க்கம் அதன் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். இது தொழிலாள வர்க்கத்தின் தலைமையையும் அதன் சுயாதீனத்தையும் நிராகரிப்பதாகும்.

இதை முன்னர் உண்மையாக நடைமுறையாக்கியது ஸ்ராலினிச இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாகும். தொழிலாள வர்க்கத்தை பண்டாரநாயக்காவிற்கும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கீழ்ப்படுத்தி அது ''ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ''முற்போக்கான'' அல்லது ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதி என்றது. இதுதான் மென்ஷிவிச-ஸ்ராலினிச இரண்டு கட்ட புரட்சி தத்துவ கருத்தின் இலங்கைக்கான வடிவமாக இருந்தது.

1871 பாட்டாளி வர்க்கத்தின் முதல் புரட்சிகர எழுச்சியான பாரிஸ் கம்யூனின் அனுபவமானது, ஏற்கனவே பூர்த்தியான தயார் நிலையில் உள்ள முதலாளித்துவ அரசுப் பொறியமைவை தொழிலாள வர்க்கம் அப்படியே கைப்பற்றி தனது சொந்தக் காரியங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பதையும் புரட்சிகர கட்சியும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரமும் சோசலிஷப் புரட்சியின் வெற்றிக்கு அடிப்படை என்பதையும் தொழிலாள வர்க்கம் கற்றுக்கொண்டது.

ரஷ்ய புரட்சியின் அனுபவமானது முதலாளித்துவ வளர்ச்சி குன்றிய இன்னும் முதலாளித்துவ ஜனநாயகக் கடமைகள் தீர்க்கப்படாத ஒரு நாட்டில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com

எந்தவொரு சிறிய அரசியல் பிரச்சனை என்றாலும் அது சோசலிச அடித்தளத்தில் உலகின் முழு வளங்களையும் மறு ஒழுங்கமைக்க நடத்தும் போராட்டத்தின் மூலம் மட்டுமே சாத்தியமாக்கப்பட முடியும் என்று இடித்துரைத்தது.

ஆனால், மார்க்சிச வரலாற்றோடு எந்தவித தொடர்பும் இல்லாத இரண்டு கட்ட புரட்சி தத்துவத்தை எம்மீது திணித்து, திட்டமிட்ட முறையில் ரஷ்யப் புரட்சியின் உண்மை வரலாற்றை அவர்கள் மூடிமறைத்தனர். அதற்காக போராடிய ட்ரொட்ஸ்கியை ஏகாதிபத்திய கையாள் என்றும் சோசலிச அடித்தளத்தில் ஸ்ராலினிசத்திற்கு எதிர்ப்பை காட்டிய எதிர்ப்பாளர்களை சோசலிச விரோதிகளாக்கி இலட்சக்கணக்கில் ஸ்ராலின் படுகொலை செய்த வரலாற்றை நாம் அறியாது அவர்கள் இருட்டடிப்பு செய்தனர். தன்னெழுச்சியான கிளர்ச்சி மூலமும் சாத்தியமில்லாத உலகப் புரட்சி பற்றி தான் ட்ரொட்ஸ்கி கூறுகின்றார் என்ற அளவில் எமக்கு அவர்களால் பாடம் கற்பிக்கப்பட்டது. இப்படி வரலாறு பற்றி மாபெரும் இருட்டடிப்பு செய்யப்பட்ட அறிவைக் கொண்டே நாம் நடந்து கொண்டிருக்கும் நிலைமைகளை அன்று ஆய்வு செய்யத் தொடங்கினோம்.

செந்தில் சார்ந்திருந்த ஈரோஸ் இயக்கத்தின் ஒரு பகுதி புலிகளோடு கூடி, மதில் மேல் பூனையாக இருக்க, ஈ.பி.ஆர்.எல்.எப் இந்திய-இலங்கை முதலாளித்துவத்தோடு கூடி இடைக்கால ஆட்சியை பொறுப்பேற்று சீரழிய, புளொட் பயங்கர உட்படுகொலைகளினால் உடைய, ரெலோ அழிக்கப்பட, ஈ.என்.டி.எல்.எப் இந்திய இராணுவத்துடன் வலம் வந்து செந்திலின் நண்பன் பாபு உட்பட பலர் மீது படுகொலைகளை கட்டவிழ்த்துவிட, புலிகளினால் செந்திலுக்கு ஏற்பட்ட சித்திரவதை போன்ற காரணங்களும் அவரை ஒரு மாற்று அரசியல் அமைப்பின் உருவாக்கத்தின் உடனடியான தேடலை வேண்டி நிற்கச் செய்தது.

செந்தில் மற்றும் அவரின் நண்பர்கள் அனைவரின் நோக்கமானது, நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தை சரியான வழியால் கொண்டு செல்வதற்கான அரசியலை, அமைப்பை தேடுவதும், அது முடியாத பட்சத்தில் அதை ஏற்படுத்த அனைத்து தியாகங்களுக்கும் தயாரான நிலையேயாகும். மகாலிங்கம் இயல்பிலே கவிதைகளில் ஈடுபாடும், பேச்சாற்றலும், சமுதாய மாற்றத்திற்காக போராடும் திறனும் கொண்ட செந்திலின் நீண்டகால நண்பருமாவார்.

2002ம் ஆண்டு, மகாலிங்கம் இலங்கையில் கொடிய யுத்தத்தினால் தனது சொந்த வாழ்க்கை நெருக்கடியும் அவலமும் மேலும் அதிகரித்த நிலையில் ஏற்கனவே ஸ்ராலினிச கருத்தியல் ஆளுமையானது, இதற்கான எந்தவிதமான வெற்றிகொள்ளலையும் ஏற்படுத்தாமல் மேலும் விரக்தியையே அவருக்குள் ஏற்படுத்தி அவரை இழப்பதற்கான நிலைக்கு இட்டு சென்றடையவே வழிகாட்டியது.

முதலாளித்துவ சமுதாயத்தின் யுத்தம், சமத்துவமின்மை, தனது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி, உணவு கொடுக்க முடியாத நிலை, ஏழ்மையினால் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் மற்றும் தேசிய எல்லைகளால் மனிதன்


படிப்பகம்

www.padippakam.com

சிறைப்பட்டு தான் விரும்பிய இடத்தில் தனது உழைப்பை கூட விற்க முடியாத எண்ணற்ற கொடுமையின் விழைவுகளினால் மகாலிங்கத்தை நாம் இழந்தோம். அவரது இழப்பு செந்திலை மிகவும் பாதித்தது. செந்தில் அப்போது தனக்கு பணப்பிரச்சனை இருந்த போதும் முடிந்தளவு அவருக்கு உதவி செய்ததோடு தற்காலிகமாக அவரின் பிரச்சனையை தீர்க்க சதா அவரைப் பற்றி உரையாடுவார்.

மகாலிங்கம், செந்திலுக்கு இந்தியாவில் ''புரட்சிகர குழுக்கள்'' என்று அழைக்கும் அநேக மாவோவாத குழுக்களின் மற்றும் இலங்கை தமிழ் குழுக்களின் ''புரட்சிகர அரசியலை'' அறிந்து கொள்ள உதவினார். இக்குழுக்களின் மிகப்பெரும் அனுபவத்தை பெற்றுக்கொண்ட செந்தில், அதிலிருந்து அரசியல் ரீதியாக உடைத்துக் கொண்டு, நான்காம் அகிலத்தின் முன்னோக்கை ஏற்றுக் கொண்டு, அனைத்து தொழிலாள வர்க்க விரோத அரசியலுக்கு எதிராக உறுதியுடன் போராடினார். அத்தோடு, பிழையான வழிகாட்டலினால் அரசியல் திசை விலகல்களுக்கு உள்ளாகி ஆரோக்கியமான அரசியலை வேண்டி நிற்கும் ஒரு தொகை இளைஞர்களை செந்தில் தனது அனுபவத்தின் வாயிலாக அவர்களை தேடித்திரிந்து மீட்டெடுப்பதில் வெற்றிகளையும் கண்டார்.

1988 காலப்பகுதியில் அனைத்து விதமான ஜனநாயக வழிமுறைகளை அடக்கி ஒடுக்கிய இந்திய இராணுவம், அதனுடன் சேர்ந்து இயங்கும் குழுக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் உயிர் அச்சுறுத்தல் போன்ற ஆபத்துகளுக்கு மத்தியில் மகாலிங்கம் பத்துக்கும் மேற்பட்டோரை தனது தலைமையில் அணிதிரட்டி ஒரு மார்க்சிச இலக்கிய வாசிப்புக் குழுவை இரகசியமாக அமைத்தார். எப்படியும் அது நீண்டகாலம் உயிர்வாழவில்லை. 1989ல் செந்தில், மகாலிங்கத்துடன் சேர்ந்து இந்தியா சென்று அதற்கான தேடலை செய்யலாம் எனக் கருதி மிகுந்த ஆபத்தின் மத்தியில் அங்கு சென்றார். அங்கு செந்தில் பெற்றுக்கொண்ட அனுபவமானது, தேசியவாத முன்னோக்கை மீண்டும் இலங்கையில் ஸ்தாபிக்கும் முன்னோக்குகளே ஆகும்.

மாவோவாத அரசியலின் அடிப்படை, உற்பத்தி சக்திகளின் உயர்ந்த வளர்ச்சியின் பாகமாக இருக்கும் நகர்ப்புற பாட்டாளி வர்க்கத்தை திரட்டுவதை அடிப்படையாக கொண்டிருக்கும் புரட்சிகர மூலோபாயத்தை ஒரு நம்பிக்கையற்றது என நிராகரிப்பதாகும். மேலும் புரட்சியை ஒரு வெறும் ஆயுதமேந்திய போராட்டம் என்ற மட்டத்திற்கு கீழ்ப்படுத்துவதுமாகும். இதன் வெளிப்பாடே மாவோவின் பிரசித்திபெற்ற சுலோகமான ''அரசியல் அதிகாரம் துப்பாக்கி முனையில் இருந்து பிறக்கிறது'' என்பதாகும். அத்தோடு நாட்டுப் புறத்தில் இருந்து நகரத்திற்கு புரட்சியை பரப்புதலுமாகும்.

இந்த அடிப்படையிலேயே இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ ஒரு தலைமறைவு ''அமைப்பை'' கட்டுவதுதான் புரட்சியை செய்வதற்கான வழி என்று கற்பிக்கப்பட்டது. இது பல தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குள் அதன் காரியாளர்களை சிக்க வைத்ததோடு எதிர்காலமே இல்லாத இருட்டுக்குள் அவர்களை மேலும் தள்ளியது. அவர்கள் வளர்ச்சியடைந்துவரும் விஞ்ஞானம்,



படிப்பகம்

தொழில்நுட்பம், கலாச்சாரம் போன்றவற்றில் இருந்து துண்டிக்கப்பட்டனர். இப்படியாக அவர்கள் மத்தியகால நிலைமைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

அத்துடன், விவசாய இளைஞர்களை அடித்தளமாக கொண்ட கெரில்லா கருக்குழுக்களை கிராமங்களில் உருவாக்கி ஆயுத நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டது. ''வங்கிக் கொள்ளை'' ''பணப்பறிப்பு'' மற்றும் ''தனிநபர் கொலை'' போன்றவை ''புரட்சிகர நடவடிக்கை'' என விளக்கப்பட்டது. இந்நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் இறுதியில் பயங்கரத்திற்குள் சிக்கி, சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டு மனநோயாளிகளாகி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

''நாம் வாழும் இன்றைய சகாப்தத்தில் மிகப்பெரிய அரசியல் பொறுப்பாக எம்முன் இருப்பது தொழிலாள வர்க்கத்தை அவர்களின் வரலாற்றுக் கடமையை செய்யக்கூடிய மட்டத்திற்கு அரசியல் நனவை உயர்த்துவதே.'' கடந்தகால கசப்பான அனுபவங்கள் இந்த வார்த்தைகளை செந்திலின் இதயத்தில் எப்போதும் இருத்தி வைத்ததை அவரது பேச்சில் எப்போதும் காணலாம்.

சீனப்புரட்சியின் வரலாறு பற்றிய அறிவு அவரது கடந்த கால அரசியல் வாழ்க்கையில் மிகப்பெரும் தாக்கத்தை செலுத்தியது. சீனப்புரட்சியின் வரலாற்றை மாவோ ஆட்சியை கையில் எடுத்த ஆண்டிலிருந்தே எமக்கு கற்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் அதாவது 1927ல் சீன தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டங்கள் இரத்தவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டதும் அதற்கான அரசியல் காரணங்களும் மூடிமறைக்கப்பட்டிருந்தன. இந்தவகையில் முதலாளித்துவ தேசியவாதத்தில் இருந்து தப்பிக்க நடாத்திய தேடல் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இன்னுமொரு அழிவுகரமான முன்னோக்கின் முன் எம்மை நிறுத்தியது.

நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக கொண்டு வருவது எப்படி? யுத்தத்தை எவ்வாறு நிறுத்துவது? ஒரு நாட்டில் தேசிய இன வேறுபாடின்றி மக்கள் ஒற்றுமையாக வாழ்வது எவ்வாறு? சமூக சமத்துவமின்மையை எவ்வாறு நீக்குவது? சிங்கள-தமிழ் தொழிலாள வர்க்கம் ஏன் ஒன்றுபட்டு போராட முடியாமல் உள்ளது? இவற்றையெல்லாம் அடைவதற்கான சரியான தத்துவம் எது? ரஷ்ய புரட்சியால் தேசிய இனப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட்டது? ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் அடிப்படை என்ன? வர்க்கக் கூட்டின் அரசியல் என்ன? பாட்டாளி வர்க்க கட்சியின் உருவாக்கம் மற்றும் அடிப்படை தான் என்ன? தொழிலாள வர்க்கம் ஏன் பிளவுபடுத்தப்படுகின்றது? பாட்டாளிகள் மற்றும் விவசாயிகள் குறித்தும், காலனித்துவ முதலாளித்துவ வர்க்கம் குறித்தும், பாட்டாளி வர்க்கப் புரட்சியில் அதன் கட்சியின் பங்கு குறித்தும் எப்படி அணுகுவது?

இக் கேள்விகளுக்கான பதில்களாகவும், தீர்வுகளாகவும் முன்னோக்குகளாகவும் அன்று செந்திலுக்கு முன்வைக்கப்பட்டவை எவையென நாம் கவனமாக ஆராய்ந்தால் அவைகள் அனைத்தும் தொழிலாள வர்க்க திரிபு வரலாறுகளும்,

www.padippakam.com

திட்டமிட்ட வரலாற்று உருமறைப்புகளும், தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான கட்சியை நிராகரித்து அவற்றை முதலாளித்துவத்திற்கு கீழ்ப்படுத்தும் முன்னோக்குகளும் ஆகும்.

தேசிய முதலாளித்துவ வர்க்கம் இன்னும் தீர்க்கப்படாத ஜனநாயகக் கடமைகளை தீர்க்கும் வல்லமையைக் கொண்டுள்ளது என ஏற்றுக்கொள்ளலும், எந்த வர்க்கமோ அல்லது குழுவோ அரச படைகளுக்கு எதிராக போராடினால், அது ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்பாகவும், நேச சக்திகளாகவும் பார்த்து தொழிலாள வர்க்கம் அவர்களுடன் கூடி வேலை செய்யும் முன்னோக்குகளும், சாகசவாத, கெரில்லா இராணுவாத போக்குகளும், தனிநாட்டில் சோசலிசத்தை நிர்மாணிக்கும் தேசியவாத போக்குகளுமே ஆகும். அதாவது மார்க்சிச, உழைக்கும் மக்கள் விரோத போக்குகளே இவை அனைத்தின் அடிப்படைகளாகும்.

செந்திலின் தேடலுக்கு மாவோவாதிகளிடம் எந்தப் பதிலும் கிடையாது. அவர்களின் அரசியல் மற்றும் நடைமுறை நடவடிக்கைகளின் அபாயங்களை, இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தில் பங்குகொண்டு பெற்ற அனுபவங்களை செந்தில் கொண்டிருந்ததால், மிக இலகுவாக அவர்களை இனங்கண்டு கொண்டார்.

தனது தேடல் நிறைவேறாத நிலையில் அவர் இந்தியாவிலிருந்து கொழும்பிற்கு பயணமானார். அங்கும் அவரிற்கு மேற்சொன்ன முன்னோக்குகளே குறுகிய காலத்தில் அனுபவமாக கிடைத்தது. அதே நேரம் போரின் உக்கிரமும், அவரின் அரசியல் தேடலும், அவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திய போது அங்கிருந்து ஐரோப்பாவிற்கு பயணமானார். இப்பயணங்களிற்கு செல்வியின் மேலுள்ள அன்பும் ஒரு காரணமாகும்.

முதலாளித்துவ தேசியவாதிகள், மாவோவாதிகள் போன்றோருடன் ஒரு தசாப்தங்கள் செலவழித்து பெற்றுக்கொண்ட அனுபவங்களை மூலதனமாக செந்தில் கொண்டிருந்ததால், பிரான்சில் புலம்பெயர் இலக்கிய குழுக்களால் தனக்கு மீண்டும் ஏற்படவிருந்த ஆபத்தை சரியாக அவர் புரிந்து கொண்டார். தனது தேடலின் வெற்றியாக உலக மார்க்சிச இயக்கமான நான்காம் அகிலத்தோடு அறிமுகம் கிடைத்ததோடு இறுதியில் அதில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

100 வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருந்து வந்த பத்திரிகை விற்பனை முறையை நிறுத்தி 1998 ஆண்டில் *உலக சோசலிச வலைத் தளம்* நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினால் ஆரம்பிக்கப்பட்டபோது, செந்தில் அதற்கு தனது முழு ஆதரவையும் வழங்கினார். தொழிலாள வர்க்கத்தினை உலக சோசலிச புரட்சிக்கு தயார் செய்யும் தத்துவார்த்த அரசியல் ஆயுதம் *உலக சோசலிச வலைத் தளமே* என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

2000ம் ஆண்டில் அதன் தமிழ் மொழிப் பக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, தமிழ் தொழிலாள வர்க்கத்திற்கும் நான்காம் அகிலத்திற்கும் இடையில் உள்ள உறவில் ஆழமான மாற்றம் ஏற்படும் என மிக உறுதியாக நம்பினார். அவரின் முழு ஆர்வமும் ட்ரொட்ஸ்கியின் பிரதான அரசியல் ஆய்வுகள், அக்டோபர் புரட்சி முகங்கொடுத்த பிரச்சனைகள் மற்றும் ஆங்கில மொழிப்பக்கத்தில் வெளியாகும் பிரதான சர்வதேச நிகழ்வுகளை தமிழ் மொழியில் கொண்டு வருவதன் மூலம் இன்றைய இளம் தலைமுறையை அரசியல் அழிவுகளில் இருந்து காப்பாற்றலாம் என நம்பினார். அதற்காக தனது முழுப் பங்களிப்பையும் செய்திருந்தார்.

மேலும் உலக நிலமைகளை ஆய்வு செய்து கட்டுரைகள் எழுதி தொழிலாள வர்க்கத்தை கல்வியூட்டவேண்டும் என்ற *உலக சோசலிச வலைத் தளத்தின்* போராட்டத்திற்கும் தனது ஆதரவை வழங்கியிருந்தார். செந்தில் இன்றிருந்தால், அடுத்த மாதம் பாரிசில் நடக்கவிருக்கும் கீர்த்தி பாலசூரியாவின் 20ம் வருட நினைவு கூட்டத்திலும் முக்கிய பாத்திரம் வகித்திருப்பார் என எந்தவித சந்தேகமும் இன்றி கூறலாம்.

நாம் இன்று முகம் கொடுக்கும் ஆழமான நெருக்கடிகளுக்கு அதாவது யுத்தம், பாதுகாப்பற்ற வாழ்க்கை, ஏழ்மை நிலை, வேலையின்மை, சிறந்த மருத்துவ, கல்வி வசதிகளின்மைகள், ஜனநாயகமற்ற நிலை, சுதந்திரமாக வாழ முடியாத அகதி வாழ்க்கை போன்ற எண்ணற்ற பிரச்சனைகளுக்கு காரணம் இந்த முதலாளித்துவ அமைப்பின் விளைபொருள்களே ஆகும். இவைகளை சோசலிசப் புரட்சி மூலமே வெற்றி கொள்ள முடியும் என்பதை கார்ல் மார்க்ஸ் 1847ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் அன்றே தெளிவாக வெளியிட்டதையும் இன்று எவ்வாறு அது எம் கண்முன்னே நிதர்சனமாக தெரிவதையும் செந்திலின் பேச்சில் நாம் காணலாம்.

அவரின் இறுதிக் காலப்பகுதியில், நான்காம் அகிலத்தின் வழிகாட்டலில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை வகிக்க தேவையான அனைத்துப் பண்புகளையும், தகமைகளையும், மிகப்பெரும் சோதனைகளையும் கடந்து வளர்த்துக்கொண்டிருந்தார்.

மனிதகுலத்தின் முன்னேற்றத்தை இட்டு உழைக்கும் மக்கள் தமது வரலாற்றுக் கடமையை செய்வதற்காக, செந்தில் போராடிப் பாதுகாத்த முன்னோக்கை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எமது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டுள்ள நாம், அவரின் வாழ்க்கையின் அனுபவங்களையும், போராட்டத்தையும் உள்ளீர்த்துக் கொள்வோம்.

ட்ரொட்ஸ்கி புரட்சியாளர்களின் தோற்றம் பற்றி புகழ் புத்த முறையில் கூறுகின்றார்: பேரட்சியாளர்களும் இதே சமூகத்திலிருந்துதான் மற்றவர்களைப் போல உருவாக்கப்படுகின்றார்கள். ஆனால், அவர்கள் உறுதியான உண்மையான வித்தியாசமான தகுதிகளை வைத்திருக்க வேண்டியிருப்பதோடு, வரலாற்று நிகழ்வுகளால் மற்றவர்களிடமிருந்து ஒரு சிறப்பான குழு மனிதர்களாக பிரித்துக்காட்டப்படுகின்றார்கள் அத்தோடு ஒருவருக்கொருவர் உள்ள


படிப்பகம்

www.padippakam.com

தொடர்புகள், கோட்பாட்டு தயாரிப்பு வேலைகள், ஒரு குறிப்பிட்ட சுலோகத்திற்கான போராட்டம், கூட்டு ஒழுக்கம், ஆபத்தான மற்றும் நெருக்கடியான காலங்களில் ஏற்படும் உறுதியாக்கங்கள் போன்றவைகள் தான் ஒரு புரட்சியாளனை வடிவமைக்கின்றதுயு.

கந்தகுமார்

## தோழர் செந்தில், ஆத்மார்த்தமான தோழன், நண்பன்

இன்று நீ இயற்கையுடன் ஒன்றிப்போய்விட்டாய் 'இனி உன்னுடன் நாம் கதைக்க முடியாது' இந்த சொற்கள் என் நனவில் ஆழமாக இறங்கும் போது, அண்டவெளியில் இருந்து ஒரு கோள் ஒன்று கடலில் தொப்பென விழுவதாய் உணர்கிறேன். ஓரிரு நிமிடங்கள் நான் ஸ்தம்பிக்கிறேன். ஒரு மாலை நேரம் ஒரு கபேயில் நாம் ஒன்று கூடுகிறோம், வெளியில் நல்ல குளிர், சூடாக இருக்க ஒரு கபே அருந்துகிறோம், ஏதோவொரு புள்ளியை பற்றி விவாதிக்கும் எண்ணத்தில் நீ வந்திருந்தாய். ஆழமான உணர்வுடன், அக்கறையுடன் உனது வார்த்தைகள் வெளிவருகிறது எனில் அப்போது நீ ஏதொவொன்றை ஆழமாக கிரகித்து, உள்வாங்கி அதை எமக்கு சுட்டிக்காட்டப் போகிறாய் என்பது எமக்கு தெரியும். உன்னை கிரகிக்க இருக்கும் பெரும் பரவசத்தில் எம் மூளையின் செல்கள் சூடாகிவிடும். உன் அனுபவங்களை எல்லாம் எம்மிடம் கூறி எமது மார்க்சிய கோட்பாட்டறிவை ஆழப்படுத்த வேண்டும் என்பதே உனது நோக்கமாக இருந்தது.

''நான் இப்போது தான் முழுமையான மனிதனாக உணர்கிறேன், கட்சியின் அறிவூட்டல்கள், தத்துவார்த்த விளக்கங்கள், தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள், அதனது காட்டிக்கொடுப்பு எல்லாவற்றையும் கிரகித்து ஒரு தெளிந்த மனிதனாக இருக்கிறேன். இதனால் தான் நான் கோடைகாலப் பள்ளிகளை தவற விடுவதில்லை, 95 பள்ளி என் வாழ்வின் மிக திருப்பு முனையாக இருந்தது. அங்கு தான் நான் முதலாளித்துவ அமைப்பின் ஆதாரமான பொருளாதார விதிமுறைகளையும், அதை நெருக்கடிக்குக் கொண்டுபோகும் இலாபவீத வீழ்ச்சியின் மூலத்தையும், உபரி மதிப்பின் மூலங்கள் என்ன என்பதையும் நிஜமாக கற்றேன். அந்த வகுப்பானது, ஆழமான முறையில் மார்க்சிய விஞ்ஞானத்தினை புரிந்துகொள்ள உதவியது.'' என ஒரு நாள், கூறினாய். அதைக் கூறிக்கொண்டிருந்த போது, உன் அறிவினழகு முகத்தில் ஒளிர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எமது அரசியல் முன்னேற்றத்திற்கு உனது பாத்திரம் என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை இப்படியான தருணங்களில் நாம் உணர்ந்தோம். தொழிலாள வர்க்கத்திற்கு மார்க்சிய கல்வி ஊட்டுவதில் தீர்க்கமாய் இருந்தாய். நீ ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாய் இருந்தாய். சிலவேளைகளில் காரசாரமாகவும் விவாதிப்போம். இப்படியான விவாதங்களுக்கு பின்னரும் மீண்டும் மீண்டும் சந்தோசமாக பேசிக் களித்துக்கொண்டிருந்தோம். இந்த நட்பின் பெயர் என்னவென ஒரு நாள் கேட்டேன், ''இதற்குப் பெயர் தான் தோழமை. தோழரே, ஒரு முன்னோக்குக்குப் போராடும்போது சமூகத்தில் இருந்து வரும் பல கருத்துக்களை விவாதித்து பதிலறுத்து மீண்டும் ஒன்றுகூடிப் போராடுகிறோமே இதுதான் தோழமை'', என்றார்.

எமது வாழ்நிலைமை தொடங்கி, அறிவு, வாசிப்பு அனைத்தையும் ஒவ்வொரு நாளும் அறிந்துகொண்டிருந்தாய். உன்னுடன் ஒரு நாள் விவாதிக்காது போனால், இரண்டாவது நாள் தொடர்பில்லையெனில் அடுத்தநாள் தொலைபேசி எடுத்து, 'என்ன நடக்குது' என விசாரிப்பாய். 'என்ன செய்ய வேண்டும்' என்ற லெனின் புத்தகத்தை ஐந்தாறுதடவை படித்தனான் அதன் முக்கியம் இன்றைக்கு என்றைக்கும் விட முக்கியமானது எனக்கூறி எம்மை தொடர்ந்து அதை வாசிக்கும்படி கூறுவாய்.

விஞ்ஞான அறிதல்கள் பற்றி உடனுக்குடன் அறிந்திருக்க வேண்டும். இதற்காக முக்கியமாக ஏங்கல்சின் இயற்கையின் இயங்கியல் புத்தகத்தை ஆழமாக படிக்கும்படி சொல்வாய், மார்க்சிய கோட்பாட்டறிவையும், வரலாற்று அறிவையும் வளர்க்கமால் எந்தவொரு முதலாளித்துவ கருத்தியலையும் சவால் செய்ய முடியாதென்பாய். பொதுவாக கலை, இலக்கியம் மற்றும் மார்க்கிச படைப்புக்களையும் மற்றும் வரலாற்று சம்பவங்களையும் பற்றியும் உரையாடும்போது மிக தீர்க்கமாக இருப்பாய். உறவினர், நண்பர்கள், தோழர்களுடன் ஒரு கொள்கைப்பிடிப்பான உறவை பேணினாய். எவருக்காவும் எமது முன்னோக்கினை விட்டுக்கொடுத்ததோ, சமரசம் செய்ததோ கிடையாது. உன் கருத்தினை நேர்மையாக எடுத்துரைப்பாய்.

சிறுவயதில் இருந்தே பிற இடங்களுக்கு பயணித்ததும், பிற இடங்களில் வசித்ததும், சாதாரண மனிதர்களுடனும் நெருங்கிப் பழகியதும், அவர்களது அன்றாட பிரச்சனைகளை அக்கறையாகக் கேட்பதும், அந்த பிரச்சனைகளை புரிந்துகொள்ள முயன்றதும், மாபெரும் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்களை சிறுவயதில் படித்ததும் உனது ஆன்ம அனுபவங்களை ஒரு உச்சத்திற்கு கொண்டு வந்தது.

நீ வரலாற்றின் ஒரு உயர்ந்த உற்பத்தி. குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் வங்குரோத்தினை இனம்கண்ட பிறகு, மார்க்சிய கட்சிகளைத் தேடி இந்தியா சென்றபோது நீ பெற்ற அனுபவம், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உயிர்வாழும் தன்மையை உனக்கு கொடுத்திருப்பதாக குறிப்பிட்டாய். எவ்வளவோ கடினமான நிலையிலும் நீ அங்கு ஒரு புரட்சிகர கட்சியையே தேடி அலைந்திருக்கிறாய். உனது மிக நெருங்கிய நண்பன் மகாலிங்கம் இறந்தபோது, நீ ரொம்ப வேதனைப்பட்டாய். அவனது மரணம் உன்னை நோகடித்து இருந்தது, உன்னை


படிப்பகம்

வருத்திய மரணமாக இருந்தது. உனது வாழ்நாளில் ஆழமாக கவலைப்பட்ட மரணமாக அது இருந்தது. உனது நண்பனின் நேர்மையை போற்றி பல தடவை எம்முடன் பேசியிருப்பாய், அவன் நான்காம் அகிலத்தை தெரிந்திருந்தால் அவன் அப்போதே எங்கள் கட்சிக்கு வந்திருப்பான் என்பாய்.

நீ சிந்தனை வயப்பட்டதில் இருந்தே, கருத்தியல் மனிதனாக இருந்தாய், உறவுகளுக்குப்பால், கருத்தியலே உனக்கு மிக முக்கியமானதாக இருந்தது. கருத்தியல் எனும்போது, நான் குறிப்பது, ஒரு இலட்சியத்தின் மீதான அவா. உழைக்கும் மக்களின், மனித இனத்தின் பூரண விடுதலையின் மீதான காதல், உயர்ந்த எண்ணங்கள் மீதான காதல், உயர்ந்த அறிதலின் மீதான காதல், உயர்ந்த நோக்கங்கள் மீதான காதல்.

உனது கருத்தினை ஒத்த மனிதர்களுடன், மிக நெருக்கமான, மிக உயர்வான உறவை வைத்திருந்தாய். உன்னை சிறுவயதில் செதுக்கிய மனிதர்களை என்றும் நினைவு கூர்ந்தாய். விமர்சன ரீதியாக சமூகத்தை பார்க்கவும், படித்துப் புரியவும் புத்தகங்களை தந்துதவிய உன் தந்தை உள்ளடங்கலாக, மனிதர்களை பாராட்டிப் பேசுவாய். ''இந்தியாவுக்கு போயிற்று வரப்போறன்டாப்பா, அப்பாவும் வந்து நிக்கிறார், இனி எப்ப பார்ப்பனோ தெரியாது, அவரை பார்க்கணும் போல இருக்கடா, ஏனென்று தெரியல்ல, என்னை இப்படி ஒரு மனிதனாக உருவாக்கினதிலே அவருக்கும் ஒரு பாத்திரம் இருக்கு, அவர் ஒரு உயர்ந்த எண்ணங்கள் கொண்ட மனிதன், அவரின் நல்ல குணாதிசயங்கள் என்னை சிறுவயதில் பாதித்திருக்கிறது. அதன் தாக்கம் தான் என்னை மார்க்சியத்தை நோக்கி தள்ளியது'' என உணர்ச்சி ததும்ப, சிக்கலான ஏதோவொன்றை ஆழமாக உணர்ந்துவிட்ட மனிதன் போல் கூறினாய்.

ஒரு கலையம்சமும், அழகியலும் நிறைந்த ஒரு அற்புதமான இதயமல்லவா நீ, எமது பழைய கலாச்சாரத்தின் வேர்களை அறியவும், அனைத்து முக்கிய கோவில்களின் பிரமாண்டமான கலையழகையும், கட்டடக் கலையையும் பெற்றோர், மனைவி, பிள்ளைகளுடன் பார்த்துக் களித்தாய். அது பற்றிய நீண்ட நேரம் கதைத்தாய். வீடியோ படங்களில் அதைப்பார்க்கும்போது, நீ எவ்வளவு குதூகலமான மனிதனாக அதை அனுபவிக்கிறாய், தெரிந்து கொள்கிறாய், நீ விளங்கியதை மற்றவர்களுக்கு சொல்கிறாய், அவர்களிடம் இருந்து பல விடயங்களை அறிகிறாய்..

இப்படி உனக்குள் குதூகலமும், நகைச்சுவையுணர்வும் குடிவந்துவிட்டால், உன் ஆன்மாவின் பிரகாசத்தை அளப்பதற்கு எந்த அளவுகோலும் கிடையாது. எப்படித் துடிப்பாய், ''அட, உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் இந்த கலையழகையும், வாழ்வின் சுகானுபங்களையும் அனுபவிக்கனும்டா, அப்போதுதான் வாழ்வின் மகத்துவம் புரியம்'' என கூறிக்கொண்டே எமக்கு அங்கு எடுத்த படங்களை காட்டினாய், அதுபற்றி கதைகதையாய் சொன்னாய்.

தஞ்ஞாவூர் பெரிய கோவில் பற்றி சொல்லும்போது, ''இராஜராச சோழனின் பெருமை அவனின் செல்வத்தின் செருக்கு எல்லாமே இதில் மிளர்கிறது பார். இதன் வரலாற்றினை நாம் தொழிலாள வர்க்கத்திற்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இவைகளை எல்லாம்

நாம் ஆழமாக கற்க வேண்டும்'' என நீ கூறியபோது, இதை அதிகமாக போற்றுவதால் இந்துக் கலாச்சாரவாதிகளாக, மதவாதிகளாக சிலர் நினைக்கக் கூடும் என்ற பயம் ஒன்றிருக்கிறது, இல்லையா என வினவியபோது, எமக்குள் எழுந்த விவாதம் இருக்கிறதே, அது அனைத்துலக் குழுவின் முன்னோக்கினால் மட்டும்தான் புரியவைக்க முடிந்தது.

நாம் ஒரு மாவோயிஸ்ட்டாகவோ, ஸ்ராலினிஸ்ட்டாகவோ இருந்திருந்தால், இந்த மனிதக் கலாச்சார விழுமியங்களையும், அற்புதங்களையும் காட்டுமிராண்டித்தனத்தின், பிற்போக்குத்தனத்தின் வடிவங்கள் என வரட்டுத்தனமாக கூறிவிட்டு இருந்திருப்போம். நாம் வரலாற்று, இயங்கியல் பொருள்முதல்வாதிகள் ஆகையால் தான் எம்மால், 'இவைகளை எல்லாம் மனித குலத்தின் சொத்தாக நினைத்து அனுபவிக்கவும், இரசிக்கவும் பெருமைப்படவும் முடிகிறது'' என்றாய்...

இத்துடன் நிற்காது, நீ பார்த்த, பேட்டிகண்ட, பேசிய மனிதர்களின்பால் நீ காட்டும் அக்கறையுணர்வும், தெளிவான பேச்சும் அவர்களை உன்பால் திருப்புகிறது. உழைக்கும் மனிதர்கள் மீதான உனது ஈடுபாடும், அவர்களின் விடிவு பற்றிய உனது எண்ணங்களும் எவ்வளவு உண்மையானது... சாதிக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மதுரையிலுள்ள பாப்பாபட்டி கிராமத்திற்கு சென்று நீ பாதிக்கப்பட்ட மனிதர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறாய், அவர்கள் தரும் உணவை சாப்பிடுகிறாய், அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனை பற்றி கலந்துரையாடி, அந்த மனிதர்களின் துயரங்களில் பகிர்ந்துகொண்டாய்.

நீ வாழ்வை அனுபவித்தாய், அழகிய கவிதைகள் வடித்தாய், காலம் பூரா எல்லோரையும் காதலித்தாய், பிள்ளைகளை சிறந்த மனிதர்களாக உருவாக்க ஒவ்வொரு சின்ன சின்ன விடயங்களிலும் கவனம் செலுத்தினாய், அதில் இருந்து நிறைந்த படிப்பினைகளை எடுத்ததுடன், எமக்கும் கற்றுத்தந்தாய். தோழனே, உன் உணர்வால், உன் சூட்டில் நாம் வளர்ந்தோம். எம் மூளைகளின் செல்கள் விரிந்தன.. தோழனே உன்னை இழந்தது பேரிழப்பு.

அற்புதமான வழிகாட்டியை, மாபெரும் மனிதனை, மாபெரும் தோழனை, மாபெரும் இதயத்தை நாம் பறிகொடுத்தோம் ஒரு விடியல் பொழுதில்.... அழுது கொண்டிருப்பதை கண்டால் உனக்குப் பிடிக்காது, கடிந்துகொள்வாய், அழப்பிறந்தவர்கள் புரட்சி செய்யமுடியாது, நாம் ஆழப்பிறந்தவர்கள். அழுது புலம்பிக் கொண்டிருப்பவர்களல்ல, பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியை படைக்க வரலாற்றினால் தேர்வு செய்யப்பட்டவர்கள், மாபெரும் புரட்சியின் மாபெரும் கலைஞர்கள் நாம், இழப்புகளிலும், தோல்விகளிலும், வெற்றிகளிலும் இருந்து அனுபவங்களை திரட்டிக்கொண்டு. மானிட விடிவுநோக்கி முன்னேற வேண்டும், அதுதான் புரட்சியாளனின் கடமை... ஒரு தடவை ஏதொவொரு துயரத்தில் நான் இருந்தபோது, நீ இதைக் கூறினாய்.

தோழா, உன்னை நினைக்கையில், உனது பலம், கருணை, அறிவு, உறுதி, நேசம், பேரவா, இதயம், தத்துவம், கொள்கைப்பிடிப்பு என்பன எமக்கு நீ அளித்த கொடை.

www.padippakam.com

உனது ஆன்ம அனுபவங்கள் அனைத்தையும் எம்மகத்தே கொண்டு, நாம் எழுவோம், பலமாக... முதலாளித்துவத்தின் தலையில் பேரிடி விழ....

போய் வா, தோழனே. உனது மாபெரும் அனுபவங்கள் எமக்கு வழிகாட்டும், எம் ஒவ்வொரு வெற்றிகளிலும் நீ சுடர் விட்டு ஒளிர்வாய்....

உனக்கு என் புரட்சிகர வணக்கங்கள்!

*துறைவன்*

## செந்தில் நீ ஒரு சிந்தனைச் சிற்பியடா

ஓர் ஆண்டு ஆனால் என்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆனால் என்ன
உன் நினைவுகள் எம்மை விட்டு நீங்காதடா
உன்னோடு ஒட்டி உறவாடியதைச் சொல்வதா
சின்ன வயதில் நாம் செய்திட்ட குறும்பை சொல்வதா
உன் வாழ்வியலை சொல்வதா,
எதைச்சொல்வது என எனக்கே தெரியவில்லை
இருந்தும் சொல்கிறேன்
தொட்டிலில் இருந்து இறுதியாய் நீ பிரியும் வரை
தொடர்ந்ததடா எம் அன்பு.
அன்பை ஆராதிக்கும், அழகை இரசிக்கும்
செந்தில் நீ ஒரு சிந்தனைச் சிற்பியடா
செயல் வீரனடா
அழகில் ஒரு முருகனடா
சிகையலங்காரம் செய்து
சித்திரத் தேராக அலங்கரித்து
தூக்கித்திருந்தோமடா
வெட்ட வெளியில்
வெளிர்ந்த வானத்தைக்காட்டி
கறுத்தப் பேயடா கவனமடா செந்தில்
சொல்லி முடிவதற்குள் சொல்லாமல் அழுவாயடா
பின் அடுத்த நிமிடத்தில் பேயில்லை,
நீதான் பேய் என்பாய்



படிப்பகம்

www.padippakam.com

எல்லாமே என் மனத்திரையில் நிழற்படமாய் நிற்கிறது
ஆனால் நீயோ இன்றில்லை அதைச் சொல்லி சிரிப்பதற்கு
புரட்சி என்றால் புரியாத புதிர் என்று நீ சொன்னதே கிடையாது
புரியாதவர்க்கும் புரியும்படி நீ புகட்டிடுவாய்
அன்று உன்விடலைப் பருவத்தில்
ஈரோசில் இணைந்து உன் இலட்சியத்தை ஏற்றி நின்றாய்
அதன் போராட்ட இலட்சியங்கள் குறுகிப்போய், அது பொறிந்துபோக
விஞ்ஞான தத்துவ மார்க்சிய மரபியத்தின் தொடர்ச்சியை பேணிய
நான்காம் அகிலத்தை இன்று பின்தொடர்ந்தாய்...
நீ விழித்திட்ட நாள் முதலாய் உன் இறுதிக்கணம் வரை
அநீதி, சமத்துவமின்மை, சுரண்டல்
எல்லா ஒடுக்குமுறைகளில் இருந்தும் மானிடம் விடிவு பெற
ஒரு யுகப்புரட்சி நோக்கியே எப்போதும் உன் பயணம் இருந்தது.
காசு எதற்கு காசு இல்லா நிலைவேண்டுமென்பாய்
முதலாளி வர்க்கத்தை முடக்கிட வேண்டுமென்பாய்
உன் வார்த்தையே இன்று முடங்கி விட்டதடா
சின்னச் செந்தில்
சிதறிவிட்டான் என்ற செய்தி கேட்டு
எம் சிரசு வெடித்ததடா
எவர்க்கும் சொல்லாமல் ஓடி மறைந்து விட்டாயா?
பிரான்சுப் பயணத்தில் பிரளயம் வந்ததோ
கார் ஓடா அது- கார் இருள் ஓடா
காலன் வந்து உன்னை கடத்திவிட்டான்
உனக்கோ கடல் மூளையடா
கண்டது கனவென்று கண் திறந்து பார்க்கிறோம்
நிலைத்துவிட்ட உனதன்பால் நினைவிழக்க முடியாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்
எமது கண்ணீர் பூர்க்களை காணிக்கையாக்குகின்றோம்
உன் நினைவுகளுக்கு.

***என்று உன் நினைவுகளோடு வாழும்***
***மோகன் மைத்துனர் குடும்பத்தினர், கனடா.***


படிப்பகம்

www.padippakam.com

# சோசலிசத்திற்காக தோழர் செந்தில் நடத்திய உணர்வு பூர்வமான போராட்டத்தை கௌரவிப்போம்

கடந்த வருடம் இந்த மாதம் நான் லண்டனில் தோழர் செந்தில், தயான் மற்றும் துறைவனை சந்தித்தேன். இந்தியாவில் ட்ரொட்ஸ்கிச கட்சியை கட்டுவது தொடர்பான அரசியல் மற்றும் அமைப்பு ரீதியான பிரச்சினைகள்பற்றி அறிந்து கொள்வதில் அவர் ஆர்வம் காட்டினார்.

செந்தில் இந்தியாவிற்கு முன்பும் பல தடவைகள் பிரயானம் செய்திருந்தார். இருப்பினும் அவர் மீண்டும் இந்தியாவிற்கு வந்து சிலகாலம் தங்கி, இந்தியாவில் ட்ரொஸ்கிச கட்சியை கட்டுவதற்கு உதவி செய்ய விரும்பினார். அவருக்குள் சர்வதேச சோசலிச இயக்கத்தைக் கட்டுவதற்கு இருந்த பேரார்வத்தை இதன் மூலம் என்னால் காண முடிந்தது.

இந்த ஆர்வமானது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலகப் புரட்சிகர முன்னோக்கு பற்றிய அவரது முழுமையான விளக்கம் மற்றும் உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

ஹரோவில், தென்னிந்திய உணவகத்தில், இரண்டு மணி நேர கலந்துரையாடலுக்குப் பின்னர் அடுத்த நாள் அவர் பாரிசிற்கு சென்றார். இந்திய அரசியல் வேலை மற்றும் உலக சோசலிச வலைத் தளத்தின் தமிழ்ப் பக்கத்திற்கான வேலைகள் தொடர்பாகவும், மேலும் பேசுவதற்கு பாரிசில் வாழும் மற்றுமொரு தோழரான செழியனுடன் மீண்டும் வந்து என்னைப் பார்ப்பதாக கூறிச் சென்றார்.

தோழர் செந்திலுடனும் ஏனைய தோழர்களுடனும் ஒரு விரிவான விவாதங்களுக்காக நான் காத்திருந்த சமயத்தில், செந்திலின் மரணம் பற்றிய, சற்றும் எதிர்பார்க்காத துயரமான அந்த செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சர்வதேச மார்க்சிச காரியாளரை வளர்த்தெடுப்பது தொடர்பான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் மற்றும் தத்துவார்த்த நோக்குநிலையின் முக்கியத்துவத்தை அவர் மிகத் தெளிவாக புரிந்திருந்தார்.

தோழர் செந்திலின் நினைவுக்கு மரியாதை செலுத்துகையில், அவரது பூர்த்தி செய்யப்படாத புரட்சிகர இலக்கை அடைய நாம் கஸ்டப்பட்டு முயற்சி செய்வோம்.

தோழர் செந்தலின் நினைவு நீடுழி வாழட்டும்.

*தோழமையுடன்,*
*அருன்குமார் (இந்தியா)*



படிப்பகம்

www.padippakam.com

# ABOUT UNCLE SENTHIL

Short version

I know uncle Senthil from 2000 in France. About uncle Senthil he was one of the coolest people. I met and very kind, when I see him he tells me joke and he has a smiling face all the time. his character is positive because he talks to any kind of people gently and not selfish he shares things with other people, the main thing is he like to make unhappy people very happy and make them smile and talk.

Uncle Senthil has interests in political and activities before and now that never changes he loved his children a lot and he and his wife cared a lot for their education.

In England when I saw his children Turphin and Ajann they all grown up and uncle Senthil was completely changed I am saying that because I didn't saw him
for a long time after 2002 then I just saw him 3 years after!

In January 2006 he had a baby born in that time he was really happy because I seen it by his smile, reaction, and in his eyes and he named his child Leon, uncle Senthil loves to read books a lot but not only books world news as well he like to explore things and learn things more and more…

He likes to communicate with people, I have lots of memories of him that he was the one who dropped me to school for the first time in England and there is more…

In 2006 me, my cousins and him went to France for a Marriage. On the way to France he made us laugh a lot with his jokes and then I started to make jokes and he really liked it and he said that I was really funny and he liked this trip. This trip I will never forget in my life!

In 2007 the last time I saw him it was a Sunday afternoon, the last three words he said to are: Good bye Thillip, after the meeting I am going straight to France then see you later bye!

28th February 2007, in the morning when I heard that he died I didn't know what to do and very shocked and I didn't know what to say to his 3 little children. Uncle Senthil had so many dreams for his children's future but, He passed away very quickly!

***Thillip***



படிப்பகம்

www.padippakam.com

## நீயிட்ட ஓர் வித்தின் உளமார்ந்த வாழ்த்துக்கள்

புவிப்பரப்பில் பூர்சுவாப் புரட்சி பிந்திப்போன
ஓர்நாட்டின் பாட்டாளி வர்க்கத்தினை
ஓட்ட.. ண்டியாக்கிட எத்தர்கள் முனைந்தபோது
பலமான அறைகூவலாய் எழுந்துவந்த
**தொழிலாளர் பாதையே**
உன்னை ஏடேற்றிய ஓரேயொருவன்
**இராஜேந்திரன்** என்பதை-உன்
ஏடொவ்வொன்றும் எனக்கு அறைந்திடும்.
நாழும் நாடேறிவந்த நின் போராட்டம் - இன்று
பூகோளப்பரப்பில் மேலேற-
இணையத் தளம் உன்னையல்லவா
இன்னும் உறிஞ்சிப் பருத்து கிளை பரப்புகிறது,
அழிக்கப்பட்ட மாபெரும் மனித கலாச்சாரத்திற்கு
ஆஞ்சநேயராய் நோய்நீக்கும் ஔடதம் தந்த நீயல்லவா - அருஞ்
சிரஞ்சீவி!
ஒன்றல்ல இரு தலைமுறை காலத்தில் ஓர்நாளும் சளையாது
முறுக்கேறிய நரம்பு மண்டலத்துடன்
விறுக்கென்று வீறுநடை போட்டவனே!
ஈடேறும் மனிதகுலம் என்றென்றைக்குமாய் தன் வரலாற்று ஏட்டில்



படிப்பகம்

www.padippakam.com

உனை நிச்சயம் பொறித்துக்கொள்ளும்!!

மட்டற்ற மன உறுதியுடன்

கட்டற்று நீ உழைத்து வித்திட்ட ஒவ்வொன்றும்

வீணாகவில்லையென்றும், கட்டுடன்-

கண்ணியமாய் வளர்வதை கண்கண்டு

களிப்புற்று இருந்திட - நீயிட்ட ஓர் வித்தின்

உளமார்ந்த வாழ்த்துக்கள்.

தோழமையுடன்,

***Senthil.நன்றி***



படிப்பகம்

www.padippakam.com

# நன்றி

''நல்லாரை காண்பதுவும் நன்றே - நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று''

வாழ்நாளில் ஒரு நாளவது வீணாக்காமல் மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவன், வன்முறையின்றி நன்முறையாக சமதளத் தரணியாக மலர்வதற்கு அனைத்து மக்களிடமும் அறிவில், சமவாய்ப்பு எற்பட வேண்டுமென தன்னாலான செயற்பாட்டை தரணிபெற செய்த புனிதன் செந்திலின் இயற்கை இணைவின் போது அகிலம் எங்கணும் இருந்து நேரில் வந்து அவர் முகம் பார்த்து அன்பு மழை பொழிந்த அனைவருக்கும், அகிலம் எங்கணும் உள்ளத்தால் உள்ளன்பு செலுத்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும், தேனினும் இனிய செந்திலின் இன்முக இளமுறுவல் நன்றிகள் அளப்பல.

சொந்தங்களே! தோழமைகளே! அனைத்துலக அன்புச் சுடராக உங்கள் உள்ளங்களில் மங்காத மாணிக்கமாக ஒருபோதும் பிரியாத பகலவனாய் பாரெங்கும் பவனி வருகின்றான் ரவி. உழைக்கும் உலக மாந்தர் உறு பசியாலும் ஓயா நோயாலும் வாடி மண்ணுடன் கலந்து கொள்ளுகின்றனர். அவர்களின் உழைப்பை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழும் சிறு எண்ணிக்கையுடைய முதலாளி வர்க்கம் தம்மை பாதுகாத்துக் கொள்ள தமக்கிசைவான அரசை ஏற்படுத்தி, இலாபநோக்கு உற்பத்தி தனிச்சொத்துடமையை பேணவதற்காக, மனிதத்தை யுத்தத்திற்குள் மூழ்கடிக்கும் ஒரு நிலைமையில், ரவியின் கோட்பாடும், கொள்கையும் வாழ்க!



படிப்பகம்

www.padippakam.com

## சென்று வா தோழனே!

ஆற அமர இருந்து உன்னை அசைபோட்டு
உன்னிடம் இருந்து அந்த யுகப் புரட்சியின் அடங்கா தாகத்தினை,
எங்கள் பாட்டன்களின் முப்பாட்டன்களின் அந்த பேரவாவை,
அந்த ஆன்ம பலத்தை எடுக்க நித்தம் தவம் செய்கிறோம்....
வெல்வோம், வெல்வோம்...பிரபஞ்சத்தையும் வெல்வோம்
என்ற அடங்காத செருக்கில்
உள்ளம் திகழ எங்கள் சர்வதேச கீதம் இசைப்போம்..
உலகம் மனித இனத்தின் சொத்தாகும்...
எங்கள் பாட்டன்களின், முப்பாட்டன்களின் ஆசைப்படி,
உன் ஆசைப்படி பிரபஞ்சத்தையும் வெற்றிகொள்ள வீறுநடை போடுவோம்.
திசைகள் எங்கணும் பாட்டாளிகளின் புரட்சியின் கீதம் பாடப்படும் கணம்,
உன்னை அதில் இருத்தி கௌரவிப்போம்.
அதற்கு முன் இறந்து விடினும், புரட்சியின் சந்ததி உன்னை கொண்டாடும்.
சென்று வா தோழனே, எம்மை வழி நடத்திய குருவே.
இதை நாம் வெற்று உணர்ச்சியில் கூறவில்லை,
உன் இதயம் எம்மை நெருங்கியபோது,
உன் ஆன்மா எம்மை அரவணைத்தபோது,
தாயின் சூட்டினை நாடிடும்,
தாயின் நெருக்கத்தை விரும்பிடும் குஞ்சுகளாய்
உன் வழிகாட்டலுக்காய், உன் அறிவின் சூட்டிற்காய்
நாம் உன்னை நெருங்கியதை, நித்தம் உன்னைச் சார்ந்து வாழ்ந்ததை
எம் நெஞ்சம் அறியும்.
உன் அறிவின் சூடு எம் உயிரினை அரவணைத்து
எம் மூளையின் செல்களில் இரத்தம் பாய்ச்சியதே,
அப்போது நீ எங்கள் குருவாகிவிட்டாய்.
சென்றுவா குருவே,
"நானும் பரசுராமரின் மாணவன் தான்"
என பீஸ்மருக்கு கர்ணனன் கர்வத்துடன் பெருமையுடன்
அறிவுறுத்தியதுபோல்,
"நான் அரிஸ்டாடில் மாணவன்"
என அடங்கா கர்வத்துடன் அலெக்ஸான்டர் பெருமைப்பட்டதுபோல்
"நான் பிளெக்கானனோவின் மாணவன்"
என லெனின் கர்வத்துடன் பெருமைப்பட்டதுபோல்,
"நான் மாபெரும் லெனினின் மாணவன்" என
கர்வத்துடன் ட்ரொட்ஸ்கி பெருமைப்பட்டதுபோல்,
"நான் கீலியின் மாணவன்" என நோர்த் கர்வத்துடன்
பெருமைப்பட்டதுபோல்,
"நான் ஸ்ரீவ்-ஞானாவின் மாணவன்" என நீ கர்வத்துடன்
பெருமைப்பட்டதுபோல்
"நான் தான் மாபெரும் வீரன் அகிலெஸ்" என ரொஜான் யுத்தத்தில்
"கடல் தேவதையின் மகன்" அகிலஸ்
கர்வத்துடன் கர்ஜித்தது போல்,
"நாம் செந்திலின் மாணவர்கள்"
என்பதையிட்டு ஆர்ப்பரிக்கும் அடங்கா கர்வத்துடன் பெருமைப்படுகிறோம்.

உனக்கு எம் புரட்சிகர வணக்கங்கள்.

***இளம் தோழர்கள்***



படிப்பகம்

# செந்தில் குடும்ப வம்சாவளி






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



மனிதனே, பிரபஞ்சத்தின் கட்டுப்பாட்டாளன் - Diego Rivera, 1934

தொடர்புகளுக்கு :
E-mail : balasooria@gmail.com
Tél. : 06 19 85 55 07
http://www.wsws.org/tamil/

படிப்பகம்